2013, October 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

வடமாகாண அரசியல் ஸ்பெஷல்



## வட மாகாண சபை எதிர்நோக்கப்போகும் சவால்கள்


- விக்னேஸ்வரனின் பதவிப்பிரமாணம் குறித்து கிளம்பும் விமர்சனங்கள்
- இரு தேசியவாதங்களின் மோதல்
- வட மாகாண அரசியலும் முஸ்லிம் காங்கிரஸும்



## கூட்டமைப்பின் வெற்றியை ஜெயலலிதா ஏன் வாழ்த்தவில்லை?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயத்தை அடிப்படையாக கொண்ட மரியாதையை விட அருவருப்பானது வேறு எதுவும் இல்லை

- அல்பேர்ட் கெமஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலம்
2013, ஒக்டோபர் 01 - 15
பக்கங்கள் - 68




48
பரந்த விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய இரு களங்கள்
- பாக்கியசோதி சரவணமுத்து

18
கூட்டமைப்பின் வெற்றி வேண்டி நிற்கும் விடைகள்
- என்.சத்தியமூர்த்தி

28 இனிமேல் முன்நோக்கி பயணிப்பது எப்படி?
- பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க

24 இரு தேசியவாதங்களின் மோதல்
- கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ

41 இலங்கை எத்தனையாக பிளவுபட்டு வாழ்கிறது?
- குசல் பெரேரா



11
விட்டுக்கொடுப்பு உணர்வு மேலோங்கி நிலைபெறட்டும்
- கலாநிதி ஜெஹான் பெரேரா

14 வடமாகாண சபை எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்
- குமார் டேவிட்



56
மோடிக்கு வக்காலத்து வாங்கிய கருணாநிதி
- முத்தையா காசிநாதன்



51
இடர்பாட்டுக்குள்ளாகி இருக்கும் இந்தியக் கருத்துருவம்
- குல்திப் நாயர்



32
வட மாகாண அரசியலும் முஸ்லிம் காங்கிரஸும்
- ஏ.பீர்முகமது

38 மாகாணசபை தேர்தல்களுக்கு பின்னரான அரசியல் நிலக்காட்சி
- ஹரிம் பீரிஸ்


45 மீள் எழுச்சி பெற்ற ஒரு சமூகத்தின் பிரகடனம்
- பி.பி.தேவராஜ்

34 இவர்கள் என்ன சொல்கிறார்கள்?



59
சீவல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிகளும் சவால்களும்
- அகல்யா, அகிலன் கதிர்காமர்

54 காந்தியின் இந்து மதம்
- அ.மார்க்ஸ்



66
கடைசிப் பக்கம்
தேவி பரமலிங்கம்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# விக்னேஸ்வரனின் பதவிப்பிரமாணம்

வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்தது தொடர்பாக பலவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவரது பதவிப் பிரமாணத்தின் பொருத்தப்பாடு குறித்து கேள்வியெழுப்பி முன்வைக்கப்படுகின்ற விமர்சனம் வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய பிரமிக்கத்தக்க ஆணை தேசிய இனப்பிரச்சினையில் அரசாங்கம் கடைப்பிடித்துவருகின்ற அணுகுமுறைகளுக்கு எதிரான உணர்வின் அடிப்படையிலானது என்ற நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. இதுவிடயத்தில் இருக்கக்கூடிய முரண்நிலையைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு விக்னேஸ்வரன் அவர்கள் அறிவும் அனுபவமும் இல்லாதவருமல்ல. தமிழ் மக்கள் தன்னிடமும் தன்னுடன் சேர்ந்து தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடமும் எதிர்பார்க்கின்ற பணிகளின் கனதியை விக்னேஸ்வரன் புரிந்து கொண்டிருப்பார் என்று நம்புகின்றோம்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக ஒருபோதும் அமையப் போவதில்லை என்று உறுதியாகக் கூறிக்கொண்டுவந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாகாணசபைத்தேர்தல்கள் நடத்தப்படுகின்றபோது அவற்றில் போட்டியிடாமல் இருக்கத் தீர்மானிப்பதில்லை. கடந்த வருடம் நடைபெற்ற கிழ க்கு மாகாண சபைத் தேர்தலில் அவர்கள் போட்டியிட்டார்கள். வடமாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிட்டு எதிர்பார்த்திராத வகையிலான வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள். போரின் முடிவுக்குப் பின் னரான சூழ்நிலைகளின் கீழ் தங்களது அரசியல் செயன்முறைகளை முன்னெடுப்பதில் எத்தகைய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கும் திடமுடிவற்ற போக்கிற்கு இது ஒரு உதாரணமாகும். இந்தப் போக்கிற்கு அவர்களை முற்றுமுழுதாக குறைகூறவும் முடியாது. இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களின் பின்புலத்திலேயே அவர்கள் தங்க ளது தந்திரோபாயங்களை வகுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதை மறுப்பதற்கில்லை.

13ஆவது திருத்தத்தை நிராகரித்த நிலையில் இருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று அரசியல் இணக்கத் தீர்வொன்றை நோக்கிய நகர்வுகளைச் செய்வதற்கான ஒரு ஆரம்பத்தளமாக மாகாண சபையைப் பயன்படுத்துவதற்குத் தயாராகியிருக்கின்ற நிலைக்கு வந்திருக்கிறது. இந்த அணுகுமுறையை தமிழ் மக்கள் கொஞ்சமேனும் ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், தேர்தலில் கூட்டமைப்புக்கு இந்தளவு பிரமாண்டமான வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முன்வந்திருக்கமாட்டார்கள். இத்தகைய நகர்வுகளைச் செய்யும்போது கடந்த காலப் போராட்டங்களினதும் அரசியல் அணுகுமுறைகளினதும் அனுபவங்களிலிருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டு செயற்படவேண்டியிருக்கிறது. இவ்வாறு செயற்படுவதென்பதும் சொல்வதைப் போன்று சுலபமானதல்ல. அதன் காரணத்தினால் தான், திடமுடிவற்ற போக்குகள் தலைதூக்குகின்றன.

ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட பின்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கையொன்றில் 'இலங்கையின் பல்வேறு சமூகங்களின் மனங்களிலும் ஊடுருவியுள்ள சந்தேகங்களையும் தப்பபிப்பிராயங்களையும் நீக்க வேண்டியது காலத்தின் தேவையென்றும் ஐக்கிய இலங்கையொன்றிற்குள் எமது வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எமக்கிருக்கும் விருப்பத்தை சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்தும் ஒரு அடையாளபூர்வச் செயற்பாடாகவே நாட்டு ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யத் தீர்மானித்ததாகவும்' குறிப்பிட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

விக்னேஸ்வரன் தலைமையிலான வடமாகாணசபை நாட்டுப் பிரிவினைக்கு வழிவகுக்குமென்று தென்னிலங்கையில் சிங்கள - பௌத்த பேரினவாதச் சக்திகள் தீவிரபிரசாரத்தில் இறங்கியிருக்கின்ற வேளையில், சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகங்கள் மேலும் வலுப்படுவதற்கான சூழ்நிலை உருவாவதைத் தடுக்க வேண்டுமென்பதில் முதலமைச்சர் அக்கறை கொண்டிருக்கிறார் என்பதை அவரின் இந்த அறிக்கை உணர்த்தி நிற்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் பயனுறுதியுடைய அரசியல் இணக்கத் தீர்வைக் காண்பதற்கு தமிழ் மக்களுக்கு உதவக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளின் நம்பிக்கையை வென்றெடுக்கும் நோக்கம் கொண்டதாகவும் விக்னேஸ்வரனின் கருத்துகள் அமைந்திருக்கின்றன.

புதிய மாகாணசபை முன்னெடுக்கக்கூடிய பணிகளுக்கு இடையூறாக அமையக்கூடிய அணுகுமுறைகளை அரசு இயந்திரம் கடைப்பிடிக்காதிருப்பதை உறுதி செய்ய வேண்டிய சிலவகைத் தந்திரோபாயங்களையும் கையாள வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இருக்கிறது. இதை சரிவரப் புரிந்து கொண்டால் அவரின் பதவிப் பிரமாணம் தொடர்பிலான பெருமளவு விமர்சனங்களுக்கு இடம் இருந்திருக்காது. தனது அணுகுமுறைகள் தொடர்பில் ஆரம்பத்தில் வருகின்ற விமர்சனங்களைப் பொய்யாக்கி, தனது உண்மையான நோக்கமெல்லாம் தமிழ் மக்களின் எதிர்கால நலன்களையும் நல்வாழ்வையும் மனதிற்கொண்டவையே என்பதை நாளடைவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் நிரூபிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படக்கூடிய எந்தவொரு அரசியல் செயன்முறையும் அந்த மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிராகரிக்கின்ற சக்திகளை தென்னிலங்கையில் வலுப்படுத்துவதாக அமையக்கூடாது என்பதை தமிழ் அரசியல் சக்திகளில் கணிசமானவை இன்னும் உணராமல் இருப்பது அல்லது உணர மறுப்பது பெரும் துரதிர்ஷ்டவசமானது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# கடிதங்கள்

## சீமானின் திருமணமும் அவரது அரசியலும்...

தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்யும் தமிழக அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கை கூட ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கவனத்துக்குரியதாகவே இருந்துள்ளது. ஏனெனில், தனிப்பட்ட வாழ்விலும் கூட அவர்களுடைய செயற்பாடுகள் ஏதோ ஒருவகையில் ஈழப் பிரச்சினையைச் சம்பந்தப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றது. அந்த வகையில்தான் நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமானின் திருமண நிகழ்வும் ஊடகங்களின் கவனத்துக்குரியதாக இருந்தது.

ஈழத் தமிழ்ப் பெண் ஒருவரையே திருமணம் செய்யப்போவதாக அண்மைக் காலம் வரையில் கூறிவந்த சீமான், பின்னர் திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவராகவிருந்த காளிமுத்துவின் மகளைத் திருமணம் செய்துகொண்டிருக்கின்றார். இருந்தபோதிலும், திருமண நிகழ்வு ஏதோ ஒருவகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வாழ்வையும் நினைவுகூரும் வகையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஈழத் தமிழ்ப் பெண் ஒருவரை திருமணம் செய்யாவிட்டாலும், இதன் மூலம் அதனை அவர் ஈடுசெய்திருக்கின்றார் என்று சொல்வோமே.

இந்தத் திருமண நிகழ்வு குறித்து 'சீமான் திருமணமும் சிறகடித்த அரசியலும்' என்ற தலைப்பில் காசிநாதன் எழுதியுள்ள கட்டுரை கடந்த சமகாலம் இதழில் சிறப்பானதாக அமைந்திருந்தது. திருமண நிகழ்வை ஒரு நேர்முக வர்ணனை போல அவர் தந்திருப்பது வாசிக்க சுவாரஸ்யமிக்கதாக இருந்தது. அங்கு இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளையும் சுவைபட அவர் தந்திருக்கின்றார். முக்கியமான படங்களும் இடம்பெற்றிருப்பது கட்டுரையை மேலும் சிறப்பாக்கியிருக்கின்றது. சமகாலத்தில் இது போன்ற கட்டுரைகளைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம்.

எம்.தர்மலிங்கம், தெஹிவளை.

## சாந்தி சச்சிதானந்தம் புரிந்துகொள்ள வேண்டியது

கடந்த சமகாலம் இதழில் சாந்தி சச்சிதானந்தம் எழுதிய கட்டுரையில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியதாகக் கூறியுள்ளார். வடக்கில் உள்ள சிவில் சமூகக் குழுவும் எதிர்ப்பைக் காட்டியதாகக் கூறும் இவர், அவர்கள் யார் என்பது தொடர்பில் எந்த விபரங்களையும் வெளியிடவில்லை. ஏனெனில் தமிழரின் போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக சிவில் சமூகக்குழு புத்திஜீவிகள் என்ற பேரில் வெளிக்கிளம்பிய போலிகளைத்தான் இவர் வடக்கின் சிவில் சமூகக் குழுவென அடையாளப்படுத்துகிறார் என்று நினைக்கிறேன்.

ஏனென்றால் தமிழ் மக்களால் குறிப்பாக

## சீமானின் திருமணம்

ஈழத் தமிழரின் உரிமைகளுக்காக உண்மையான உணர்வுடன் தமிழகத்தில் போராடிவரும் அண்ணன் சீமானின் திருமணத்தில் கலந்துகொள்ள முடியவில்லையே என்ற ஏக்கத்தை காசிநாதனின் கட்டுரை போக்கியுள்ளது. சீமானின் திருமணம் தொடர்பான தகவல்கள் அதில் நேரில் கலந்துகொண்ட உணர்வை ஏற்படுத்தின. நன்றி காசிநாதன்.

எஸ்.சிறீதரன், யாழ்ப்பாணம்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிவில் சமூகக் குழுவிற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையே வழிநடத்தக் கூடிய பலமுண்டு. அந்த வகையில் இவர் குறிப்பிடுவதைப் போல் தேர்தல் விஞ்ஞாபனத்தை வடக்கின் சிவில் சமூக குழு எதிர்த்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையை விடவும் அதிக ஆதரவை வடக்கு மக்கள் ஒருபோதும் வழங்கியிருக்கமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்.நம்பீசன், திருநெல்வேலி.

## மெயிலும் டயறியும்

சமகாலத்தில் வெளிவரும் ஆக்கங்களில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் நிலைவரங்கள் பற்றிய கட்டுரைகள் எப்பொழுதும் தனிச் சிறப்பம்சங்களைக் கொண்டவையாகவே இருந்திருக்கின்றன. அந்த வகையில் கடந்த இதழில் வெளியான 'மோடி விவகாரத்தில் முடிவெடுக்க முடியாமல் தடுமாறும் திராவிடக் கட்சிகள்' எனும் தலைப்பில் முத்தையா காசிநாதன் எழுதிய சென்னை மெயிலும், 'மோடியை எதிர்த்து நிற்க ராகுல் துணிச்சல் கொள்வாரா?' எனும் தலைப்பில் எம்.பி. வித்தியாதரன் எழுதிய டில்லிடயறியும் அர்த்தங்கள் பொதிந்தவையாக அமைந்திருந்ததுடன் மட்டுமல்லாது, இந்தியா சந்திக்கப் போகும் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் களநிலைவரத்தின் பரபரப்புத் தன்மையையும் யதார்த்த பூர்வமாக வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்திருந்தன.

த.உமாதேவி, சுன்னாகம்.

## நீதிக்காகப் போராடுபவர்கள்

தலிபான்களின் குண்டுகளுக்கு பலியான இந்திய எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி பற்றி ஆதிசேனன் எழுதிய நினைவுப் பரவல் அருமை. இதேபோன்று இலங்கையிலும் உலக நாடுகளிலும் நீதிக்காகப் போராடி உயிர் நீத்த ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் தொடர்பாக தொடர் ஒன்றை சமகாலம் ஆரம்பித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பி.பகீரதன், நிலாவெளி, திருகோணமலை

## துணிச்சலான கருத்து

கடந்த சமகால இதழில் விக்னேஸ்வரன் அப்படி என்னதான் சொல்லிவிட்டார் என்ற தலைப்பில் பேராசிரியர் சி.சிவசேகரம் எழுதிய கட்டுரை மிகவும் காத்திரமான பல கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது. இலங்கையில் வாழுகின்ற தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எவை என்பதை கூறுவதற்கு இலங்கைக்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்கு அருகதை இல்லை என்பதை அவர் துணிச்சலாக கூறியிருக்கிறார். அத்தகைய கட்டுரைகளை தொடர்ந்து பிரசுரியுங்கள்.

வே.நிர்மலன், அச்சுவேலி




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 07
2013, ஒக்டோபர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



ஒரு விவேகமான பதிலிலிருந்து ஒரு முட்டாள் கற்று கொள்வதையும் விட ஒரு முட்டாள் தனமான கேள்வியிலிருந்து விவேகமான மனிதன் கூடுதலான அளவிற்கு கற்றுக்கொள்கிறான்.

- புரூஸ் லீ

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரக்குமூலம்....

வடமாகாண சபைத் தேர்தல் நல்லிணக்கச் செயன்முறைகளுக்கான ஒரு தொடக்கப்புள்ளியாக அமையும் என்று கூறியிருக்கும் அமெரிக்கத் தூதரகம், ஜனநாயகம் என்பது வெறுமனே தேர்தல்கள் மாத்திரம் என்றாகிவிடாது என்றும் குறிப்பிட்டிருக்கிறது. தேர்தல்கள் மாத்திரம் ஜனநாயகம் என்றாகிவிடாது என்ற நேர்மையற்ற கூற்று ஒன்றை முன்னொருபோதுமே நான் கேள்விப்பட்டதில்லை.



பாதுகாப்புச் செயலாளர்
கோத்தாபய ராஜபக்ஷ

ஐக்கியதேசியக்கட்சிக்குள் எந்தப்பிளவும் இல்லை என்பதை உறுதி செய்துகொண்ட பிறகு மாத்திரமே ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் முன்னாள் பிரதமருமான திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க கட்சியை ஐக்கியப்படுத்திய பின்னரே தலைமைப் பதவியைத் துறந்தார். ரணில்விக்கிரமசிங்கவும் அதேபோன்று செய்வார். ஏனென்றால் திருமதிபண்டாரநாயக்கவைப் போன்று அவரும் ஒரு ஆற்றல் மிக்க தலைவர்.



ஐக்கியதேசியக்கட்சி எம்.பி.மங்கள சமரவீர

அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தயாராயிருக்கிறேன். ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்கள் என்னை ஆதரிக்கிறார்கள். ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவதற்கு என்னை முதலில் ஐ.தே.க.வின் தலைவராக நியமிக்க வேண்டும். கட்சியின் முழுமையான ஆதரவு எனக்குத் தேவை. நான் ஜனாதிபதியாவதை மக்கள் விரும்புகிறார்கள்.



ஐ.தே.க.எம்.பி. சஜித் பிரேமதாச

பிரிவினைவாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கையில் வடமாகாணசபை இருப்பது குரங்குக்கூட்டம் ஒன்றிடம் கிரனேட் ஒன்று இருப்பதை ஒத்ததாகும். அதைவெடிக்க வைத்து அவர்கள் தங்களையும் மற்றவர்களையும் காயப்படுத்திக் கொள்வார்கள். கொடூரமான பயங்கரவாதிகளை ஆதரித்ததன் காரணமாக உயிரைப் பலிகொடுத்த அமிர்தலிங்கத்தின் கதியை விடவும் வேறுபட்ட கதி விக்னேஸ்வரனுக்குக் கிடைக்கப்போவதில்லை.



தொழில்நுட்ப, ஆராய்ச்சி
அமைச்சர் சம்பிக்க ரணவக்க

உலகில் உள்ள சுமார் 200 நாடுகளில் 15 தொடக்கம் 20 வரையான நாடுகள் மாத்திரமே பால்மா வகைகளை பயன்படுத்துகின்றன. ஏனைய நாடுகளில் உள்ள மக்கள் உடன்பாலையே குடிக்கிறார்கள். உலகில் உள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளில் எந்தவொன்றுமே பால்மாவகைகளைப் பயன்படுத்துவதில்லை.



சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

குற்றவாளிகளாகக் காணப்படும் எம்.பி.க்களை தகுதியிழக்கச் செய்வதைத் தடுப்பதற்கு அவசரச் சட்டமொன்று கொண்டுவரப்பட்டதை எதிர்த்து நான் கருத்துத் தெரிவித்த போது, எனது வார்த்தைகள் கடுமையானவை என்று தாயார் சொன்னார். ஆனால், எனது கருத்தை வெளிப்படுத்துவதற்கான சகல உரிமையும் எனக்கு இருக்கிறது. நான் இளையவன். எனது வார்த்தைகள் கடுமையானவையாக இருக்கலாம். ஆனால், எனது உணர்வுகள் சரியானவை.



ராகுல்காந்தி

மாகாணசபைத் தேர்தல்களுக்கு இருதினங்கள் முன்னதாக புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான சட்டவிரோத எஸ்.எம்.எஸ்.பிரசாரத்தின் விளைவாகவே வடமாகாண சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மகத்தான வெற்றியை பெறக் கூடியதாக இருந்தது. அது சட்டவிரோதமானதாக இருந்தாலும் மிகவும் வெற்றிகரமான தேர்தல் பிரசாரமாகும். வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஒரு உறுப்பினர் இருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு அவர்கள் தங்கள் குடும்பத்தவர்களுக்கு இலட்சக்கணக்கான எஸ்.எம்.எஸ்களை அனுப்பியதாக எனக்குத் தகவல்கள் கிடைத்தன.




சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு



# ஒபாமாவுக்கு நெருக்கடி

படுமோசமான பொருளாதார மந்தநிலையும் அதன் விளைவான பெருங்குழப்பமும் 2008 ஆம் ஆண்டில் பராக் ஒபாமாவை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வந்த முக்கியமான காரணிகளில் ஒன்று. நம்பிக்கையிழந்திருந்த அமெரிக்க மக்களின் கண்களில் அவர் ஒரு மீட்பராகத் தென்பட்டார். ஒபாமாவின் கண்காணிப்பின் கீழ் அமெரிக்கப் பொருளாதாரம் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் கண்டது. அதற்கான வெகுமதியாக அவரை இரண்டாவது பதவிக்காலத்துக்கும் அமெரிக்க மக்கள் தெரிந்தெடுத்தார்கள். ஆனால், மீண்டும் அவர் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறார்கள்.

கடந்த நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் செப்டெம்பர் 30 ஆம் திகதி காலாவதியான நிலையில் அமெரிக்க காங்கிரஸ் புதிய நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அங்கீகரிக்க மறுத்ததையடுத்து அரசாங்க நிறுவனங்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு (Shut down) அக்டோபர் முதலாம் திகதியில் இருந்து வெள்ளைமாளிகை உத்தரவிட வேண்டியேற்பட்டது.

அமெரிக்க காங்கிரஸில் ஜனப்பிரதிநிதிகள் சபை குடியரசுக் கட்சியினரின் கட்டுப்பாட்டிலும் செனட் சபை ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியினரின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. அக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமான புதிய நிதியாண்டுக்கான செலவினங்களை அங்கீகரித்து சட்ட மூலங்களை நிறைவேற்றுவதற்கு குடியரசுக்கட்சியினர் மறுத்ததன் விளைவாக பெருமளவு நிதி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்து போயிருக்கின்றன.




வெள்ளைமாளிகைக்கும் காங்கிரஸுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்படுவதற்கு 'ஒபாமா கெயார்' (Obama care) என்று பிரபலமாக அழைக்கப்பட்ட ஒபாமாவின் சுகாதார நலத்திட்டத்திற்கான நிதியொதுக்கீட்டு மசோதாவிற்கு குடியரசுக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்ததே காரணமாகும். இந்தப் புதிய சுகாதார நலத் திட்டமும் அக்டோபர் முதலாம் திகதியே நடைமுறைக்கு வந்தது. பெரும் எண்ணிக்கையான மக்கள் அன்றைய தினமே இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தங்களைப்பதிவு செய்து கொண்டார்கள். அதே வேளை, இத்திட்டத்துக்கான நிதியை நிறுத்தி வைப்பதற்கான தீர்மானத்தை குடியரசுக்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள ஜனப்பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியது. 'ஒபாமா கெயார்' விடயத்தில் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு ஒபாமாவோ அல்லது ஜனநாயகக் கட்சியினரோ முன்வரும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் நெருக்கடி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அரசாங்க நிறுவனங்கள் மூடப்பட்டதையடுத்து சுமார் 8 இலட்சம் ஊழியர்கள் சம்பளமற்ற லீவில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற குடியரசுக் கட்சியையும் ஜனநாயகக் கட்சியையும் சேர்ந்த சில காங்கிரஸ் உறுப்பினர்கள் இணைந்து

*(47ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# பொதுநலவரசு அமைப்பிலிருந்து விலகிய காம்பியா



பொதுநலவரசு (Common-wealth) அமைப்பிலிருந்து 48 வருடங்களுக்குப்பிறகு விலகுவதாக அறிவித்ததையடுத்து மேற்கு ஆபிரிக்காவின் சின்னஞ்சிறிய நாடான காம்பியா இப்போது செய்திகளில் பெரிதாக அடிபடுகிறது. அடுத்த மாத நடுப்பகுதியில் கொழும்பில் பொதுநலவரசு உச்சிமகாநாடு நடைபெறவிருக்கும் நிலையில் இடம்பெற்றிருக்கும் அந்த விலகலுக்கான கார ணம் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை. அரசாங்கத் தொலைக்காட்சியில் அக்டோபர் மூன்றாம் திகதி வாசிக்கப்பட்ட அறிக்கையில் பொதுநலவரசு ஒரு நவகாலனித்துவ அமைப்பு என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டது.

அறிவிப்பு எதிர்பாராத முறையில் வந்திருக்கிறது. ஆனால், காம்பியா அதிர்ச்சிகளுக்குப் புதியநாடு அல்ல. இறுதியாக பதவியில் இருந்த அரசாங்கத்தை இராணுவச் சதிப்புரட்சியொன்றில் பதவியில் இருந்து கவிழ்த்தபிறகு இருதசாப்தங்களாக (எப்போது என்ன செய்வார் என்று சொல்ல முடியாத) சர்வாதிகாரி யஹ்யா ஜமே ஆட்சியதிகாரத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

இதோ காம்பியாவைப் பற்றி சில தகவல்கள். இவற்றை சிலவேளை நீங்கள் முன்கூட்டியே அறியாதிருந்திருக்கலாம்.

காம்பியா பெண் விபசாரச் சுற்றுலாவுக்குப் பேர் போன நாடு. ஐரோப்பாவில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் பெரும்பாலும் நடுத்தர வயது வெள்ளையினப் பெண்கள் காம்பியா கடற்கரை விடுமுறைக் களிப்பிடங்களுக்கு படையெடுத்துவருகிறார்கள். பணத்துக்காகவும் பரிசுப் பொருட்களுக்காகவும் அல்லது விசாக்களுக்காகவும் அப்பெண்கள் உள்ளூர் இளைஞர்களுக்கு உடலை விற்கிறார்கள்.

ஒவ்வொருவருடமும் சுமார் 50 ஆயிரம் பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் காம்பியாவுக்கு வருகின்ற போதிலும், அந்தநாடு அதன் மனித உரிமை மீறல்களுக்காக பிரிட்டனாலும் ஏனைய நாடுகளினாலும் கடுமையாகக் கண்டனம் செய்யப்படுகிறது.


மரண தண்டனையை எதிர்நோக்கியிருக்கும் கைதிகள் சகலரையும் ஒரு மாத காலத்திற்குள் சுட்டுக்கொலை செய்துவிடப் போவதாக காம்பிய அரசாங்கம் ஒருவருடத்துக்கு முன்னர் தீர்மானித்ததையடுத்து பெரும் இராஜதந்திரச் சர்ச்சை மூண்டது. (27 வருடங்களாக அந்த நாட்டில் எந்தவொரு மரண தண்டனையும் நிறைவேற்றப்படவில்லை) ஒரு பெண்ணும் இரு செனகல் பிரஜைகள் உட்பட ஒன்பது கைதிகள் துப்பாக்கியால் சுடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றுப்பட்டதையடுத்த காம்பியா அயல்நாடான செனகலின் சீற்றத்துக்கும் வெளிநாடுகளின் கடும் கண்டனத்துக்கும் உள்ளானது. அந்த நேரம் அரச தொலைக்காட்சி மூலமாக அறிக்கையொன்றை விடுத்த ஜனாதிபதி ஜமே 'எனது நாட்டு ஜனத்தொகையில் 99 சதவீதத்தினர் கிறிமினல்களின் பணயக்கைதிகளாக இருப்பதை நான் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை' என்று கூறினார். இதுவே அவர் தனது தீர்மானத்துக்கு அளித்த விளக்கமாகும்.

எயிட்ஸ் நோயைத் தன்னால் குணப்படுத்த முடியுமென்றும் காம்பியா ஜனாதிபதி கூறுகிறார். மூலிகைகளை கொதி நீரில் அவிக்க வைப்பதன் மூலமாக எயிட்ஸைக் குணமாக்கக்கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடித்திருப்பதாக ஜமே 2007ஆம் ஆண்டு அறிவித்தார். அந்த மருந்தினால் 68 நோயாளிகள் குணப்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ஜமேக்கு நீண்டதொரு பெயர் இருக்கிறது - அல்ஹாஜி ஷேய்க் பேராசிரியர் கலாநிதி யாஹாயா அப்துல் அசீஸ் ஜாமுஸ் ஜங்குங் ஜமே.

*(40ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விட்டுக்கொடுப்பு உணர்வு மேலோங்கி நிலைபெறட்டும்

போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வ தேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக் கும் பணியை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் விட்டு விடுவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அரசாங்கத்துடன் பணியாற்றுவ தற்கு அசாதியான தாக அமையும்



கலாநிதி
ஜெஹான் பெரேரா

முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடமாகாண முதலமைச்சராக நியமனம் பெறும் கடிதத்தை ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் பெறுவதைக் காண்பிக்கும் புகைப்படமும் அவர் கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதைக் காண்பிக்கும் புகைப் படமும் மிகவும் உற்சாகத்தைத் தருபவை யாக இருந்தன. ஆளுநர் பதவியில் இருந்து சந்திரசிறியை அகற்ற வேண்டுமென்று தேர் தல் பிரசார காலத்தில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு முன்வைத்த கோரிக்கையை இது பொய்யாக்கிவிட்டது. போர்க்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் இராணுவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதியாக இருந்தவர் என்ற வகையில் சந்திரசிறி போரின் மரபைத் தன்னுடன் காவிச்செல்ல வேண்டியவராக இருக்கிறார். இந்தப் போரின் மரபு குடிமக்களைப் பொறுத்தவரை எதிர்மறையானது. போரின் முடிவுக்குப் பிறகு வடமாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட சந்திரசிறி முன்னர் தான் தலைமைதாங்கிய இராணுவத்துடன் நெருக்கமாகச் செயற்பட்டு வந்திருக்கிறார்.

போர் முடிவுக்கு வந்தபோது குறிப்பாக வடக்கில், மக்கள் மத்தியில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படுமென்ற எதிர்பார்ப்பு நிலவியது. ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. மாறாக, இராணுவப் பிரசன்னம் அண்மைய வடமாகாண சபைத் தேர்தலில் ஒரு பெரிய பிரச்சினையாக முன்வைக்கப்பட்டது. வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றுவது வடமாகாணசபையின் அதி முன்னுரிமைக்குரிய விவகாரமாக இருக்குமென்று நீதியரசர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் வெறுமனே 13 ஆயிரம் படைவீரர்களே நிலைகொண்டிருப்பதாக இராணுவம் கூறுகின்ற அதேவேளை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அங்கு ஒரு இலட்சத்துக்கும் அதிகமான படைவீரர்கள் இருப்பதாக அண்மையில் கூறியிருந்தார். யாழ்ப்பாணத்தில் 15 இராணுவப் பிரிவுகள் இருப்பதாகவும் ஒவ்வொரு பிரிவிலும் சுமார் 10 ஆயிரம் படைவீரர்கள் இருப்பதாகவும் சம்பந்தன் கூறுகிறார்.

இராணுவத்தை முகாம்களுக்கு அனுப்புமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைமைத்துவம் கோரிக்கை விடுத்ததற்கு மத்தியிலும், இராணுவப் பிரசன்னத்துக்கு மத்தியிலேயே வடக்கில் தேர்தல் இடம்பெற்றது. தேர்தல் தினத்துக்கு முதல் நாள் இடம்பெற்ற தாக்குதல்களில் பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்டதாகவும் தேர்தல் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்கள் உளவுபார்க்கப்பட்டதாகவும் பி.பி.சி.செய்தியாளர்கள் அறிவித்திருந்தார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான அனந்தி சசிதரனின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 'பவ்ரல்' (நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை) அமைப்பைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவர் உட்பட 8 பேர் காயமடைந்தனர். தேர்தல் செயன்முறைகளில் இராணுவ அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக கண்காணிப்பாளர்கள் அறிவித்திருந்தார்கள். குறிப்பிட்ட சில வேட்பாளர்களுக்காக இராணுவம் பிரசாரம் செய்ததாகவும், யாருக்கு வாக்களிக்க வேண்டும், யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்று இராணுவத்தினர் வாக்காளர்களுக்கு ஆலோசனை வழங்கியதாகவும் கூட முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

சிவிலியன் அலுவல்களில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டமைக்கான குற்றப் பொறுப்பு பிரதானமாக ஆளுநர் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது. வடக்கில் முன்னர் இராணுவத் தளபதியாக இருந்த காரணத்தால் இப்போது கூட, அங்குள்ள துருப்புகளுடன் நெருக்கமான உறவை அவர் கொண்டிருக்க இயலுமாகவுள்ளது என்றாலும், வடக்கில் அதீத இராணுவமயமாக்கலுக்கான முழுப்பொறுப்பையும் ஆளுநர் சந்திர சிறி மீதே சுமத்துவது பொருத்தமானதல்ல. இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் மாகாணங்களின் ஆளுநர்கள் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்கள் அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அல்லது அவர்கள் பதவிகளை இழக்க வேண்டிவரும். அரசாங்க சேவையில் அரசியல் நியமனங்களைப் பெறும் ஏனைய உயரதிகாரிகளும் இதே பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள். அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தின் சகல உயர் அதிகாரிகளும் ஜனாதிபதியின் முற்றுமுழுதானதற்துணிபில்நியமிக்கப்படலாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் ஆளுநருக்கும் இடையேயான கடந்த கால உறவின் போதாமையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, வடமாகாண சபை தொடர்பாக பேச்சுவார்த்தைகளுக்கு விடுக்கப்படக்கூடிய அழைப்புகளை நிராகரிக்க வேண்டுமென்று அவர்களுக்கு கணிசமான நெருக்குதல்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால், எதிர்பார்ப்புகள் சகலதிற்கும் முரணாக, மாகாணசபைத் தேர்தலுக்குப் பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் பரஸ்பரம் நடந்துகொள்கின்ற முறை உற்சாகம் தருவதாக இருக்கிறது. இருதரப்பினருக்கும் இடையேயான சந்திப்பு சுமுகமானதாக இருந்ததாக செய்திகள் தெரிவித்தன. முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு நியமனக் கடிதத்தை வழங்கியதுடன், ஆளுநர் வடமாகாணசபைக்கான புதிய கட்டிடம் குறித்தும் அவருடன் ஆராய்ந்தார்.

இத்தகைய விட்டுக்கொடுப்பு உணர்வு எதிர்காலத்திலும் தொடரு

> வட மாகாண வாக்குகளின் 78 சதவீதத்தைப்பெற்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கண்டிருக்கும் பிரமிக்கத்தக்க வெற்றியினால் புதிய மாகாண சபைக்கு கிடைத்திருக்கும் நியாயப்பாட்டை எதிர்ப்பது கஷ்டமானதாகும். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தருணத்திலிருந்து அரசின் பிரதிபலிப்பு நேர்மறையானதாகவே இருந்து வந்திருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்று எதிர்பார்ப்போமாக. இலங் கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் நவநீதம்பிள்ளை சிவில் சமூ கச் செயற்பாட்டாளர்களுடன் நடத் திய சந்திப்பின் போது தனது நாடான தென்னாபிரிக்கா நெல்சன் மண்டே லாவிடமிருந்து பெருமளவு பாடங்க ளைக் கற்றுக்கொண்டதாகத் தெரிவித் தார். சமாதானத்தைக் காண்பதற்காக விட்டுக்கொடுப்புகளைச் செய்வதற் குத் தயாராயிருக்க வேண்டுமென்பது அதில் முக்கியமான பாடமாகும். 'துணிச்சல் உள்ளவர்கள் சமாதானத் தின் பேரில் விட்டுக்கொடுப்பதற்கு அல்லது மன்னிப்பதற்கு அஞ்சுவ தில்லை' என்பது மண்டேலாவின் ஒரு புகழ்பெற்ற கூற்றாகும்.

கடந்த காலத்தில் ஆளுநர் சந்திரசிறி வடக்கு மக்கள் தாங்கள் நேர்மையீனமாகவும் கடுமையாக வும் நடத்தப்படுவதாக உணரும்வ கையில் செயற்பட்டிருக்கிறார். அரசா ங்கத்தின் ஒரு முகவர் என்ற வகையி லேயே அவ்வாறு செயற்பட்டார். ஆனால், இப்போது அரசாங்கம் போக்கை மாற்றுகின்றது போலத் தெரிகிறது. தற்போது ஆளுநர் ஒத்து ழைப்பு மனப்பான்மையுடன் செயற் படுகின்றார் என்றால், அவரையும் ஒரு பங்காளியாகக் கருதிச் செயற் பட முடியும்.

மக்களின் வாக்குகளில் 78 சதவீதத் தைப் பெற்று தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு கண்டிருக்கும் பிரமிக்கத்தக்க வெற்றி புதிய மாகாண சபைக்கு ஒரு நியாயப்பாட்டைக் கொடுக்கிறது. அந்த நியாயப்பாட்டை எதிர்ப்பது கஷ்டமானதாகும். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தருணத்தில் இருந்து அரசாங்கத்தினால் வெளிக் காட்டப்பட்ட பிரதிபலிப்பு நேர்மறை யானதாக இருந்திருக்கிறது. அரசியல மைப்புக்கு இசைவான முறையில் வடமாகாண சபையுடன் பணியாற்று வதற்கு அரசாங்கம் தயாராயிருப்ப தாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறினார். இந்தப் புதிய அரசியல் செயன்முறை களின் ஆரம்பக்கட்டத்தில் இருதரப் பினரில் எவருமே தாங்கள் நெருக்க டிக்குள்ளாக்கப்படுவதாகவோ அல் லது மதிப்புக்குறைந்தவர்களாக நோக்கப்படுவதாகவோ உணரக் கூடிய சூழ்நிலைகள் தோன்றாதிருப் பதை உறுதிசெய்வதில் அக்கறைகாட் டப்பட வேண்டும்.

இத்தகைய பின்புலத்திலே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் இன்னொரு முக்கி யமான அம்சம் குறித்து நிதானமாகப் பரிசீலனை செய்ய வேண்டியது மிக வும் முக்கியமானதாகிறது. 'போரின் இறுதிக்கட்டங்களில் இலங்கை அரச ாங்கத்தினாலும் விடுதலைப்புலிகளி னாலும் இழைக்கப்பட்டிருக்கக்கூடிய சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசா ரிப்பதற்கு சுயாதீனமான சர்வதேச ஏற்பாடொன்று செய்யப்படவேண் டும்' என்று தேர்தல் விஞ்ஞாபனத் தில் கூறப்பட்டுள்ளது. கலாநிதி தயான் ஜெயதிலக சுட்டிக்காட்டிய தைப் போன்று, வட அயர்லாந்து நெருக்கடியில் ஐரிஸ் குடியரசு இரா ணுவமும் அதன் அரசியல் பிரிவான சின்ஃபீனும் தேர்தல் அரசியல் பிரதான நீரோட்டத்தில் பிரவேசித்த பிறகு (மோதல் காலத்தில் இடம்பெற் றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல் கள் குறித்து) சர்வதேச விசாரணை யொன்று நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கவில்லை. அரசாங்கத்தை ஒரு பங்காளியாகக் கருதிச் செயற்படுவதற்கு தமிழ்த்தே சியக் கூட்டமைப்பு விரும்பினால், அதே அரசாங்கத்தின் தலைவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று வற் புறுத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

மறுபுறத்தில், மனித உரிமைகள் அமைப்புகளின் கடமை மனித உரி மைகளைப் பேணிப் பாதுகாப்பதாக இருக்க வேண்டுமேயன்றி, மனித உரிமைகளை மீறிச் செயற்பட்ட, தொடர்ந்தும் மீறிக் கொண்டிருக் கின்ற அரசாங்கங்களுடன் தோழமை கொண்டு செயற்படுவதல்ல. போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டு மென்று கோரிக்கை விடுக்கும் பணியை சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளிடம் விட்டுவிடுவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை அரசாங்கத்துடன் பணியாற்றுவதற்கு வசதியானதாக அமையும். தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் தலைவர்கள் தென்னாபி ரிக்காவின் மகத்தான தலைவர் நெல் சன் மண்டேலாவைப் பின்பற்றுவது விவேகமானது. நிலைபேறான அரசி யல் தீர்வொன்றைக் காண்பதற்கு பங்களிப்புச் செய்கின்ற சகலருக்கும் பொது மன்னிப்பு வழங்குவதற்கு வகைசெய்யக்கூடிய (உண்மை மற் றும் நல்லிணக்கத்தில் கவனத்தைச் செலுத்துகிற) வித்தியாசமானதொரு பொறுப்புக் கூறும் (Accountability Process) செயன்முறைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரலாம். எந்தவொரு சமாதான முயற்சியி லுமே சம்பந்தப்பட்ட இருதரப்புக ளில் எந்தத் தரப்பினருமே மற்றைய தரப்பினரை மலினப்படுத்தவோ, ஊறு விளைவிக்கவோ அல்லது அவ மதிக்கவோ கூடாது. இருதரப்பின ரும் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பது முக்கியமானதாகும்! ■

**துணிச்சல் உள்ளவர்கள் சமாதானத்தின் பெயரில் விட்டுக்கொடுப்பதற்கு அல்லது மன்னிப்பதற்கு அஞ்சுவதில்லை என்ற நெல்சன் மண்டேலாவின் புகழ் பெற்ற கூற்றை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலை வர்கள் மனதில் கொண்டு செயற்படுவது நல்லது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணச்சபை எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்

தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்கள் முடிந்து அக்கறையுடன் காரியங்களில் ஈடுபடுவதற்கான நேரம் ஆரம்பித்துவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று நெருக்குதல் கொடுத்த உள்நாட்டிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் உள்ள பிரகிருதிகள் கூட்டமைப்புக்குக் கிடைத்த வெற்றியையும் வடமாகாண தமிழ்மக்கள் திரண்டுவந்து பெருமளவில் வாக்களிப்பில் கலந்துகொண்டதை யும் கண்டு வாயடைத்துப் போயிருக்கிறார்கள்.

தேர்தலுக்குப் பிறகுதான் உண்மையான சச்சரவு இருக்கிறது என்று நான் ஆகஸ்டில் கூறியதை சமகாலம் சஞ்சிகையை கிரமமாக வாசிப்பவர்கள் அறிவார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றுதான். ஆனால், இந்தளவுக்கு ஒரு பிரமிக்கத்தக்க வெற்றியை அது பெறுமென்று எவருமே எதிர்பார்க்கவில்லை. புதிய முதலமைச்சரும் வடமாகாணசபை நிருவாகமும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய 5 அம்சங்கள் குறித்து அந்தக் கட்டுரையில் நான் எழுதியிருந்தேன். அவை அந்த நேரத்தைவிடவும் தற்போதுதான் மிகவும் பொருத்தமானவையாக இருப்பதால், எந்த மாற்றமும் இன்றி அவற்றை இங்கே தருகிறேன்.

1. மத்திய அரசாங்கமும் ஆளுநரும் குடிமக்களின் வாழ்வில் அட்டகாசமான முறையில் தலையீடு செய்கின்ற இராணுவமும் வேண்டுமென்றே ஏற்படுத்தக் கூடிய முட்டுக்கட்டைகளில் இருந்து வடமாகாண நிருவாகத்தைப் பாதுகாத்தல்;
2. வடக்கில் இராணுவமய நீக்கத்தைச் செய்து தமிழர்களின் அன்றாட வாழ்வைப் பாதுகாப்பானதாகவும் பத்திரமானதாகவும் உறுதிப்படுத்தல். அந்நியப்படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் இருப்பதைப் போன்ற தோற்றப்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருகிறது;
3. இராணுவத்தினால் அபகரிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் அவற்றின் சட்டபூர்வமான உரிமையாளர்களுக்கு திரும்பக் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்து சுமுகமான மீள்குடியேற்றத்தை உத்தரவாதம் செய்தல். போர் விதவைகளினதும் அநாதைகளினதும் அவலங்களை முடிவுக்குக் கொண்டுவருதல்;
4. பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் அன்றாட நிருவாக அலுவல்களுக்காகவும் ஆற்றல்மிக்கதும் பயனுறுதியுடையதுமான நிருவாகமொன்றைக் கட்டியெழுப்புதல். இந்த நோக்கத்துக்காக திறமையும் தகுதியும் வாய்ந்தவர்களைத் திரட்டுதல்;
5. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பல கட்சிகளைக் கொண்ட ஒரு அணியாக இருக்கின்றபோதிலும், கட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் பணியாற்றுதல், ஒரு கட்சியின் ஏற்பாடுகளுக்குள்ளும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்குள்ளும் செயற்பட்ட அனுபவம் விக்னேஸ்வரனுக்கு இல்லை. அதை அவர் விரைவாக கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.



குமார் டேவிட்

புதிய முதலமைச்சர் பதவியேற்ப

**விக்னேஸ்வரனும் வட மாகாண சபையும் பின்வாங்க முடியாத ஒரு விவகாரம் இராணுவமய நீக்கமாகும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது பேச்சுவார்த்தைக்குரிய விவகாரமே அல்ல. இது விடயத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பின்வாங்கினால் அது இளைஞர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நம்பகத்தன்மையை நிச்சயமாக இழந்துவிடும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியுடன் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

தற்கு முன்னதாகவே மாகாண சபைக ளுக்குரிய காணி அதிகாரங்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றின் மூல மாக நீர்த்துப்போகச் செய்யப்பட்டி ருப்பதைக் காணக்கூடியதாக இருந் தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வழக் குடன் தொடர்புடைய விவகாரத்தின் தேவைக்கு அப்பால் சென்று காணி அதிகாரங்களை ஜனாதிபதியிடம் பாரப்படுத்தியிருக்கிறது. பிரதம நீதி யரசர் சட்டவிரோதமான முறையில் பதவிநீக்கம் செய்யப்பட்டதற்குப் பிறகு ஜனாதிபதிக்கும் உச்ச நீதிமன் றத்துக்கும் இடையேயான உறவின் இலட்சணத்தைப் பற்றி நான் உங்க ளுக்கு நினைவுபடுத்த வேண்டிய தேவையில்லை. எனவே,மாகாணச பைகளுக்குரிய காணி அதிகாரங்கள் தொடர்பில் உச்ச நீதிமன்றம் அளித்தி ருக்கக் கூடிய தீர்ப்பு ஒன்றும் அதிர்ச் சியைத் தரவில்லை. வெறுக்கத்தக்க பல்வேறு நோக்கங்களுக்காக இரா ணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகளை அவற்றின் சட்டபூர்வ உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளிக்கும் உத்தேசம் அரசாங்கத்து க்கு இல்லை.

அரசாங்கத்துக்கு பல நோக்கங்கள் இருக்கின்றன. இராணுவத்தைச் சந்தோசமாக வைத்திருக்க வேண்டி யிருக்கிறது. அதனால் இந்தக் காணிக ளில் இருந்து பயனைப் பெறுவதற்கு இராணுவத்தை அனுமதிக்க வேண் டியிருக்கிறது. வடக்கில் இராணுவ ஆட்சியை வலிதாக்கி தங்குதடை யின்றிய ஒடுக்குமுறையை உறுதிப் படுத்த அரசாங்கம் விரும்புகிறது. வடக்கில் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் தலைமையில் முன்னெடுக் கப்படக்கூடிய அபிவிருத்திச் செயற் பாடுகளைச் சீர்குலைப்பதில் அரசாங் கத்துக்கு விருப்பமில்லாமல் இல்லை. (நிலவளங்கள் கிடைக்காவிட்டால் சில பொருளாதார நடவடிக்கைகள் பாதிக்கப்படும்). தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு தலைமையிலான மாகாண சபை சிறப்பாகச் செயற்படும் பட்சத் தில் அது அரசாங்கத்துக்கு பெரும் அசௌகரியமாகவும் போகக்கூடும். ஏனென்றால், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான உள்ளூராட்சி நிருவாகங்கள் போதைப்பொருள் வியாபாரிகளும் கள்வர்களும் பாலியல் கொடுமை செய்பவர்களும் நிறைந்து பெரும் அனர்த்தமாகிப் போயிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அர சாங்கம் நீதிமன்றத்தின் ஊடாக வட மாகாண சபை மீதான அதன் முதன் முதலான திட்டமிட்ட தாக்குதலைத் தொடுத்திருக்கிறது. இதை விட வித்தி யாசமாக அரசாங்கம் செயற்படு மென்று நம்புகிற எவரும் ஓரிரு வரு டங்களுக்குப் பிறகு குறிப்புகளை ஒப்பிட்டுப்பார்க்கட்டும்.

### பிரசாரப் போர்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றி நாட்டுப் பிரிவினைக்கு கட்டி யம் கூறி நிற்கிறது என்று கூறுவதன் மூலமாக ஜாதிகஹெல உறுமயவும் கம்மன்பிலவும் பிரிவினைக்கெதி ரான தாக்குதலைத் தொடக்கியிருக்கி றார்கள். பொய்களை மறுதலிப்பதில் சுமந்திரன் சிங்கள ஊடகங்களிலும் கருத்தரங்குகளிலும் செய்திருக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அரசாங்கத்திற்கு பல நோக்கங்கள் இருக்கின்றன. இராணுவத்தை சந்தோசமாக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அதனால் அபகரிக்கப்பட்ட காணிகளிலிருந்து பயனைப் பெறுவதற்கு இராணுவத்தை அனுமதிக்க வேண்டியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான மாகாண சபை சிறப்பாக செயற்படும் பட்சத்தில் அது அரசாங்கத்திற்கு பெரும் அசௌகரியமாகவும் போகக்கூடும்**

கூடிய தலையீடுகளும் சம்பந்தனின் அறிக்கைகளும் தேர்தலுக்கு முன்னர் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. உணர்வுகளைச் சாந்தப்படுத்தும் வகையில் அவர்களின் கருத்துகள் அமைந்திருந்தன. தேர்தல் முடிவுகளை பொதுவில் சிங்களவர்கள் உள்ளச் சமநிலையுடன் ஏற்றுக்கொண்டதில் இருந்து இதைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. தமிழர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதை சிங்களவர்கள் விளங்கிக் கொள்கிறார்கள். சம்பந்தனும் சுமந்திரனும் செய்திருக்கும் தலையீடுகளில் ஓய்வு இருத்தலாகாது. ஆட்சியாளர்களினதும் அரசு இயந்திரத்தினதும் வக்கிரத்தனங்களையும் பொய்களையும் அம்பலப்படுத்துவதில் இடைவிடாது செயற்பட வேண்டியது முக்கியமானதாகும். அரசாங்கத்தரப்பினரால் உதயன் பத்திரிகையைப் பிரதிபண்ணி போலிப் பத்திரிகையொன்றை வெளியிட முடியுமென்றால், வேறு எதைத்தான் அவர்களினால் செய்ய முடியாது?

நீதியைக் கோருவதற்கான போராட்டத்தில் முக்கியமான களம் தென்னிலங்கை என்பதையும் மனதிற்கொள்ளவேண்டும். சிங்கள மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டியது அவசியமாகும். சிங்களவர்கள் மத்தியில் இந்தப்பிரசாரத்தைக் கொண்டு செல்வதற்கு சுமந்திரனும் சிங்களம் பேசக்கூடிய சில தமிழர்களும் எண்ணிக்கையில் போதாதவர்கள். சிங்களக் கடும் போக்காளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற நச்சுத்தனமான பிரசாரங்களுக்கு எதிரான தலையீடுகளைச் செய்வதற்கு பிரசாரகர்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயிற்றுவிக்க வேண்டும். பொதுவான மேடைகளில் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக்காக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, சிறிதுங்க ஜெயசூரிய போன்ற கண்ணியமான இடதுசாரிகளின் உதவியை நாடலாம். அரசாங்கம் கையாளுகின்ற தந்திரோபாயத்தின் விளைவாக சர்வதேசத்திலும் இந்தியாவிலும் ஏற்படக்கூடிய எதிர்வினைகளும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஏற்படக்கூடிய அமைதியின்மையும் பாரதூரமானவையாக இருக்கும். இது தமிழர்களை விடவும் சிங்களவர்களையே கூடுதலாகப் பாதிக்கும். எதேச்சாதிகார மத்திய அரசாங்கத்துக்கும் புதிய மக்கள் ஆணையுடனான மாகாண சபைக்கும் இடையிலான மோதல் பாதகமான விளைவுகளைக் கொண்டு வரும். இதைத் தவிர்க்கக் கூடியதாக நல்லறிவு ஆட்சியாளர்களுக்கு இருக்கிறதா?

### மிகப்பெரிய சவால்

மிகப்பெரிய சவால் இராணுவமய நீக்கமேயென்று (Demilitarisation) நான் பல கட்டுரைகளிலும் அரங்குகளிலும் கூறிவந்திருக்கிறேன். தடுக்க முடியாத சக்தி நகரமுடியாத முட்டுக் கட்டையொன்றைச் சந்திக்குமா? கோதாபயவும் மகிந்தவும் இராணுவத்தை முகாம்களுக்குள் மட்டுப்படுத்தி, குடிமக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அது தலையிடுவதை நிறுத்துவார்களா? அவ்வாறு செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், அவ்வாறு செய்வது எதேச்சாதிகாரப் போக்கிற்கு குந்தகமாக அமையும். அத்துடன், ராஜபக்ஷ மேலாதிக்கத்தை அது மறுதலையாக்கிவிடும். அவர்கள் என்னதான் செய்யப்போகிறார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

விக்னேஸ்வரனும் வடமாகாண சபையும் பின்வாங்க முடியாத ஒரு விவகாரம் இராணுவமய நீக்கமாகும். மக்களைப் பொறுத்தவரை இது பேச்சுவார்த்தைக்குரிய விவகாரமேயல்ல. இதுவிடயத்தில் தமிழ்த்தேசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யக் கூட்டமைப்பு பின்வாங்கினால் அது இளைஞர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நம்பகத்தன்மையை இழந்துவிடும். இப்போது செயற்படுவதைப் போன்று இராணுவத்தைச் செயற்பட அனுமதித்தால் அது அரசியல் ரீதியிலும், பௌதீக ரீதியிலும் கூட தற்கொலையாகவே அமையும். ஆனால், கோதாபயவையும் இராணுவத்தையும் பொறுத்தவரை இது தாண்டிச் செல்ல முடியாத - தாண்டிச் செல்லக்கூடாத சிவப்புக் கோடாகும். தந்திரோபாய ரீதியாக ஒரு பின்வாங்கலைச் செய்வதைத் தவிர, சர்வதேச ரீதியில் மகிந்தவுக்கு வேறு தெரிவு இல்லை. ஆனால் நீண்டகாலமாக தானே மார்போடு அனைத்து ஊட்டி வளர்த்த பேரினவாத நச்சுப் பாம்புகளை ஆத்திரப்படுத்த அவர் துணிச்சல் கொள்வாரா?

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் விக்னேஸ்வரனும் வடமாகாண சபை நிருவாகமும் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை தெட்டத் தெளிவானது. இது அதிகார அரசியல். பயனற்றவர்களில் நம்பிக்கையில்லாதது. தமிழ்மக்களும் இளைஞர்களும் டில்லி மற்றும் தமிழ்நாடும் உலகத் தமிழ் அரங்கம் (Global Tamil Forum) போன்ற புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய விடுதலைப் புலிகளின் எச்ச சொச்சங்களும் உட்பட சர்வதேச சமூகமுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தின் ஆதாரச் சக்திகளாகும். உலகத் தமிழர் அரங்கம் வெற்றிபெறுகிற குதிரையையே தொடர்ச்சியாக ஆதரித்து வந்திருக்கிறது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருக்கக்கூடிய சந்தேகப் பேர்வழிகளைப் புறந்தள்ளி விட்டு முன்னுக்கு வருவதற்கு உலகத் தமிழர் அரங்கம் தயங்கக் கூடாது. சிவிலியன் ஆதிக்கத்துக்கான போராட்டங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முழு மூச்சுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். இராணுவம் எங்கென்றாலும் ஒடுக்குமுறைத் தன்மையானது, ஜனநாயகத்துக்கு ஆபத்தானது.

வடமாகாண சபை நல்லிணக்கத்தில் இதயசுத்தியான அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும். அது நியாயபூர்வமாகவும் கௌரவமாகவும் நடந்துகொள்ள வேண்டும். முரண்டுபிடிக்கிற பேர்வழிகளின் செயற்பாடுகள் காரணமாக சர்வதேச சமூகத்தின் மத்தியில் இருக்கும் ஆதரவுக்கு பாதிப்பு வந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படாதிருப்பதையும் சிங்கள மக்கள் மத்தியில் மனக்குழப்பத்தை ஏற்படுத்தாதிருப்பதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதி செய்து கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

அதேநேரம், கூட்டமைப்பு உறுதியாக நிற்கவும் வேண்டும். அரசாங்கம் நம்பமுடியாதது. அதனால், கவனமின்மையும் முரட்டுத்தனமும் அல்ல தந்திரோபாய ரீதியான விவேகமே தேவையானதாகும். நெல்சன் மண்டேலாவிடமிருந்து கூட்டமைப்பு படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு மண்டேலாவின் மன உறுதியும் விவேகமும் நெகிழ்வுப் போக்கும் விக்னேஸ்வரனிடமும் சம்பந்தனிடமும் சுமந்திரனிடமும் இருக்கிறதா? அது ஒரு வல்லமைமிக்க பணி. ஆனால் சாத்தியமானதல்ல.

பாரம்பரியமாக தமிழரசுக் கட்சியும் அதற்குப் பிறகு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் நேரடிப் போராட்ட நடவடிக்கைகளில் நாட்டம் காட்டியதில்லை. சட்டபூர்வமான வழிவகைகளிலேயே அவர்கள் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டிருக்கிறார்கள். 1977ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் விட கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றியது. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் வந்தார். ஆனால், அவர்கள் எந்த வடிவிலான எழுச்சிப் போராட்டத்திலும் ஈடுபட்டதில்லை. பாராளுமன்றப் பலத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கின் அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கையை வென்றெடுக்க முடியுமென்று அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்றே கருதவேண்டியிருந்தது.

விக்னேஸ்வரனின் நீதித்துறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது அவரும் இத்தகைய பாதையையே தெரிவு செய்யக்கூடும் என்று தோன்றுகிறது. வீதிப்போராட்ட அரசியலின் கரடுமுரடுகளில் இருந்து அவர் மாறுபடக் கூடும். கொழும்பு சட்டத்துறைச் சமூகத்துடன் விக்னேஸ்வரனுக்கு இருக்கின்ற தனிப்பட்ட ரீதியானதும் தொழில்சார் நிபுணத்துவ ரீதியானதுமான தொடர்புகள் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான உள்நோக்கையும் நுழைபுலத்தையும் கொடுக்கக்கூடும். ஒழுங்குமுறைகளை உதறித்தள்ளுகிற போக்குடைய ஒரு ராஜபக்ஷவுடன் விவகாரங்களைக் கையாளுவதில் இந்தப் பாதையை விக்னேஸ்வரன் கடைப்பிடிப்பாரேயானால், யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதரவையும் கொழும்பில் உள்ள செல்வாக்கையும் அவர் இழக்க வேண்டியேற்படலாம். ஒரு குழுவுடன் இணைந்து செயற்படக் கூடியவராகவும் பலம்பொருந்தியதும் உறுதியானதுமான தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலமாக பல்வேறு பிரிவினரையும் ஐக்கியப்படுத்தக் கூடிய ஒருவராகவும் அவர் மாற வேண்டும். வடக்கு அரசியலில் காணப்படக்கூடியதாக இருந்த குழு முரண்பாடுகளுக்கு அவர் புதியவர். ஏனென்றால், கொழும்பில் இருந்து சென்றிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக விக்னேஸ்வரனுக்கு தேர்தலில் கிடைத்த பெரும் எண்ணிக்கையான வாக்குகள் ஒரு அதிகார அந்தஸ்தை அவருக்குக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் வெற்றி வேண்டி நிற்கும் விடைகள்

நீதியரசர் விக்னேஸ்வரனுக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் அரசியலுக்கு அப்பாற்பட்ட அவரை தமிழ்ச் சமூகம் ஓர் அரசியல் தலைமைப் பதவிக்கு எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளும் என்ற கேள்விக்கான விடையை தெளிவாக வழங்கியிருக்கின்றன



என்.சத்தியமூர்த்தி

நடந்து முடிந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும் என்பது யாரும் எதிர்பார்க்காதது அல்ல. குறிப்பாக ஆளும் கூட்டணியின் தலைமையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுத் தலைமையும் கூட, கூட்டமைப்பின் தேர்தல் வெற்றி உறுதி என்பதனை உணர்ந்தே கடந்த பல மாத காலமாக செயலாற்றி வந்தன என்பதே உண்மை. ஏனெனில், வேட்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டிய காலகட்டத்திலும் அதன் பின்னரும் கூட கூட்டமைப்புத் தலைமையே தங்களது கட்சிக்கு இத்தனை பெரிய வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்க முடியாது. இத்தகைய வெற்றியை அவர்கள் எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவில்லை என்பதே உண்மை.

வட மாகாண சபையில், தேர்ந் தெடுக்கப்பட்ட 36 ஆசனங்களில் 28 இடங்களை கூட்டமைப்பு பெற் றுள்ளது. இத்துடன், அதிக வாக்குகள் பெற்ற கட்சி என்று அதிகப்படியாகக் கிடைக்கும் இரண்டு ஆசனங்க ளையும் கணக்கில் கொள்ளும் போது, மாகாண சபையின் மொத்தமுள்ள 38 இடங்களில் 30 இடங்களை கூட்ட மைப்பு பெற்றுள்ளது. இதற்கு எதி ராக ஆளும் கூட்டணி ஏழு இடங்க ளையே பெற்றுள்ளது. அரசில் இடம்பெற்றாலும் தேர்தலில் தனி யாகப் போட்டியிட்ட முஸ்லிம் காங் கிரஸ் மீதமுள்ள ஒரு ஆசனத்தை மட் டுமே தனதாக்கிக் கொள்ளமுடிந்தது.

தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கத் தொடங்கி, கட்சியின் வெற்றி உறுதி யான காலகட்டத்தில் கூட கூட்ட



**அனந்திக்கு கிடைத்த வாக்குகள் அவரைப் போன்றே தாய், தந்தை, மகன், மகள் மற்றும் சகோதர, சகோதரிகளை இழந்து பரிதவிக்கும் தமிழ் வாக்காளர்களின் அவல நிலையை பிரதி பலிக்கின்றன**

மைப்பு மூன்றில் இரண்டு பங்கு இடங்களைப் பெறுவதிலேயே முனைப்பாக இருந்தது. ஆனால், தேர்தல் முடிவு வெளியானதும் அந் தக் கட்சி நான்கில் மூன்று பங்கு ஆச னங்களைப் பெற்றுள்ளமை தெளிவா னது. அதாவது, மொத்தமுள்ள இடங் களில், ஒவ்வொரு நான்கு ஆசனங்க ளில் மூன்று ஆசனங்களை கூட்ட மைப்பின் வசம் தமிழ் மக்கள் ஒப்ப டைத்துள்ளனர்.

வாக்குவிகித அடிப்படையிலும் கூட்டமைப்பு அசைக்க முடியாத முன்னிடத்தைப் பெற்றுள்ளது. மொத் தம் பதிவான வாக்குகளில் அதிகபட் சமாக 80 சதவீதத்திற்கு அருகாமை யில் அந்தக் கட்சி பெற்றுள்ளது. மொத்த வாக்குகள் என்ற கணக்கின் படி, 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அந்தக் கட்சியின் ஆதரவு டன் களமிறங்கிய சரத் பொன்சேகா வட மாகாணத்தில் மட்டும் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் வாக்குகள் பெற்றிருந்தார். அதேவருடம், மூன்று மாதங்களுக்கும் குறைவான காலகட் டத்திற்குள் நடைபெற்ற பாராளுமன் றத் தேர்தலில் வட மாகாணத்தில் போட்டியிட்ட கூட்டமைப்பு வாக் காளர்கள் அனைவரும் சேர்ந்து பொன்சேகா பெற்ற வாக்குகளை விடப் பெரிதாக ஒன்றும் பெறாதது சில சந்தேகங்களைக் கிளப்பியது. தற் போது மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு பொன்சேகா பெற்ற வாக்குகளின் இரண்டு பங்குக்கும் அதிகமாகப் பெற்றது குறிப்பிடத்தக் கது. இதுவும்கூட வட மாகாண மக்க ளின் அரசியல் பிரதிநிதியாக கூட்ட மைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதன் வெளிப்பாடே. இந்த உண்மையை யும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தனி வேட்பாளர், 'விருப்பு வாக்கு கள்' விடயத்திலும் கூட்டமைப்பே முன்னிலையில் இருக்கிறது. அதுவும் எதிர்பார்க்க வேண்டிய விடயமே. கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட் பாளர், முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன், 1,32,000 வாக்குகளுக்கும் அதிகமாகப் பெற்று, கட்சியின் முதன்மை வேட்பாளரே வாக்காளர்களின் முதல் விருப்பு வேட்பாளரும் கூட என்று நிலை நாட்டி உள்ளார். இதன்மூலம், அரசி யலுக்கு அப்பாற்பட்ட நீதியரசரை தமிழ்ச் சமூகம் ஓர் அரசியல் தலை மைப் பதவிக்கு எந்த அளவிற்கு ஏற் றுக்கொள்வார்கள் என்ற கேள்விக் கும் விடை கிடைத்துள்ளது. அந்த விடையே, விக்னேஸ்வரனின் தலை மைப் பொறுப்புக் குறித்து, தமிழ்க் கூட்டமைப்பினரிடையே தேர்தலு க்கு முன்னர் தோன்றிய சலசலப்பிற் கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. இடைப்பட்ட தேர்தல் காலத்தில், அவருக்கு எதிராக கூட்டமைப்பில் சிலரே அடிமட்டப் பிரசாரம் செய்து வந்ததாகக் கூறப்பட்ட வதந்திக ளுக்கும் இத்துடன் முடிவு ஏற்படும்.

### அனந்தியும், ஆனந்த சங்கரியும்

ஆனால், இதுவே பிற வேட்பாளர் களின் 'விருப்பு வாக்குகளுக்கும்' பொருந்தும் என்று கூறிவிடமுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. முக்கியமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரான வீ. ஆனந்தசங்கரியின் படுதோல்வி கூறும் செய்தி சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இனப்போர் முடிந்த காலத்திற்குப் பின்னர் நடந்தேறிய உள்ளூராட்சித் தேர்தலிலும் சங்கரியும் அவரது கட்சியும் இத்தகைய முடிவையே சந்தித்தனர்.

இந்தமுறை, சங்கரி கூட்டமைப்பின் அங்கமாகப் போட்டியிட்டும் வெற்றிபெறவில்லை என்பது கூட சில-பல செய்திகளை உள்ளடக்கியது. கூட்டமைப்பு தன்னை முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்யவில்லை என்பது குறித்து மூத்த தமிழ்த் தலைவர்களில் ஒருவரான சங்கரி வருத்தம் கொண்டிருந்தார் என்பது தெரிந்த விடயம். ஆனால், உள்ளூராட்சித் தேர்தலில் 500 வாக்குகளுக்கும் குறைவாகவும், தற்போது மாகாண சபைத் தேர்தலில் 2000 வாக்குகளே அவர் பெற்றுள்ளது சங்கரிக்கு மட்டுமல்ல, அவரது தலைமுறையைச் சேர்ந்த பிற தமிழ்த் தலைவர்களுக்கும் கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாடு குறித்த ஒரு செய்தி.

ஆனந்தசங்கரியின் தோல்வி மட்டுமல்ல, யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பு வாக்காளர்களில் இரண்டாவது இடத்தைப் பெற்ற அனந்தியின் வாக்கு எண்ணிக்கையும் பிறிதொரு செய்தியைத் தெரிவிக்கிறது. முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் பெற்ற 1,32,000 வாக்குகளை வைத்து நோக்கும் போது, அனந்தி பெற்ற சுமார் 90,000 வாக்குகள் மூன்றில் இரண்டு பகுதியே. ஆனால், அனந்திக்குப் பின்னர் வந்த 'புளொட்' இயக்கத்தின் மூத்த தலைவர் சித்தார்த்தன் 39,000 வாக்குகளே பெற்று மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார் என்பதும் சிந்திக்க வேண்டிய விடயம். அதிலும் குறிப்பாக, முன் அரசியல் அனுபவமோ பாரம்பரியமோ இல்லாத அனந்தியின் வாக்கு எண்ணிக்கை சில கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாத ஒன்றே.

அனந்தி, இனப்போர் முடிந்த காலகட்டத்தில் 'காணாமல் போன' விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தனது கணவன் குறித்து சர்வதேச சமூகத்திடம் கேள்வி எழுப்பி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே அவருக்குக் கிடைத்த வாக்குகளும் அவரைப் போன்றே தாய், தந்தை, மகன், மகள் மற்றும் சகோதர-சகோ தரிகளை இழந்து பரிதவிக்கும் தமிழ் வாக்காளர்களின் அவல நிலையின் பிரதிபலிப்பே என்று கருதுவதற்கு இடமிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் மட்டுமே இத்துணை அளவிற்கு 'காணாமல் போனோர் பிரச்சினை' தேர்தல் பிரச்சினையாக பூதாகரமாக உருவெடுத்ததா என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாததே. அதேசமயம், இந்த வாக்குகளை 'தமிழ்த் தேசியம்' குறித்து மட்டுமே கவலை கொண்டுள்ள யாழ். அறிவு ஜீவிகளைச் சார்ந்த வாக்குகள் என்று கணக்கில் எடுத்தால், அதுவே அர்த்தமுள்ளதாக இருக்கும். கடந்த காலங்களில் 'தமிழ்த் தேசிய' வாக்குகள் சுமார் ஒரு இலட்சத்தை எட்டியிருந்தது என்பதையும் கருத்

# கூட்டமைப்பின் வெற்றியை ஜெயலலிதா ஏன் வாழ்த்தவில்லை?



இலங்கையின் வடக்கு மாகாணத்தில், முதன் முறையாக மாகாண சபைத்தேர்தல் நடைபெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றி பெற்றுள்ளதை உலக நாடுகளே வரவேற்றுள்ளன. அண்டை நாடான இந்தியாவின் மத்திய அரசும் தேர்தல் முடிவு வெளிவந்தவுடனேயே அதனை வரவேற்று அறிக்கை வெளியிட்டது. இலங்கை இனப்பிரச்சினை குறித்து, தீவிர முயற்சிகளை அன்றாடம் எடுத்து வரும் இந்திய அரசு, அடிக்கடி அறிக்கை வெளியிடுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேசமயம், இனப்போர் முடிந்த காலகட்டம் தொடங்கி, ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கைத் தமிழருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் செயலாற்றி வந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா, வட மாகாண தேர்தல் குறித்தும், கூட்டமைப்பின் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தும் கருத்துத் தெரிவிக்காததும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம். கடந்த நான்கு ஆண்டு காலத்தில், இனப்பிரச்சினை குறித்து, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் செயல்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுக்கு, ஒரு மாநில முதல்வர் என்ற வகையில் ஜெயலலிதா பலமுறை கடிதங்கள் எழுதியுள்ளார். அதுபோன்றே, மாநில சட்டசபையி லும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்கு வழி வகை செய்துள்ளார்.

இந்தியாவில், மத்திய அரசைப் பொறுத்தவரையில், இலங்கை இனப்பிரச்சினையில் தமிழர் தரப்பிற்கு கூட்டமைப்பே பிரதிநிதி என்ற நிலைப்பாட்டை, விடுதலைப் புலிகள் இயக்கம் செயல்பட்டு வந்த காலகட்டத்திலேயே எடுத்துவிட்டது. இனப்போருக்குப் பின்னால், இந்திய அரசின் கணிப்பில், கூட்டமைப்பின் முக்கியத்துவம் கூடியுள்ளதே தவிர, குறை ந்துவிடவில்லை. ஆனால், முதலமைச்சர் மற்றும் ஆளும் அ.இ.அ.தி. மு.க-வின் தலைவர் என்ற வகையில், ஜெயலலிதா கூட்டமைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஜெயலலிதாவிற்கு நேரெதிராக, தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வரும் தி.மு.க கட்சித் தலைவருமான மு. கருணாநிதி, வடக்கு மாகாண தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றியை வரவேற்றுள்ளார். மாநிலத்தில் உள்ள பிற அரசியல் கட்சித் தலைவர்களும் இனப்பிரச்சினை குறித்து தங்களது கடந்த கால நிலைப்பாட்டின் அடிப்படையிலும், தங்களுக்கு 'செய்தித் தானம்' செய்து வரும், புலம் பெயர் ந்த இலங்கைத் தமிழர் குழுக்களின் மனநிலைக்கும் ஒப்ப தேர்தல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அவர்களில் சிலர், தேர்தலுக்கு முன்னர், கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரான நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ்நாடு அரசியல் கட்சிகளின் பங்களிப்பு குறித்த விமர்சனத்தை கூட விமர்சித்தனர்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாட்டில், தமிழ்நாடு அரசியல் கட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை விடுவதும் போராட்டங்கள் நடத்துவதும் புதிதல்ல. அவர்களில் சிலர், உலகத் தமிழர் இனம் முழுமைக்கும் தன்னை மட்டுமே தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதி செயல்பட்டு வருவதும் கண்கூடு. ஒரு காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தங்களது அந்தக் கனவை சிதைத்து, அந்த இடத்தையும் பிடித்துக் கொண்டு விட்டதாக தங்களுக்குள் வெதும்பிக்கூட இருக்கலாம்.

இனப்போருக்குப் பின்னால், விடுதலைப் புலிகள் இயக்கமும் பிரபாகரனும் அழிக்கப்பட்ட நிலையில் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களிடையேயாவது, அந்தப் போட்டா-போட்டி மீண்டும் உயிர்த்து வருகிறதோ என்றும் கருத இடமிருக்கிறது. இனப்போர்தில் கொள்ள வேண்டும்.

### புரையோடிப்போன பிரச்சினை

அதேசமயம், கூட்டமைப்பு வேட்பாளர் என்ற நிலையிலும், ஓர் மூத்த தலைவர் படுதோல்வியைத் தழுவியது, கட்சிக்குள் புரையோடிப்போயிருக்கும் உள்கட்சி பூசல்களின் வெளிப்பாடு என்பதும் உண்மை. தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டத்தில், இத்தகைய பிரச்சினையை கட்சித்தலைமை முன்னின்று தீர்க்க வேண்டியிருக்கும். அதிலும் குறிப்பாக அடுத்த, பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இத்தகைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில், அதுவே கூட்டமைப்பின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு தடையாக மாறிவிடும் சூழ்நிலை உரு வாகிவிடும்.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் கூட, கூட்டமைப்பை தனிக்கட்சியாக தேர்தல் ஆணையகத்திடம் பதிவு செய்வது குறித்து அங்கு கட்சிகளுக்குள் வேறுபாடுகள் மீண்டும் தோன்றியது நினைவில் கொள்ளப்பட வேண்டும். தேர்தல் முடிவுகள், கூட்டமைப்பிற்குள் தமிழரசுக் கட்சியின் முதன்மைத்துவத்தைப் பறைசாற்றியுள்ளது என்னவோ உண்மை.

ஆனாலும், எதிர்கால அரசியலை மனதில் கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு கூட்டமைப்புத் தலைமை ஏதோ ஒரு விதத்தில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதும் அவசியம். கடந்தமுறை இந்தப் பிரச்சினை எழுந்த போது, மே மாதம் மன்னாரில் கூடி பேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் அடுத்த கட்டம் குறித்து கோடிட்டுக் காட்டியதும் குறிப்பிடத்தக்கது.

வடமாகாண அமைச்சரவை தெரிவு குறித்து முதலமைச்சராக பதவியேற்ற நீதியரசர் விக்னேஸ்வரனே முடிவு எடுப்பார் என்று கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. கூட்ட மைப்பின் தேர்தல் உத்தியில் ஆகட்டும், அதன் ஒரு பகுதியாக விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தியதில் ஆகட்டும், உட்கட்சி அரசியலில் சம்பந்தனின் அரசியல் முதிர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் தற்போதைய தேர்தல் வெற்றி நிலைநிறுத்தியுள்ளது எனலாம்.

அதேசமயம், அந்த வெற்றியின் முக்கியத்துவம் ஆண்டாண்டுகளுக்கும் நிலைக்க வேண்டுமானால், தலைமைப் பொறுப்பு, அடுத்த தலைமுறையினரிடம் முறையாகக் கையளிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்து செயல்பட்டு வருகிறார் என்றும் கருத இடமிருக்கிறது. கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை 'சிங்களப் பேரினவாதிகள்' என்று மட்டுமல்ல, இலங்கை அரசு இயந்திரத்துக்கும் மனக் கிலேசத்தைக் கொடுத்தது என்னவோ உண்மை. அதேசமயம், இனப்போர் காலத்தைய அரசியலுக்கு அப்பாற்பட்டு 'தமிழர் உரிமைக்கு' குரல்கொடுத்து வந்த நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் 'தேசியப்பட்டியல்' பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்ற மரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக்குரிய தமிழர் பிரதிநிதிகளை நேரடி அரசியலுக்கும், தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளுக்கும் முன்னிறுத்தியதன் மூலம், கூட்டமைப்பின் எதிர்காலம் இனப்போரின் கடந்த காலத்தை மட்டுமே அண்டி செயற்பட்டு வரமுடியுமா என்ற கேள்விக்கான பதிலும் கிடைத்துள்ளது எனலாம்.

### எதிர்நோக்கும் சவால்கள்

'தமிழ்த் தேசியம்' பேசுவோரை உள்ளடக்கிய வாக்கு வங்கியின் அடிப்படையில் 'தமிழர் உரிமை' மட்டுமே பேசும் விக்னேஸ்வரனை முதல்வராக்கி பெருமை சேர்த்துக் கொண்ட கூட்டமைப்பு, இந்த இரு தரப்பினரிடையே உள்ள கொள்கை ரீதியான கருத்து வேறுபாடுகளை, இடைக்காலத்தில் இல்லாமல் செய்துகொள்ள வழிமுறைகளைக் கையாண்டு அதில் வெற்றி பெறுவதும் அவசியமாகும். இல்லையென்றால், பிறிதொரு காலகட்டத்தில், 'உன்னால் நான் கெட்டேன், என்னாலும் நான் கெட்டேன்' என்று இருசாராரும் ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டு, கூட்டமைப்பு அரசு மட்டுமல்ல, கூட்டமைப்பு என்ற அரசியல் கட்சியைக் கூட இல்லாமல் செய்துவிடும் சாத்தியங்கள் உள்ளன.

எதிர்வரும் மாதங்களில், இது கொள்கை ரீதியான அரசியலுக்கும், அரசு சார்ந்த மக்கள் நலப்பணிகளுக்கும் இடையே தோன்றும் போராட்டமாக வெடிக்கும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு சித்தரிக்கப்படும் வாய்ப்பும் இல்லாமல் இல்லை. குறிப்பாக, உள்நாட்டிலும் புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் 'தமிழ்த் தேசியம்' பேசுவோர், கூட்டமைப்பின் ஒவ்வொரு அரசியல் வெற்றியும் தங்களது 'தனி நாடு' கோரிக்கையின் அடுத்த கட்ட நிகழ்ச்சி நிரலே என்பது போன்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். இதில் மாறுதல் ஏற்படுமாயின், அது அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்காது என்று கருதலாம். இது முரண்பாடுகளுக்கான முதல் வித்தாக அமையும் வாய்ப்பு உள்ளது. இதனை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

ஆனால், முதலமைச்சர் விக்னேஸ்வரனை எதிர்நோக்க இருக்கும் முதல் கேள்வி அல்லது பிரச்சினையே, அவரது அமைச்சரவைத் தேர்வு குறித்ததாக இருக்கும். முதல்வரையும் சேர்த்து ஐந்து அமைச்சர்களே என்ற நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பது பேரில், யாரைத் தொடுவது, யாரை விடுவது என்ற கேள்வியும் அந்தக் கேள்விக்கான பதிலும் சிக்கல் நிறைந்ததாகும். இல்லை என்று சொல்லிக் கொண்டாலும், மாவட்டவாரி மற்றும் ஜாதிவாரி பிரதிநிதித்துவமும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இன்று, தமிழ் மக்களின் அமோக ஆதரவு அடிப்படையில் இந்தக் கேள்விகளுக்கான பதிலைப் பின்தள்ள முடிந்தாலும், மக்களுடனான 'தேனிலவு' முடிவடையும் காலகட்டத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் முன்னிறுத்தப்படலாம். அவற்றுக்கு சிலர், தனி மனிதர் அடிப்படையில் 'தமிழ்த் தேசியம்' என்ற முலாம் பூசவும் முன்வரலாம். இதுபோன்றே, இன்று பதவியில் அமர்த்தப்படும் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் செயல்பாடுகளிலோ அல்லது நடவடிக்கைகளிலோ குறைகள் காணப்பட்டால், அவர்கள் கூட 'தமிழ்த் தேசியம்' பேச முற்படலாம். இவர்கள் குறித்து, கூட்டமைப்பு மற்றும் வடக்கு மாகாண அரசு தலைமைகள் மட்டுமல்ல, பெயர் அறியப்படாத 'தமிழ்த் தேசியம்' பேசுவோரின் பிரிந்துபட்ட, பிரிவினைவாத தலைமைகளும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

முடிந்த பின்னர் அன்றைய தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியை வசைமாரி பொழிந்த முகம் தெரியாத புலம்பெயர்ந்த தமிழர் குழுக்கள், இன்று வட மாகாணத்தில் கூட்டமைப்பின் வெற்றி குறித்து ஜெயலலிதாவின் மௌனத்தை எப்படி காண்கிறார்கள் என்பதும் கூட அறியப்பட வேண்டிய விடயம்.

புலம்பெயர்ந்த தமிழர்களாகட்டும் அவர்களை ஒத்த பிற 'தமிழ்த் தேசியவாதிகள்' ஆகட்டும், எப்போதுமே காரணம் தப்பினால் மரணம் என்ற வகையிலேயே சர்வதேச அரசியலில் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களைப் பொறுத்தவரையில், சர்வதேசமாகட்டும், தமிழ் நாடு அரசு மற்றும் அரசியல் தலைமைகள் ஆகட்டும், தங்களது கடைசிக் கட்ட குறிக்கோளுக்கு தங்களை இட்டுச் செல்லும் என்று அவர்கள் நம்பும் எந்தவொரு முன்னெடுப்பை யார் செய்தாலும் அவர்களை ஆதரிப்பதற்கு தயங்க மாட்டார்கள்.

அதேசமயம், அவர்களது இடைக்கால ஆதரவை மட்டுமே மனதில் கொண்டு, உலகத் தமிழ் இனமே தன்னை மட்டுமே தலைவராக ஏற்றுக்கொண்டு விட்டதாக யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்பதே உண்மை. என்ன தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் பிரசாரம் செய்தாலும், பிரபாகரனையே 'இனத் தலைராக' ஏற்றுக்கொள்ளாத உலகத் தமிழினம் வேறு யாரையேனும் அவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ■

### இனப் பிரச்சினை: எங்கே, எப்போது?

தேர்தல் பிரசாரத்தையும் முடிவுகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தமிழ் மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கிடைத்த முதன்முறை வாய்ப்பாக, அரசு மற்றும் அமைச்சுப் பணியை கூட்டமைப்புத் தலைமையும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் நினைத்துச் செயற்பட வேண்டும். அவ்வாறு செயல்படுவதற்கு தங்களை பழக்கப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். சொல்வது எளிது, செயல்படுத்துவது கடினம்.

மக்களின் அன்றாடத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்று மட்டுமல்ல, அவற்றைக் காரணம் காட்டி, தங்களது எதிர்கால நிதித் தேவைகளைச் சரிசெய்து கொள்ளும் சாமானிய அரசியல்வாதிகளின் வழியில் அவர்கள் செல்வார்களேயானால், அதுவே 'தமிழர் உரிமைக்' குர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்கு அடிக்கப்படும் சாவு மணியாக அமைந்துவிடும். பிற நாடுகளில், 'உரிமைக் குரல்' எழுப்பி, அதன் மூலம் தெரிந் தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு வந்த கட்சிகளின் தற்போதைய நிலைமை கற்றுக்கொடுக்கும் பாடமும் அதுவே ஆகும். இனப்பிரச்சினையின் அடிப்படையில், எங்கே இவர்கள் தவறு செய்வார்கள் என்று கண்கொத்திப் பாம்பாக குறை கூறக் காத்திருப்பவர்களின் பிடியில் சிக்காமல், நேர்மை யான, நியாயமான ஆட்சியை அளிக்க கூட்டமைப்புத் தலைமை தனது அமைச்சர்களையும் அவர்களுடன் செயல்பட இருக்கும் அதிகாரிகளையும் இனியாவது தயார்படுத்த வேண்டும்.

இவ்வாறு கூறக்காரணம் இருக்கிறது. தற்போதைய அமைச்சர் குழாத்திற்கு முன்னதாகவே, வட மாகாணத் தில், கிராமம் மற்றும் நகர சபைகளில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டுவரும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் செயல்பாடு குறித்த செய்திகள் மன நிறைவு தருவதாக இல்லை.

அடிமட்டத்தில், தவறுகளைத் திருத்துவதற்கு கூட்ட மைப்புத் தலைமை அதிக முனைப்புக் காட்டவில்லை என்றே எண்ணத்தோன்றுகிறது. இதேநிலை, மாகாண சபை அளவில் வியாபித்து விடக்கூடாது.

அதேசமயம் கொள்கை ரீதியாக, இனப்பிரச்சினை குறித்த கருத்துகள், அவற்றின் காரணமாக எழுந்துள்ள கவ லைகள் ஆகியவற்றை வட மாகாணத்தின் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசும், மத்திய அரசும் உடனிருந்து, விவாதித்து அதற்கான முடிவுகளை எடுக்க தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த விதத்தில், பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு அப் பாற்பட்ட மத்திய அரசுடனான பேச்சுவார்த்தைகளுக்கு, கூட்டமைப்பு வடக்கு மாகாண அரசையே தனது பிரதிநிதி யாகவும் செயல்கர்த்தாக்களாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்பட்சத்தில், தங்களது கடந்த காலக் கோரிக்கைகள் மற்றும் நிலைப்பாடுகள் குறித்த விட யங்களில் இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்துச் செயல் படும் மனப்பக்குவத்தை அடைவதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம்.

தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி மாகாண சபைத் தேர்தலைச் சந்தித்து மாபெ ரும் வெற்றி பெற்றுள்ள கூட்டமைப்பு, முன்னாள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியான மாகாண ஆளுநர் சந்திரசிறியுடன் சேர்ந்து செயலாற்ற முன்வந்துள்ளது வர வேற்கத்தக்கது. இது, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயல்பாட்டில் இருந்து மாறுபட்டு, 'ஒன்றுபட்ட இலங்கை யின்' அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு அந்தக் கட்சி செய லாற்றுவதற்கான முதல் அடி என்றும் கொள்ளலாம். இது குறித்து மாற்றுக்கருத்துகளும், மாற்றான வியாக்கியானங் களும் கூட இருக்கலாம்.

மத்திய அரசு தரப்பும் வட மாகாண தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொண்டு செயல்பட முன்வந்துள்ளதும் வரவேற்கத் தக்கது. அரசியல் ரீதியாக, போருக்குப் பிந்தைய வட மாகாண தேர்தல்களில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, ஆளும் கூட்டணி தோல்வியைச் சந்தித்துள் ளது. இதுவே, எதிர்கால தேசிய அரசியலில் வட மாகா ணத் தமிழ் மக்களின் எண்ணமாக தேர்தல்களில் பிரதி பலிக்குமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதல மைச்சர் விக்னேஸ்வரன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை வரவேற்கத்தக்க விடயம். வட மாகாண அமைச்சரவை பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கெடுக்கத் தயாராக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதுவும் வரவேற்கத்தக்க விடயம். அதேசமயம், கிழக்கு மாகாண சபையில், ஆளும் கூட்ட ணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் ஒருங்கிணைந்து, பதின் மூன்றாவது சட்டத் திருத்தத்தின் அடிப்படையில் மாகா ணங்களுக்கான 'அதிகாரப் பகிர்வு' முழுமையாகச் செயல் படுத்தப்பட வேண்டும் என்று அவசர அவசரமாக தீர் மானம் நிறைவேற்றி இருப்பது, முதலுக்கே மோசமாக முடியலாம்.

வடக்கு மாகாணத்தில், முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்த்தி ருந்த வெற்றி கிடைக்கவில்லை. அதேசமயம், கூட்டமைப் பிற்கு அதிகமாக வாக்களித்த தமிழர் சமூகம், கட்சி முன்னி றுத்திய ஒரே ஒரு தமிழ் பேசும் முஸ்லிம் வேட்பாளருக்கு ஆதரவாக, தேவையான 'விருப்பு வாக்குகளை' அளித்து விடவில்லை என்ற உண்மையும் மறைப்பதற்கில்லை. அந்த விதத்தில், தோல்வி அடைந்த முஸ்லிம் வேட் பாளரை தனக்குண்டான இரண்டு 'போனஸ்' ஆசனங்க ளில் ஒன்றுக்கு கூட்டமைப்பு நியமித்துள்ளது குறிப்பிடத் தக்கது.

அதேசமயம், தேர்தல் தோல்விகளை மறைப்பதற்கோ, தேசிய அரசியல் மற்றும் கிழக்கு மாகாண அரசியலை முன்னிறுத்தியோ, முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுக்கும் அரசியல் முடிவுகளுக்கு ஆழ்ந்த சிந்தனை இல்லாமல் கூட்டமைப்பு தன்னைக்கட்டுப்படுத்திக் கொண்டால், அதன் விளைவுகள் பலவாக இருக்கலாம். முன்னர், கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போதும், அங்கு அரசு அமைந்த காலகட்டத்திலும் முஸ்லிம் காங்கிரஸ் தனது அர சியல் நிலைக்கு ஏற்ற முடிவுகளையே எடுத்து கூட்டமைப் பின் கூட்டணி முஸ்தீபுகளை நிராகரித்தது.

தற்போதைய சூழ்நிலையில், இரு கட்சிகள் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அது குறித்து ஆழ்ந்து சிந்தித்து கூட்டாகச் செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல், இப்போதோ-எப் போதோ என்று சிந்திக்காமல் செயல்பட்டால், அதனால் விளையப்போவது குழப்பமே அல்லாது வேறு எதுவும் அல்ல! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தேசியவாதங்களின் மோதல்


## இன்னொரு சமாதான முயற்சி தேவைப்படக்கூடும்



கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ

அரசியல் யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டு சொல்வதானால், அண்மையில் இடம்பெற்ற மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்குப் பிறகு இலங்கை மீண்டும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. சிங்களத் தேசியவாதத்துக்கும் தமிழ்த்தேசியவாதத்துக்கும் இடையிலான துருவமயமாதல் உள்நாட்டுப் போர் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருந்ததையும் விட முனைப்பானதாக இருக்கிறது. போர் முடிந்தகையோடு 2009 இல் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டிருக்குமானால், இத்தகைய சூழ்நிலையைத் தவிர்க்கக் கூடியதாக இருந்திருக்கும். வட மாகாண சபைத்தேர்தலுடன் சேர்த்து வடமேல் மாகாண சபைக்கும் மத்திய மாகாண சபைக் கும் தேர்தல்கள் ஒரு வசதிக்காக அல்ல, மாறாக வடக்கிற்கு ஒரு சமிக்ஞையாக அல்லது ஒரு கண்ணாடியாகவே நடத்தப்பட்டன. தேர்தல் முடிவுகள் வடக்கிலும் தெற்கிலும் நாடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையே துருவமயப்பட்டுக் கிடப்பதை வெளிக்காட்டுகின்றன. இந்தத் தேசியவாதத் துருவமயத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அடுத்து நடத்தப்படக் கூடிய எந்த மாகாணசபைத் தேர்தல்களிலும் இந்தப்போக்கே, (சிலவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மேலும் கூடுதலான பெரும்பான்மையுடன்) வெளிக்காட்டப்படும்.

வரும் நாட்களில் வியக்கத்தக்க முறையில் ஏதாவது நடைபெறாத பட்சத்தில் (நாம் விரும்புகிறோமோ இல்லையோ) தற்போதைய சூழ்நிலையால் முதலில் பாதிக்கப்படுவது 'ஆட்சிமாற்றம்' என்ற கோஷமேயாகும். 'தமிழர் சுயநிர்ணயமே நாட்டின் அரசியல் விளம்பரப்பலகையின் மேல் கவிந்திருக்கும். வடமாகாணத்தில் பதிவான வாக்குகளில் 78.48 சதவீதத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்றிருக்கிறது. மாகாண சபையின் 38 ஆசனங்களில் 30 ஆசனங்களை அது கைப்பற்றியிருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மத்திய மாகாணத்தில் 59.53 சதவீதமான வாக்குகளையும் வட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் மாகாணத்தில் 66.43 சதவீத மான வாக்குகளையும் பெற்ற அதே வேளை, இருமாகாணங்களிலும் ஐக்கிய தேசியக்கட்சியினால் முறையே 38.65 சதவீத, 24.21 சதவீத வாக்குகளை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. இருமாகாணங்களிலும் 'மூன்றாவது கட்சியாக' வந்திருக்கும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யை மிகவும் தாழ்வான நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

ராஜபக்ஷ ஆட்சி நல்லறிவுடையதாக இருந்திருந்தால், போருக்குப் பிறகு 'நல்லிணக்கம்' தொடர்பில் வேறுமுறையில் செயற்பட்டிருக்க முடியும். வடமாகாண சபைத் தேர்தல் பெருந்தன்மை அல்லது விட்டுக்கொடுப்பின் ஒரு அடையாளமாக அல்ல, பிரதானமாக சர்வதேச நெருக்குதல்கள் அல்லது அக்கறைகள் காரணமாகவே நடத்தப்பட்டது. தேர்தல்களின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூடுதலான அளவு தேசியவாதப் பிரசாரங்களை செய்திருக்க வேண்டியதில்லை. ஆனால், அத்தகைய பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆளும் கட்சியை மக்கள் சிங்கள பௌத்தர்களின் முதன்மையான செல்வாக்குக் கொண்ட அரசியல் சக்தியாக விளங்கிக் கொண்டார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரங்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றி உள்ளடங்கியிருந்ததுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. (போர் வெற்றிக்கான பெருமையில் சரத்பொன்சேகாவும் உரிமை கோரிக்கொண்டார்.)





எவ்வாறெனினும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாத்திரம் குறிப்பிடத்தக்க வித்தியாசமானதாக இருந்தது. 'அல்லலுறுபவர்கள்' என்ற வகையில் அவர்கள் வெளிப்படையாகவே தேசியவாதத்தன்மை கொண்டவர்களாக இருக்கவேண்டியிருந்தது. கூட்டமைப்பு வெளியிட்ட அண்மைய தேர்தல் விஞ்ஞாபனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் திம்புக் கோட்பாடுகளையும் இல ங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக அபிலாசைகளையும் (1952) நினைவு மீட்டியமை வெறுமனே தேர்தல் பிரசாரமோ அல்லது தற்செய லானதோ அல்ல. இன்று வடக்கில் கணிசமான அளவுக்கு தமிழ்த்தேசிய வாதத்தின் ஒரு மீள் எழுச்சி காணப் படுகிறது. பிரசாரங்களின்போது புலி அடையாள மீள்விப்பு முயற்சிகள் மேலதிக சேர்க்கைகளேயாகும். சில அவதானிகள் கூறியிருப்பதைப் போன்று தேர்தல் விஞ்ஞாபனம் வரைவு ஆங்காங்கே வெட்டி ஒட்டும் ஒரு வேலையாகத் தோன்றவில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இருந்து எந்தக் குறிப்பும் சேர்க்கப்ப டாமல் விடப்பட்டமையும் திட்ட மிட்ட செயற்பாடேயாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் பிரிவினைக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதே எனது அபிப்பிராயம். ஆனால், அது சமஷ்டிக்கும் கூடுதலானதைக் கேட்கி றது. பிரதான இலக்காக சம்மேளனம் ஒன்றை (Confederation) கேட்பதா கவும் அதைக் கருதலாம். இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான அல குகளுக்கு இடையிலான 'தளர்வான ஒன்றியமாகவே சம்மேளனத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். ஆனால், இயல்பான நிச்சயமற்ற தன் மைகள் அல்லது முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பார்க் கும் போது இந்தத் தளர்வான ஒன்றி யம் எந்தவொரு நாட்டிலும் நீண்டகா லத்துக்கு செயற்பட்டதாக இல்லை. அரசியல் விவகாரங்களிலும் பொரு ளாதார விவகாரங்களிலும் மத்தியம யப்பட்ட சிந்தனையையும் செயற் பாட்டையும் பின்பற்றுவதில் ஆர்வம் கொண்ட ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுத்தவரை இந்த சமஷ்டி அல் லது சம்மேளனம் எல்லாம் அருவ ருப்பானவை. தேர்தல் வெற்றிக்குப் பிறகு யாழ்நகரில் நடத்திய செய்தி யாளர் மகாநாட்டில் உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன் 'சர்வ தேச சாசனங்கள் மற்றும் உடன்படிக் கைகளுக்கு இசைவான முறையில் எமக்கு நியாயபூர்வமான முறையில் உரித்தான அதிகாரங்களை எமது சபைக்கு வழங்குமாறு நாம் அரசாங் கத்தை வலியுறுத்துகிறோம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகா ணசபைக்கு இருக்கிற அதிகாரங்

> ஆட்சி முறைக்குள் பதித்து வைக்கப்பட்டிரு க்கும் வலிமை வாய்ந்த சிங்களத் தேசிய வாதம் சமஷ்டியையோ சம்மேளனத்தையோ அண்மைய எதிர்காலத் தில் அனுமதிக்கும் சாத்தியம் இல்லை. மறுபுறத்தில் நாம் என் னதான் தமிழர்களுக்கு பிரசங்கங்களைச் செய் தாலும் தமிழ்த் தேசிய அபிலாஷைகள் தற்போதைய மாகாண சபை முறையின் மட்டுப் பாடுகளுக்குள் திருப்திய டையப் போவதில்லை

களை அவர் குறிப்பிடவில்லை. சர்வ தேச சாசனங்கள் மற்றும் உடன்படி க்கைகளுக்கு இசைவானவையாக இருக்கக்கூடியவை என்று கருதுகிற அதிகாரங்களையே அவர் மனதில் கொண்டிருக்கிறார்.

மிகவும் வலிமை வாய்ந்ததாக விளங்குகின்றதும் அதேயளவு வலி மையுடனான இராணுவத்துடன் சேர்த்து ஆட்சிமுறைக்குள் பதித்து வைக்கப்பட்டிருக்கின்றதுமான சிங் களத் தேசியவாதம் சம்மேளனத்தை மாத்திரமல்ல, சமஷ்டியையும் கூட, அண்மைய எதிர்காலத்தில் அனும திக்கும் சாத்தியமில்லை. மறுபுறத்தில் (புலம்பெயர் தமிழர்கள் என்ற கார ணியை அல்லது தமிழ் நாட்டின் செல் வாக்கை கருத்திலெடுக்காமல் விட் டாலும் கூட) நாம் என்னதான் தமிழர்களுக்குப் பிரசங்கங்களைச் செய்தாலும் தமிழ்த்தேசிய அபிலா சைகள் தற்போதைய மாகாண சபை முறையின் மட்டுப்பாடுகளுக்குள் திருப்தியடையப் போவதில்லை. இதன் காரணத்தினால் தான் இலங்கை மீண்டும் நெருக்கடிக்குள் தள்ளப்பட் டுள்ளது.

மோதுகின்ற தேசியவாதங்களின் அடிப்படையில் நேரவிருக்கின்ற யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுகின்ற போது, பாரிய அனர்த்தமொன்றைத் தவிர்ப் பதற்கான சாத்தியப்பாடுகள் எவை என்ற கேள்வி எழுகிறது. இரு தரப்பி லும் சிலவகை மறுபரிசீலனைகள் இல்லாதபட்சத்தில் அல்லது வெளி யில் இருந்து கருத்தூன்றிய தலையீ டுகள் அல்லது உதவிகள் இல்லாத பட்சத்தில் இந்த சாத்தியப்பாடுகள் குறுகிய காலத்துக்கும் நடுத்தரகாலத் துக்கும் மிகவும் பலவீனமானவையா கவே இருக்கும் என்றே நான் கூறு வேன். தங்களது தேசியவாதங்களை இருதரப்புகளும் மறுபரிசீலனைக்குட் படுத்துவதற்கான சாத்தியமும் இல் லை. கிளப்பிவிடப்படுகின்ற தேசிய வாதங்களைப் பொறுத்தவரை தொட ர்ந்து வரக்கூடிய செயற்பாடுகள் வழ மையாக இவ்வாறு அமைவதில்லை. அறிவுசார் வாதப்பிரதிவாதங்கள் பயனுள்ளவையாக அமையக்கூடும். ஆனால், நிஜ உலகில் அவை தீர்க்க மானவையாக இருப்பதில்லை. அறி வுசார் வாதப் பிரதிவாதங்கள் ஏற்க னவே தோன்றியிருக்கின்றன. ஆனால், அவை நிலைவரங்களைத் தணிப்பதற்குப் பதிலாக, முரண் நிலையை மேலும் கடுப்பூட்டுவதற் கானவையாக இருக்கின்றன. முன்னு ணரக்கூடிய ஒரு எதிர்காலத்துக்கு முரண்நிலை நீடிக்கக்கூடிய சாத்தியங் களே இருக்கின்றன என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றை அல்லது தேர்தல் பிரசாரங்களின்போது கூறியவற்றை மனதிற்கொண்டிருக்கவில்லை என்று நம்புவதற்கில்லை. உணர்ச்சிகள் அல்லது அபிலாசைகள் கட்டவிழ்த்து விடப்படும்போது அவற்றைத் தடுத்து நிறுத்துவது சுலபமானதல்ல. இது தேசியவாதத்தின் இயல்பு. அவ்வாறு செய்வதற்கு அவர்களை வடக்கு சூழ்நிலைகள் அனுமதிக்காது. இச்சூழ்நிலைகள் பெருமளவுக்கு ராஜபக்ஷ ஆட்சியினாலேயே தோற்றுவிக்கப்பட்டவை. நல்லிணக்கத்தை விரும்புகிற எவரும் குறைந்தபட்சம் தற்போதைக்காவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 13 ஆவது திருத்தத்தைப் பற்றிப்பிடிக்க வேண்டுமென்று விரும்பியிருப்பர். ஆனால், நிலைமை அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. கூட்டமைப்பின் பேச்சுகள் மிகவும் கோட்பாட்டு ரீதியானவையாக இருக்கின்றன.

அவலமான மோதலொன்றைத் தவிர்ப்பதற்கான சாத்தியப்பாடுகள் இரு செயற்களங்களில் மாத்திரமே இருக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. முதலாவது சர்வதேச ரீதியானது. மற்றையது பொருளாதார ரீதியானது.

சர்வதேச சமூகம் என்பது ஒன்றுபட்ட அல்லது கட்டுறுதியான ஒரு அமைப்பல்ல. முக்கியமான பாதுகாப்பு காரணமொன்று இல்லாதபட்சத்தில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தலையிடமுடியாது. அத்துடன், இலங்கை விவகாரத்தில் தற்போதைய பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகள் மத்தியில் நிலவுகின்ற கடுமையான வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தலையீடொன்று பெரும்பாலும் சாத்தியமில்லை. அத்தகைய தலையீட்டுக்கான காரணமும் கூட இல்லை. ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தீர்மானங்களை நிறைவேற்றக்கூடும். ஆனால், சம்பந்தப்பட்ட தரப்புகள் மீது நெருக்குதல்களைக் கொடுப்பது அல்லது வழிக்குக் கொண்டுவரத் தூண்டுதல் கொடுப்பது என்பதைத் தவிர, உறுப்படியாக எதையும் நடைமுறைப்படுத்த அந்தப் பேரவைக்கு போதிய அதிகாரங்கள் இல்லை. பேரவையின் செயற்பாடுகள் பெருமளவுக்கு அரசாங்கத் தரப்புகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கின்றதே தவிர, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அல்லது வடமாகாண சபையுடன் தொடர்பு கொண்டு செயற்படக் கூடியவையாக இல்லை.

சர்வதேச தலையீடு அல்லது உதவி என்பது அமெரிக்கா, சீனா உட்பட சர்வதேச சமூகத்தின் முன்னணி நாடுகளின் ஆதரவுடன் இந்தியா அல்லது ஜப்பான் ஒரு மத்தியஸ்த பாத்திரத்தை வகிப்பதாகவே அர்த்தப்பட முடியும். இத்தகைய செயன்முறையில் சீனாவைச் சம்பந்தப்படுத்த அமெரிக்கா முயற்சிக்க வேண்டும். இந்த சமன்பாட்டில் (அக்கறை கொண்ட தரப்பாக இல்லாதபட்சத்தில்) நோர்வேக்கு இடமில்லை. இலங்கை மீண்டும் ஒரு போருக்குப் போக முடியாது. எனவே, அது இரண்டாவது சுற்று சமாதான முயற்சிக்கு போகவேண்டும். இத்தடவை அதில் வெற்றிபெறவும் கூடும். இத்தகையதொரு சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு சிறந்த ஒரு நாடாக (இந்தியாவின் ஆசீர்வாதங்களுடன்) ஜப்பானையே நான் நோக்குகின்றேன். மத்தியஸ்தம் அல்லது சமாதான முயற்சிகள் பற்றி பேசுவதற்கு காலம் வந்துவிடவில்லை என்று எவரும் வாதிடக் கூடும். ஆனால்,தற்போதைய சூழ்நிலையின் கீழ் அரசாங்கமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தங்களுக்குள் பேசி பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடியது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

ஏனைய சாத்தியப்பாடுகள் பொருளாதாரத்துறையிலேயே இருக்கின்றன. இலங்கை தற்போது கீழ்மட்டத்தில் இருந்து உயர்ந்த மட்டத்துக்கு முன்னேறுகிற வாய்ப்பைக் கொண்ட நடுத்தர வருமானமுடைய நாடாகும். விரிவடைகின்ற ஒரு பொருளாதாரத்தில், தோன்றுகின்ற யதார்த்தங்கள் நேர்மை வாய்ந்தமுறையில் நோக்கப்படும் பட்சத்தில் பல்வேறு பிரிவினரின் நலன்கள் கவனிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் கூடுதலாக இருக்கும். குறுகிய தேசியவாதம் அன்றி, பகுத்தறிவுவாதமே வழிநடத்துக் கோட்பாடாக அமையுமேயானால், (தீவிரவாத போக்குடைய சக்திகள் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தாவிட்டால்) பெரும்பான்மைச் சமூகத்தின் அபிலாசைகள் மாத்திரமல்ல, சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாசைகளும் கவனிக்கப்பட்டு கையாளப்படக்கூடிய ஒரு நிலை இலங்கையில் ஏற்பட முடியும். நாம் விரும்புகிறோமோ இல்லையோ இலங்கை ஒரு முதலாளித்துவ நாடு. முதலாளித்துவம் இனத்துவத்துக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை. கொடுக்கக் கூடாது. எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் திறமைக்கும் தகுதிக்கும் புதிய தொழில்துறை முயற்சிகளுக்குமே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தனது குறுகிய இனவாத சிந்தனைப் போக்கிலிருந்து ஆளும் கட்சி விலகாத பட்சத்தில், அடுத்த மட்டத்துக்கு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அதனால் இயலாமல் போகக் கூடும்.

மத்தியஸ்தர் ஒருவரைச் சம்பந்தப்படுத்தி முன்னேற்றம் காண்பதை நோக்கிய முன்முயற்சிகள் கொழும்பில் இருந்தே வர வேண்டும். யாழ்ப்பாணமும் அதற்கு சாதகமானமுறையில் பதிலிறுக்க வேண்டும். மாற்றத்துக்கான ஒரு சமிக்ஞையாக, ஜனாதிபதி வடமாகாண ஆளுநரையும் யாழ்ப்பாண இராணுவத் தளபதியையும் மாற்றவேண்டும். வடமாகாண சபையில் உள்ள ஆசனங்களில் மூன்றில் இரண்டிற்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றியிருப்பதால் ஒரு பலம் பொருந்திய நிலையில் இருந்துகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் பேச்சுவார்த்தைக்கான விருப்பத்தை வெளிக்காட்டக் கூடும். கொழும்பிடமிருந்து அதிகாரங்களைக் கோருவது மாத்திரம் பயன்தராமல் போகக்கூடும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அரசியலின் வருத்தத்திற்குரிய விடயம் அது வெளிச்சக்திகளின் கட்டுப்பாட்டுக் குள் இருப்பதாகும். இருந்த போதிலும் விக்னேஸ்வரன் மனம் திறந்து சில உண் மைகளைக் கூறியது பாராட்டுக்குரியது



பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.

# இனிமேல் முன்னோக்கிப் பயணிப்பது எப்படி?

நடந்துமுடிந்த மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் ஒரு சந்தர்ப்பமாக அல்லது நல்வாய்ப்பாக எடுத்துக்கொள்ள முடியும். அதனை ஒரு ஆபத் தாகவும் கூடக் கருதலாம். அரசாங் கமே இத்தேர்தல் முடிவுகளில் தனக்கு கிடைத்திருக்கும் நல்வாய்ப்புகளையும், எதிர்நோக்கும் ஆபத்துகளையும் வெளிப்படையாக உணர்ந்திருக்கிறதென்றே கூற வேண்டும். ஆனால் அரச ாங்கம் இந்த வேளையில் ஒரு SWOT பகுப்பாய்வு (Strengths, Weak- nesses, Oppotunities and Threats analysis) என்று சொல்வார்களே அதைச் செய்ய விரும்புமா? அவ்வாறு ஒரு பகுப்பாய்வைச் செய்யும் தகைமை அதற்கு உண்டா? தனது பலங்கள், பலவீனங்கள், நல்வாய்ப்புகள், ஆபத்துகள் என்பனவற்றை அறிவதன் மூலம் சரியான பாதையைத் தேர்ந்து இலங்கையில் சமாதானத்தையும், சுபீட்சத்தையும் கொண்டு வந்த அரசாங் கம் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகத் திற்கு உரியதே. அதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

வடமாகாணத்தேர்தல் ஒரு நல் வாய்ப்பைத் தந்திருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் வெற்றிபெற்ற போதும், வாக்காளர்கள் மிதவாதி களுக்கே தம் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். நீதியரசர் விக்னேஸ்வரனைத் தெரிவு செய்து தேர்தலில் நிறுத்திய போது தென்பகுதியின் பன்மைவாதிகள் (Pluralists) வரவேற்றிருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பு நியாயமா னது என்பதை விக்னேஸ்வரனுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகள் கிடைத் தமை நிரூபித்துள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது விக்னேஸ்வரன் மேடைகளில் உணர்ச்சியோடு முழங்கினார் என்பது உண்மையே. இது அவர் பயங்கரவாதத்திற்கு அனு தாபம் காட்டியதை உணர்த்துகிறது. இதைப்பற்றி என் நண்பன் ஒருவன் கவலை வெளியிட்டான். இதுபோன்ற தேர்தல்களில் இப்படியான பேச்சு தவிர்க்க முடியாதது என்று நான் நண்பனுக்குக்கூறி விக்னேஸ்வரனை வேட் பாளராகத் தேர்ந்தெடுத்ததை நான் ஆதரித்துப் பேசினேன். விக்னேஸ்வர னின் பேச்சில் உள்ள ஆபத்துப் பற்றி டி.பி.எஸ் ஜெயராஜ் எழுதியிருந்தார். அவர் நுண்மையாக விடயங்களைப் பார்க்கக்கூடிய ஒரு ஊடகவியலாளர். தீவிரவாதிகள் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தவர் ஒருவரையே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கருத்துடையோரும் விக்னேஸ்வரன் நியமனத்தை எதிர்த்தனர். இதனால் மேடையில் எதை எதைச் சொன்னாரோ அதற்கே விக்னேஸ்வரன் பலியாகிவிடும் ஆபத்து உண்டு

வட மாகாண தேர்தல் நல்லதொரு வாய்ப் பைத் தந்திருக்கிறது. தமிழ்த் தேசியக்கூட் டமைப்பு தேர்தலில் வெற்றிபெற்ற போதிலும் வாக்காளர்கள் மிதவாதிகளுக்கு கூடுதலான ஆதரவை வழங்கியிருக் கிறார்கள். விக்னேஸ்வரனுக்கு கிடைத்த அதிகூடிய விருப்பு வாக்குகள் இதை நிரூபிக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஜெயராஜ் எழுதியிருந்தார். இவ்வாறான விபத்தில் இலங்கையின் அரசியல்வாதிகள் பலர் சிக்கியிருக்கிறார்கள். பண்டாரநாயக்கவிற்கும் செல்வநாயகத்திற்கும் கூட இந்தத் துரதிர்ஷ்டம் நேர்ந்தது. இருந்தாலும், விக்னேஸ்வரன் விடயத்தில் நான் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன். ஏனென்றால் அவர் மேடைகளில் வீரவசனங்களைப் பொழிந்து தள்ளியபோதும், நிதானமான ஒரு மிதவாதிக்கே உரிய பொருள் பொதிந்த உண்மையை சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்தினார். 'இந்து' பத்திரிகைக்கு அவர் கொடுத்த நேர்காணல் துணிச்சலானது. அந்த நேர்காணலில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் அளவுக்கு மீறிய தலையீடு நன்மையைத் தராது என்று அவர் தெட்டத் தெளிவாகக் கூறினார்.

தமிழ் அரசியலின் வருத்தத்திற்குரிய விடயம் அது வெளிச்சக்திகளின் கட்டுப்பாட்டிற்குள் உட்பட்டிருப்பதாகும். இச்சூழ்நிலையில் விக்னேஸ்வரன் மனந்திறந்து உண்மையைக் கூறியிருப்பது பாராட்டுக்குரியது. 2009ஆம் ஆண்டில் நான் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சுக்கு 'நீங்கள் எம்மை இலங்கைத் தமிழர்களோடு பேசச் சொல்லுங்கள். அவ்வாறு கூறுவதில் நியாயம் இருக்கிறது' என்று கூறினேன் (அப்போது எமது வெளிவிவகார அமைச்சுக்கு என் மீது தேவையற்ற பயம் இருக்கவில்லை;அப்படியான தொடர்புகளைத் தடைப்படுத்தவும் இல்லை) நாங்களும் இலங்கையில் உள்ள தமிழர்களோடு பேசும் தேவை இருந்தது; அதை விரும்பினோம். ஆனால் பிரித்தானியா எங்களை TGTE (நாடுகடந்த தமிழீழ அரசு)யுடன் பேசும்படி கேட்டது எரிச்சல் ஊட்டிய விடயம். அது அவர்கள் இலங்கை மக்களைப் பற்றியல்ல தமது தேர்தல் நலன்கள், சுயநலன்கள் மீதுதான் அக்கறை கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. சம்பந்தன் கூட வெளியில் இருந்து வரும் ஆலோசனைப்படி செயற்பட்டிருக்கிறார். அவர் நல்ல மனிதர் என்பதே எனது கருத்து.

ஆனால், அவர் பலவீனமான ஒருவர். சரத் பொன்சேகாவை 2010 ஜனாதிபதித் தேர்தலில் இவர் ஆதரித்ததுகூட இப்படியான ஆலோசனைப்படிதான். விக்னேஸ்வரன் தமிழர் உரிமைகளுக்காகவும், வடக்கு மக்களின் சமத்துவத்திற்காகவும் தயங்காது உழைப்பார். ஆனால் அவர் இது போன்ற தவறுகளைச் செய்வார் என்று நான் கருதவில்லை.

நான் எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொண்டிருப்பதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு எமக்கு ஒரு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். வயம்பாவின் மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தயாசிறி ஜயசேகரவையும் சேர்த்தால் இரண்டுபேர் கிடைத்திருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் இது நல்லதொரு வாய்ப்பு ஆகும். இவர்கள் மாகாண சபையை புத்தாக்கமான முறையிலும் புத்திபூர்வமாகவும் பயன்படுத்துவார்கள், தங்கள் மக்களுக்கு நன்மையைப் பெற்றுக் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். மாகாணசபைகள் மக்களுக்கு நன்மையைக் கொடுக்க வேண்டும். மார்கா நிறுவனத்தில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் பற்றிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது. வசந்த சேனநாயக்க மாகாணத்தின் முதலமைச்சர் வாக்காளர்களின் விருப்பு வாக்குப்படி தெரிவு செய்யப்படுவது நல்லது என்று ஒரு கருத்தைச் சொன்னார். இருபது வருடங்களாக உள்ள ஒரு பெருங்குறைக்கு இது தீர்வாகலாம் என்று நானும் கூறிய போது, நண்பர் தயான் ஜெயதிலக அக்கருத்தைக் கடுமையாக எதிர்த்தார். தற்போதைய விருப்புவாக்கு முறைமீது காட்டும் இந்த மோகம் முட்டாள்தனமானது என்றார் அவர். ஏன் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவு செய்யப்படவில்லையா என்றார். நான் கூறியதைத் தவறு என்று சுட்டிக் காட்டினார்.

ஜயவிக்கிரம பெரேரா போன்ற தொலைநோக்கும் திறமையும் உள்ள முதலமைச்சர் வேறொருவரும் இன்று வரை எமக்குக்கிடைக்கவில்லை என்பது வருத்தத்திற்குரியது. நான் சொல்ல வந்த கருத்தை தயான் ஜெயதிலக உறுதிப்படுத்திவிட்டார். விக்னேஸ்வரனையும், ஜயசேகராவையும் அவர்களது மாகாண மக்கள் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்திருக்கிறார்கள். அவர்களிடம் தகைமை இருக்கிறது. மாகாணங்களை இவர்கள் இருவரும் அபிவிருத்தி செய்வார்கள். அதற்காகத் தங்கள் பதவியை உபயோகிப்பார்கள் என்று கருதுகிறேன்.

> வட பகுதி மக்கள் விக்னேஸ்வரனுக்கு உயர்தரமிக்க கூட்டாளிகளை வழங்கியிருக்கிறார்கள். அவர்களிலிருந்து மிகச் சிறந்த அமைச்சர்கள் உருவாகப் போகிறார்கள். விக்னேஸ்வரனுக்கு ஆபத்து அவரது தீவிரவாத ஆதரவாளர்களிடம் இருந்துதான் வரும். தீவிரவாதிகள் அவரை தவறான போக்கில் செல்வதற்கு தூண்டுவார்கள்

இரண்டு பேரும் சில ஆபத்துகளையும் எதிர்நோக்குகிறார்கள். தேர்தலில் தாம் செலவிட்ட பணத்தை மீளப் பெறவேண்டும் எனப் பலர் காத்துக் கிடக்கிறார்கள். ஜனாதிபதி அழுத்தங்களுக்குப் பணிந்து மக்களின் விருப்பத்துக்கு மாறானதைச் செய்யக்கூடும். தயாசிறி சுதந்திரமாகச் செயற்படுவதைத் தடுக்கலாம். (அவர் தனக்கு மக்கள் தந்த பெரும்பான்மை ஆதரவுடன் கூடிய கட்டளையை ஏற்றுச் செயற்படுவதை விட்டு பொது மக்களின் நலனில் அக்கறையற்ற பல நபர்களுக்கு தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாரத்தைக் கையளித்திருக்கிறார். இதனால் தான் இவ்வித அச்சத்தை நான் கொண்டுள்ளேன்.) இப்படி நடந்தால் வடமேல் மாகாண மக்களுக்குத்தான் நட்டம். மக்கள்படும் துன்பத்தின் எதிர்வினையை பின்னர் அரசாங்கம்தான் அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

விக்னேஸ்வரனுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. வடபகுதி மக்கள் உயர்தரமிக்க கூட்டாளிகளை அவருக்கு வழங்கியிருக்கிறார்கள். அவர்களிலிருந்து மிகச்சிறந்த அமைச்சர்கள் உருவாகப் போகிறார்கள். விக்னேஸ்வரன் எதிர்நோக்கும் ஆபத்து அவரது தீவிரவாத ஆதரவாளர்களிடமிருந்து தான் வரும். (இலங்கைக்குள் இத்தீவிரவாதிகள் ஒரு சிறுபான்மை. வெளியேயும் கூட அவர்கள் சிறுபான்மை தான் என்பது என் நம்பிக்கை. இருப்பினும், வெளியில் உள்ள புலம்பெயர்ந்தோர் செயற் பாடுகள் தீவிரம் நோக்கியவை) தீவிரவாதிகள் விக்னேஸ்வரனைத் தவறான போக்கில் செல்வதற்குத் தூண்டுவார்கள். மாகாணசபை நிர்வாகம் தன்னிடம் எந்தளவு அதிகாரம் உள்ளதோ அதனை உபயோகித்து மக்களுக்கு நன்மையைச் செய்வதில் அவர் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்குத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற பெண்மணியை இதற்காகப் பயன்படுத்தக்கூடும் என்ற ஐயம்

**அரசாங்கத்தின் மிகப்பெரிய எதிரி ரணில் விக்கிரமசிங்க என்று கூறி வந்திருக்கிறேன். அவர் திறமைமிக்க விமர்சகர் என்பதால் அல்ல. அவரைக்கண்டு அரசாங்கம் பயப்படவோ, விளிப்படையவோ தேவையில்லை. இதனால் அரசாங்கம் தூக்கம் போடுகிறது. இங்கே தான் ஆபத்து உள்ளது**

எனக்கு உண்டு. அப்பெண்மணியின் தகைமைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், அவர் விரோதம் காட்டும் போக்கில் செல்வாரோ தெரியாது. அப்படி அவர் போனால் அதற்குரிய பழியை அரசாங்கமே ஏற்க வேண்டும். அவர் மீது இப்படியொரு துஷ்பிரயோகம் நிகழ்வதை அனுமதித்திருக்கவே கூடாது. அவர் மீது வன்முறையைப் பிரயோகித்தல், போலியான பத்திரிகையை அச்சிட்டு விநியோகித்தல் என்ற அளவுக்கு இச் செய்கை போயிருக்கிறது. இவை யெல்லாம் அவருக்கு நன்மையாகவே முடிந்தன. அரசாங்கத்தில் உள்ளவர்கள் இதைச் செய்திருந்தால் இதை ஒரு முட்டாள்தனம் என்றே கருதலாம். பகுத்தறிவுப்படி பார்த்தால், தனக்கு நன்மையைத்தரும் வேலைகளை, சம்பந்தப்பட்ட நபர் அல்லவா தொடக்கி இருக்க வேண்டும். வருத்தத்திற்குரிய விடயம் என்னவென்றால் முன்யோசனையோடு புத்திபூர்வமாகச் செயற்படுகிறவர்கள் அரசாங்கத்தரப்பில் இல்லை. புத்தி பூர்வமாகச் செயற்படக்கூடியவர்களும் இந்த அத்துமீறலைத் தடுக்கும் சக்தியற்றவர்களாய் இருந்திருக்கிறார்கள். சிறிய விடயங்களில் கூட அரசாங்கம் வகைபொறுப்புக் கூறலை உறுதிசெய்யவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். இப்போது அரசாங்கம் பெருமளவிலான குற்றச் செயல்கள்,முறைகேடுகள் நடந்ததென்ற நியாயமற்ற குற்றச்சாட்டை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் நிகழ்ந்தவற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. இத்தவறு அரசாங்கத்தை ஒரு பிசாசு போன்று பின்தொடர்ந்து தொல்லை படுத்திக் கொண்டேயிருக்கும். இத் தொல்லை வடக்குக்கு மட்டும் உரியதல்ல. சரத்பொன்சேகாவின் ஜனநாயகக்கட்சியின் ஆச்சரியம் தரும் தேர்தல் பெறுபேறுகள் அரசாங்கத்திற்கு எங்கிருந்து ஆபத்து வரும் என்பதைக் குறிகாட்டுவதாய் உள்ளது. அவர் எந்தவொரு முக்கிய அரசியல் வாதியினதும் ஆதரவு இல்லாமலே 5% வாக்குகளைப் பெற்றுவிட்டார். தங்களுடைய வாக்கு வங்கியில் இருந்து பொன்சேகா பறிக்கவில்லையே என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சொல்லிக்கொள்ளலாம். அவர் ஜனதா விமுக்தி பெரமுனவின் வாக்குகளைத்தான் பறித்துக் கொண்டார் என்றும் இவ்விரு கட்சியினரும் சொல்லக்கூடும். ஆனால், உண்மை என்னவென்றால் அவர் அதிருப்தியாளர்களின் வாக்குகளைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். அதிருப்தியாளர்களின் தெரிவு தான் பொன்சேகா என்றால் எதிர்காலத்தில் அதிருப்தியாளர் எண்ணிக்கை கூடலாம் அல்லவா?

அரசாங்கத்தின் மிகப்பெரிய எதிரி ரணில் விக்கிரமசிங்க என்ற வாதத்தை நான் கூறி வந்திருக்கிறேன். ரணில் அரசாங்கத்தின் திறமைமிக்க விமர்சகர் என்பதால் அல்ல, அவர் ஒரு திறமையற்ற விமர்சகராக இருக்கின்றார். இதனால் அரசாங்கம் அவரைக் கண்டு பயப்படவோ விழிப்படையவோ தேவையில்லை. இதனால் அரசாங்கம் தூக்கம் போடுகிறது. இங்கேதான் ஆபத்து உள்ளது. ஜனாதிபதி இதுபற்றி அசட்டையாக இருக்கிறார். சந்திரிகா குமாரதுங்கவும் அசட்டையாகத் தானே இருந்தார். காமினி திசாநாயக்க கொலை செய்யப்பட்டிருக்காவிட்டால் சந்திரிகா இன்னும் திறமைமிக்க ஒரு ஜனாதிபதியாக இருந்திருப்பார் என்பதே என்னுடைய வாதம்.

ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போது ரணில் எந்தளவுக்கு திறமையற்றவர் என்பதை உணர்ந்துவிட்டது. ஆனால் அதைப் பற்றி பரவாயில்லை என்று அக்கட்சி நினைத்துக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி மக்கள் ஆதரவைப் பெற்றவராக இப்போது இருக்கிறார். ஆனால், இறுதியாக அவரின் ஆதரவுப் பலம் சரியும். அல்லது அவருக்குப் பதிலாக ஒரு வேட்பாளரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நிறுத்தும் - அந்த வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதிக்கு ஈடானவராக இருக்கமாட்டார். மக்கள் ஐ.தே. கட்சியிடம் அதிகாரத்தைக் கொடுப்பார்கள் என்ற விதமாக அவர்கள் சிந்திக்கிறார்கள். இப்போது மக்களுக்கு மாற்று வழி ஒன்று தெரிகிறது. ஐக்கிய தேசியக் கட்சி தனது தலைவரை மாற்றிக் கொள்ளாவிட்டால், சரத்பொன்சேகா பிறருடைய ஆதரவோடு முன்னேறுவார். முக்கியமாக மக்கள் விடுதலை முன்னணியின் சரித்திரம் முடிந்தது என்று எண்ணுபவர்கள் பொன்சேகா பக்கம் சாய்வார்கள். ஆதலால் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் பொன்சேகா 15% வாக்குகளைப் பெறப்போகிறார்.

ஜே.ஆர்.ஜெயவர்தன நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தி அழிவுப் பாதையில் செல்கிறார் என்ற விமர்சனத்தை நான் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக முன்வைத்தேன். ஜே.ஆர். அப்போது மூன்று எதிரிகளை உருவாக்கிக்கொண்டார். சிங்களவர் மத்தியில் உள்ள எதிர்ப்பு, தமிழர்களின் பகைமை, இந்தியாவுடனான பகைமை என்ற வகையில் அவர் மூன்று எதிரிகளை உருவாக்கினார். இந்தியா என்ற எதிரியுடன் மட்டும் சமரசம் செய்து சமாதானத்திற்கு வந்தார். அவர் உருவாக்கிய மற்ற இரு எதிரிகளையும் அவர் சமாதானப்படுத்தவேயில்லை. வக்கிரமான முறையில் அரசியல் யாப்பைத் திருத்தினார். பாதுகாப்புப் படைகளை பக்கச்சார்பான முறையில் துர்நடத்தையில் ஈடுபட வைத்தார். சிங்களவர் மத்தியிலிருந்த எதிர்ப்புச் சக்திகளை அந்நியப்படுத்தினார். தமிழர்களையும் அந்நியப்படுத்தினார். அவர் சமாதானப்படுத்திய இந்தியாவும் ஒருதவறைச் செய்தது. சிங்கள எதிர்த்தரப்போடு ஜே.ஆர் அரசு ஏதாவது வகையான இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தியிருக்க வேண்டும். (இந்தியா தமிழர்களை மட்டும் சமாதானப்படுத்த முயற்சித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அப்போது பிடிவாதமாக நின்றார்கள்).

மகிந்த ராஜபக்ஷ யாரையும் அந்நியப்படுத்தவில்லை. ஆயினும் அவரது அரசாங்கத்தில் உள்ள தனிநபர்கள் இந்தியாவையும் தமிழ் அரசியல் வாதிகளையும் அந்நியப்படுத்த தம்மாலான அனைத்தையும் செய்துள்ளார்கள். ஐக்கியதேசியக் கட்சி விடயத்தில் செய்வதற்கு எதுவும் இருக்கவில்லை. ஏனெனில் அக்கட்சி மக்களிடமிருந்து தன்னை நன்றாகவே அந்நியப்படுத்திக் கொண்டது. இப்போது ஜனாதிபதிக்கு ரணிலை விடப் பெரிய ஆபத்து ஒன்று இருக்கிறது. அவர்தன்னுடைய அரசியல் திறமைகள் யாவற்றையும் உபயோகித்து இந்தப் பேராபத்தில் இருந்து தப்பிக் கொள்ள வேண்டும். ஆகவே தான் அவர் தன்னுடைய பலம் என்ன? பலவீனம் என்ன? என்பனவற்றைச் சரியாக எடை போட வேண்டும். மக்களோடு அவருக்குள்ள புரிந்துணர்வு, ஆதரவு என்பதோடு அவர் தொடக்கி வைத்துள்ள அபிவிருத்தி வேலைகள் அவரது மிகப்பெரிய பலம். அவரால் கையாளப்படும் சுயநலம் மிக்க குறுகிய பார்வையுடைய அரசியல்வாதிகள் பக்கமிருந்துதான் அவருடைய மிகப்பெரிய பலவீனம் வருகிறது. அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை விட்டு ஜனாதிபதி தன்னிடம் உறைந்துள்ள ஆற்றல்களை வெளிக்கொணரும் வகையில் செயலாற்ற வேண்டும். ■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கின் அரசியல் 13ஆவது திருத்தத்தைச் சுற்றியே மையம் கொள்ளும். அரசாங்கத்திடமிருந்து தூர விலகாமலும் விக்னேஸ்வரனின் கூட்டமைப்பை நெருங்கி விடாமலும் இருக்கத்தக்க அமைவிட புள்ளியொன்றை காங்கிரஸ் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது



ஏ. பீர்முகம்மது

# வடமாகாண அரசியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நோக்கும் சவால்கள்



வடக்கு, வடமேல், மத்திய மாகாணங்களுக்கான தேர்தல்கள் கடந்த செப்டம்பர் 21இல் நடந்து முடிந்துள்ளன. வடமேற்கு, மத்திய மாகாணங்களில் அரசு தரப்பு வெற்றி யீட்டியது.அதேநேரம் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் கூடுதலாகப் பெற்று அமோக வெற்றி யடைந்திருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 30 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரேயொரு ஆசனத்தையும் வென்றுள்ளன. வடமாகாணம் முழுவதிலுமாக மொத்தம் 6761 வாக்குகளை மாத்திரமே பெற்று முஸ்லிம் காங்கிரஸினால் பெறக்கூடியதாக இருந்தது.

வட மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் 2 ஆசனங்களையும் கூடுதலான வாக்குகளையும் எதிர்பார்த்த முஸ்லிம் காங்கிரஸ் தனது தோல்வியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையிலான இன்னுமொரு முஸ்லிம் பங்காளிக் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸினதும் அரசாங்கத்தினதும் கெடுபிடிகளை எதிர்கொண்டு ஒரு ஆசனத்தை மன்னார் மாவட்டத்தில் பெற்றுத் திருப்தி அடைந்துள்ளது.

இந்த நிலையில், ஒரேயொரு ஆசனத்தை மட்டுமே வைத்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான வட மாகாணசபையில் எதனைச் சாதித்துவிடப் போகின்றது என்ற கேள்வி எழுகிறது. வடக்கில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு கோட்பாட்டு முன்னெடுப்புகளும் கிழக்கின் ஆதரவுடனேயே கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதை விளங்கிக் கொண்டால் கிழக்கு மாகாணசபையில் வலுவான பிடியைக் கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் வடக்கின் கோட்பாட்டு நகர்வுகளுக்கான சக்தியை வழங்கும் தேவை உள்ளது என்பதை விளங்கிக்கொள்வது கஷ்டமான விடயமல்ல. எனினும் வடமாகாணசபையில் மு.கா. எவ்வகையான சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும் என்பது பற்றி அரசியல் பள்ளிகள் இப்போது அலசமுற்பட்டுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நோக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான சவால்களை பின்வரு மாறு பட்டியல்படுத்தலாம்.

- 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பிலான அணுகு முறை.
- ஆளுநரின் செயற்பாடுகள் மீதான வெளிப்பாடுகள்
- மீள் குடியேற்றமும் காணிப் பிரச் சினையும்
- இனக்குழுமங்களுக்கிடையிலான சிறு சிறு சச்சரவுகளினால் மேலெ ழும்பும் உணர்ச்சிகரமான சூழ் நிலைகளும் அதுபற்றிய புரிந்து ணர்வுகளும்.

மேற்கூறியவற்றில் 13 ஆவது அர சியலமைப்புத் திருத்தம் பற்றிய விட யமே பாரிய சவாலாக அமையப்போ கின்றது. மாகாண சபைத் தேர்தலை அறிவிப்பதற்குச் சற்றுமுன்னரான இரண்டொரு மாதங்களில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் காணி, பொலிஸ் அதிகாரங்களில் மாற்றங் களை ஏற்படுத்த அரசு விருப்பம் கொண்டபோது முஸ்லிம் காங்கிரஸ் வெளிப்படையாக அதனை எதிர்த்த து. முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பதை அறிந்ததும் இடதுசாரி அமைச்சர்கள் தைரியமாகக் கருத்துகளை முன் வைத்து ரவூப் ஹக்கீம் அவர்களின் பின்னால் வரத்தொடங்கினர். நாட் டுக்கு வெளியில் இருந்தும் அழுத் தங்கள் வந்தன. எனவே, அரசாங்கம் 13ஆவது திருத்தத்தைத் திருத்தும் முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டு 'மாற்றுவழி' கிடைக்கும் வரை காத்துக்கிடந்தது.

இந்த நிலையில்தான் வட மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் ஊடாக ஒற்றையாட்சியின் கீழான சுயாட்சி பற்றிய அசைக்க முடியாத தமது உறு திப்பாட்டினை தமிழ் மக்கள் வெளிப் படுத்தினர். தேர்தல் முடிவுகளால் அதிர்ந்துபோன அரசாங்கம் மீண்டும் 13 ஐத் தூக்கிப் பிடித்து காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாமற் செய்யும் முயற்சியில் தீவிரமாக இறங்க வாய்ப்புகள் உண்டு. அத னால் வடக்கின் அரசியலானது 13 ஐச் சுற்றிச் சுற்றியே மையம் கொள் ளும் என்பது தெளிவாகின்றது. இந்த நிலையில் அரசாங்கத்தைப் பகைக் காமலும் திருத்தத்தை அனுமதிக்காம லும் இருக்கவே முஸ்லிம் காங்கிரஸ் விரும்பும். எனவே, அரசாங்கத்திலி ருந்து தூரம் போகாமலும் விக்னேஸ் வரனது கூட்டமைப்பை நெருங்கிவி டாமலும் இருக்கத்தக்க அமைவிடப் புள்ளியொன்றைக் கண்டுபிடிப்பதே முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

காங்கிரஸ் எதிர்நோக்கும் பிறி தொரு சவால் நிர்வாகத்தின்மீதான ஆளுநரின் தலையீடு பற்றியதாகும். தேர்தலுக்கு முன்னரும் தேர்தலில் வெற்றிபெற்ற கையோடும் ஆளுநர் அகற்றப்பட்டு அவரின் இடத்திற்கு சி வில் சமூகத்தில் இருந்து ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கையை விடுத்தது கூட்டமை ப்பு. இந்த விடயத்தில் அரசாங்கம் என்ன தீர்மானத்தை எடுக்கும் என் பது இதுவரை தெளிவாகவில்லை. கருத்தியல் ரீதியாக சிவில் சமூகத் தைச்சார்ந்த ஒருவரே ஆளுநராக நியமிக்கப்படவேண்டும் என்பதை முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள லாம். அரசாங்கம் சிவில் சமூகத்தைச் சார்ந்த ஒருவரை நியமிக்கும் நிலைப் பாட்டிற்கு வரும்போது - அவ்வா றான மாற்றமொன்றின்போது- தங்க ளோடு இணங்கிப்போகும் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டு மென்றே முஸ்லிம் காங்கிரஸ் விரும் பும். பங்காளிக் கட்சி என்றபோதிலும் ஜனாதிபதிக்கும் அவர்களுக்குமான இடைவெளி அதனைச் சாத்தியப்ப டுத்தாதிருக்கவே வாய்ப்புகள் அதி கம். நிச்சயமாக முஸ்லிம் காங்கி ரஸை தூரப்படுத்தும் ஒருவரை நியமிக்கவே வாய்ப்புண்டு. அவ்வா றான சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கி ரஸ் பல சவால்களை எதிர்நோக்க வேண்டிவரும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்க ளில் முக்கியமானது மீள்குடியேற்ற மும் காணிப் பிரச்சினையுமாகும். அபிவிருத்திக்காகவும் புனித பிரதே சம் மற்றும் புராதன ஆய்வுகள் என்ற பேரிலும் காணிகள் அரசாங்கத்தி னால் கையேற்கப்படுகின்றன. மறுபுறத்தில் 1990ஆம் ஆண்டு முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளி யேற்றப்பட்டதன் பின்னர் உருவான காணிப் பிரச்சினை பாரதூரமான தாகும். முஸ்லிம்களின் காணிகளும் கட்டிடங்களும் அபகரிக்கப்பட்டமை தொடர்பிலும் அதற்கான தீர்வொ ன்றை எட்டுவது தொடர்பிலும் விக் னேஸ்வரன் தலைமையிலான மாகாண சபையானது எவ்வகையான தீர்வினை முன்வைக்கப்போகின் றது? இந்த விடயத்தில் இரு தரப் பினரும் - ஏன் அரச தரப்பினரும் கூட - முன்வைக்கும் தீர்வுக்கான வழிகாட்டல்கள் எவை?

மேலும் மீள்குடியேற்றம் என்பது மத்திய அரசின் கைகளிலேயே உள் ளது. அதன் அமைச்சரும் கூட வன் னியைச் சேர்ந்தவர். எனவே, மீள்குடி யேற்றத்தைச்செய்தும் மீள்குடியேற் றம் செய்யாமலும் அரசியல் செய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறான சந்தர்ப் பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் பல சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும்.

மேலுள்ள சவால்களைப் போலன்றி இனக் குழுக்களுக்கு இடையிலான சச்சரவுகளும் முஸ்லிம் காங்கிரஸு க்கு சவால்களை ஏற்படுத்தவல்லன. அடிக்கடி முறுகல்நிலை காணப்படும் பிரதேசங்கள் பற்றி நாம் அறிவோம். அவ்வாறான 'உணர்ச்சிகரமான' சூழ் நிலைகள்பற்றி பூரணமான புரிந்து ணர்வு ஒன்று ஏற்படவேண்டும். சிறு சிறு பொறிகளைக் கூட பெரும் தீயாக மாற்றும் வல்லமை பெற்ற இனவாதச் சக்திகள் பற்றி நாம் பல அனுபவங்க ளைப் பெற்றிருக்கிறோம்.

இவ்வாறு மேலுள்ள பல சவால்க ளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் முகம் கொடுக்க வேண்டிவரும். துணிகர மாக அச்சந்தர்ப்பங்களை வென்றெ டுக்கும்போதும் பயனுள்ள விதத்தில் தீர்வுகளை முன்வைக்கும்போதும் நன்மையடையப்போவது வடக்கு மாகாண சபை மட்டுமல்ல கிழக்கு மாகாண சபையும்தான் என்பது அரசி யல் புரிந்தோருக்கு இலகுவில் விளங்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

சென்னையிலிருந்து
காசிநாதன்

வடக்கு மாகாணத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் தேர்தலின் தாக்கம் தமிழக அரசியல் வாதிகள் மத்தியிலும் இல்லாமல் இல்லை.'தமிழ் மக்கள் தனி ஈழத்திற்காகவே வாக்களித்துள்ளார்கள்' என்றே இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தில் போராட்டங்கள் நடத்திய இயக்கங்கள் அனைத்தும் கருத்துத் தெரிவித்துள்ளன. முக்கியமாக தி.மு.க. தலைவர் கருணாநிதி, '13ஆவது அரசியல் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவோ, 'இது சிங்கள அரசுக்கு எதிரான தீர்ப்பு. ஆனால், மாகாண சபை தமிழர்களுக்குத் தீர்வாகாது' என்று கூறியிருக்கிறார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், 'தமிழர்களுக்கு நேர்மையான தேர்தல் நடைபெற்றதற்கு காங்கிரஸின் முயற்சியே காரணம்' என்று பெருமை தட்டிக் கொண்டார்கள். ஆனால், தமிழக முதல்வர் ஜெயலலிதாவோ இந்த வடமாகாணத் தேர்தல் குறித்து கருத்துச் சொல்லவில்லை. அதேசமயத்தில் 'நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான்' 'பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ்' போன்றோரும் தனித் தமிழ் ஈழத்தை மையப்படுத்தியே வட மாகாணத் தேர்தல் குறித்து கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

இந்நிலையில் வட மாகாணத் தேர்தல் நடந்தது, அங்கு தமிழர்களுக்கு கிடைத்த வெற்றி, முதல்வர் விக்னேஸ்வரன் தலைமையில் அமையப் போகும் அரசு என்ன செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அரசியல் விமர்சகர்கள், இலங்கைப் பிரச்சினையில் வல்லுனர்கள், மூத்த பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோரிடம் 'சமகாலம்' பத்திரிகைக்காக கருத்துக் கேட்டோம். அதே போல் தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடும் இயங்கங்களை எல்லாம் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அதன் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் பழ. நெடுமாறனிடமும் கருத்துக் கேட்டோம். இதோ அவர்கள் கருத்துகள் இங்கே!

வடமாகாணத் தமிழர்கள் மிகத் தெளிவான தீர்ப்பினை வழங்கியிருக்கிறார்கள். 1977ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும், உள்ளாட்சித் தேர்தல்களிலும் அளித்த தீர்ப்புகளை அப்படியே பின்பற்றி இப்போதும் தீர்ப்பளித்துள்ளார்கள். இராணுவக் கெடுபிடி, மிரட்டல், காடையர்களின் தாக்குதல் ஆகிய எல்லாவற்றிற்கும் அஞ்சாமல் துணி ந்து வாக்களித்துள் ளார்கள். தேர்தலுக்குப் பின்னால் மீண்டும் இராணுவத்தின் ஒடுக்கு முறைகளுக்கு ஆளாக நேரிடும் என்பதை நன்கு உணர்ந்தே அவர்கள் துணிந்து வாக்குச்சாவடிக்குச் சென்று ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள். அந்த மக்களை நான் மனமாறப் பாராட்டுகிறேன்.

உலக நாடுகளுக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் இந்தத் தீர்ப்பின் மூலம் அவர்கள் தெரிவித்துள்ள செய்தி இதுதான். எவ்வளவோ துன்பங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் நடுவே நாங்கள் அளித்துள்ள இந்தத் தீர்ப்பினை ராஜபக்ஷ மதிக்காமல் போகலாம். இந்தியாவும், உலக நாடுகளும் இதில் தலையிட்டு ஜனநாயக ரீதியில் நாங்கள் அளித்துள்ள இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் எங்களுக்கு அமைதியும், உரிமைகளும் மற்றும் எங்களை நாங்களே ஆண்டு கொள்ளும் அதிகாரங்களும் அளிக்கப்பட உலக சமுதாயம் முன்வர வேண்டும். ராஜபக்ஷவுக்கு உரிய அழுத்தம் கொடுத்து இதைச் செய்ய வேண்டும் என்றுதான் மக்கள் அளித்துள்ள தீர்ப்பின் பொருளாகும். ■



**பழ.நெடுமாறன்**
தலைவர், தமிழ்த் தேசிய இயக்கம்
ஒருங்கிணைப்பாளர், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்
வி. சூர்யநாராயண்
ஓய்வு பெற்ற மூத்த பேராசிரியர்
சென்னை பல்கலைக்கழகம்



இலங்கையில் உள்ள வட மாகாணம், வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களில் தேர்தல் நடைபெற்றது. வட மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் இலங்கையில் உள்ள ஆளும் ஐக்கிய சுதந்திர மக்கள் கட்சி 60 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், வடக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழர்களின் கட்சி 80 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளது. இது தமிழர்கள் இன ரீதியாக ஒருமுகப்பட்டு வாக்களித்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையை ஆட்சி செய்யும் கட்சி தமிழர் பகுதிகளில் வெற்றி பெற முடியவில்லை. இந்த 'இன ஒருமுகப்படுத்தல்' (அதாவது எத்னிக் போலரைஸேசன்) இலங்கை என்ற நாட்டிற்கு நல்லதல்ல. இந்தச் சூழ்நிலையை உடனடியாகச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு அங்குள்ள ஆளுங்கட்சிக்கு இருக்கிறது. ஆளுங்கட்சியும், அதன் தலைவராக இருக்கும் ராஜபக்ஷவும், போருக்குப்பின் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை முன்னிலைப் படுத்தினார்கள். பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை முன்னிலைப்படுத்தியே பிரசாரம் செய்தார். பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் நடந்தது. மக்களை மீளக்குடியமர்த்துவதும் நடந்தது. ஆனாலும் தமிழர்கள் அரசை ஆதரிக்கவில்லை. ஆளுங்கட்சிக்கு வாக்களிக்கவில்லை. இது எதைக் காட்டுகிறது? பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் தமிழர்களின் மனதை வெற்றி காணமுடியவில்லை என்பதைத்தான் உணர்த்துகிறது.தமிழர்கள் தங்கள் அடையாளத்தை உறுதி செய்து கொள்ளவும், அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்றும் நினைக்கிறார்கள் என்பதையே இந்தத் தேர்தல் முடிவு எடுத்துக்காட்டுகிறது.

வடமாகாணத்தில் தமிழர்களின் தலைமையில் அரசு அமைகிறது. ஏற்கனவே தமிழக மீனவர்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. மீன்பிடிக்கும் பகுதியில் உள்ள உரிமை என்பது இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்களுக்கும், தமிழக மீனவர்களுக்கும் இருக்கிறது. இதற்கு உரிய முறையில் பேச்சுவார்த்தை நடத்தியே தீர்வு காண முடியும். ■

இலங்கை வட மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தல் ஒரு நல்ல தொடக்கம். ஜனநாயக வழிமுறைகளில் பெரும்பாலான தமிழர்களுக்கு நம்பிக்கை இருப்பதை இந்தத் தேர்தலில் சுமார் 70 சதவிகிதம் பேர் பங்கேற்றது காட்டுகிறது. அடுத்தபடியாக, தேர்தல் முடிவுகளில் இலங்கையை ஆளும் ராஜபக்ஷவின் கட்சியைப் பெருவாரியாக நிராகரித்து மக்கள் வாக்களித்தது, தேர்தல் பாரபட்சமின்றி நடத்தப்பட்டிருப்பதன் முக்கிய அடையாளமாகும். இவையெல்லாம் நம்பிக்கையூட்டும் போக்குகள்.


புதிய வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தேர்தலுக்கு முன்னும் பின்னரும் பேசிவரும் கருத்துகள், அவர் நிதானமும் பக்குவமும் அதே சமயம் தமிழர்களின் உடனடி நீண்ட காலத்தேவைகள் என்ன என்ற புரிதலுமுடையவர் என்பதைக் காட்டுகின்றன. இராணுவத்தை வடக்குப் பகுதியிலிருந்து குறைப்பது, மறுவாழ்வுக்கான நிலம் வீட்டு வசதிகளை எல்லாத் தமிழர்களுக்கும் விரைந்து ஏற்படுத்துவது, அரசியல் சட்டத்தில் சம உரிமைகளுக்காக வலியுறுத்துவது ஆகிய முக்கிய பிரச்சினைகளில், விக்னேஸ்வரன் இலங்கையில் மத்திய அரசுடன் எப்படிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி மெல்ல மெல்ல தமிழருக்குத் தேவையானதைச் சாதிக்கிறார் என்பதுதான் இனி கவனிக்கவேண்டிய அம்சமாகும். இதில் இலங்கை அரசின் மீது அழுத்தம் தர, இந்திய அரசு உள்ளிட்ட எல்லா உலக நாடுகளின் உதவியையும் அவர் நாட வேண்டியிருக்கலாம்.



ஞானி
விமர்சகர்,
மூத்த பத்திரிகையாளர்

விக்னேஸ்வரன் போன்ற முதிர்ச்சியும் பக்குவமும் உள்ள தலைவர் உள்ளபோது தீர்வுகளை ஏற்படுத்திக் கொள்வதுதான் இலங்கை மத்திய அரசுக்கும் சிறந்த வழியாகும். முப்பதாண்டுகளுக்கு முன்னால் அமிர்தலிங்கம் போன்ற மிதவாதத் தலைவர்கள் இருந்தபோது மத்திய அரசு பிரச்சினையைத் தீர்க்கத் தவறியதால், அந்தத் தலைவர்கள் மீதே அதிருப்தி அதிகரித்து அதுவே ஆயுதப் போராட்டத்துக்கும் அடுத்த முப்பது வருடப் போருக்கும் பேரழிவுக்கும் இட்டுச் சென்றதை மறக்கக்கூடாது. வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ள இதுவே சிறந்த தருணம். விக்னேஸ்வரனுக்கு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இப்போதைக்கு இருக்கும் நல்லெண்ணத்தை இலங்கை மத்திய அரசு பயன்படுத்திக் கொண்டு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதே பாடம் கற்றதன் அடையாளமாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கேர்ணல் ஹரிகரன்**
*ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி*

தமிழ்க்கூட்டமைப்பு மீதும், அவர்கள் அளித்த தேர்தல் அறிக்கை மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து இந்த வெற்றியைக் கொடுத்துள்ளார்கள். சாதாரணமாக தேர்தல் அறிக்கையைப்படித்து மக்கள் வாக்கு அளிப்பதில்லை. ஆனால், இந்தத் தேர்தல் அறிக்கை புலம்பெயர்ந்த தமிழர்களுடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அதில் தனித் தமிழ் ஈழத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர்களுக்கு தன்னுரிமை என்று மட்டும் கேட்டார்கள். அரசியல் கலப்பு இல்லாத ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தினார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள், எல்.டி.டி.ஈ, இந்தியா என்றெல்லாம் அவர்களின் கருத்துகளைப் பிரதிபலிக்காமல் நம் முடிவை நாமே தனித்து எடுக்க வேண்டும் என்ற வகையில் அந்தத் தேர்தல் அறிக்கை இருந்ததால் அது தமிழர்களிடம் ஒரு நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது.

ஏறக்குறைய 78 சதவீத தமிழர்கள் ஆதரவாக வாக்களித்து வெற்றியையும் கொடுத்து விட்டார்கள். இப்போது இலங்கை அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை விட தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் மிக முக்கியம். முதல்வராகப் போகும் விக்னேஸ்வரன் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய வேண்டும். முதலில் 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசுடன் இணக்கமான பேச்சுவார்த்தையைத் தொட ங்க வேண்டும். அதற்கு மேல் போய் அதிகாரம் பெறுவதற்கு நம் கருத்து என்ன என்பதில் தமிழர்களுக்கு தெளிவு பிறக்க வேண்டும். அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்தவோ, அதற்கும் மேல் அதிகாரம் பெறவோ முயற்சிக்கும் போது அங்குள்ள வலதுசாரி சிங்களவாதிகளின் கருத்தைக் கேட்டுத்தான் ராஜபக்ஷ முடிவு எடுப்பார். ஒன்றுபட்ட இலங்கைக்குள் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ள தமிழர்கள் அங்குள்ள சிங்களவர்களுடன் இணக்கமான உறவை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதன்மூலம் தங்களுக்கான அதிகாரங்களைப் பெற வேண்டும்.

இப்போதைக்கு தனித் தமிழ் ஈழமோ, வட்டுக்கோட்டைத் தீர்மானமோ, பிரபாகரன் புகழ் பாடுவதோ தமிழர்களுக்கு உடனடித் தீர்வுக்கு உதவாது. இப்போது தமிழர்களுக்கு உடனடித் தேவை வாழ்வாதாரப் பிரச்சினைகள், மறுவாழ்வு இல்லாமல் தடுமாறும் விதவைகளைக் காப்பாற்றுவது, ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றுவது, காணிப் பிரச்சினை, கைதானவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றி தீர விசாரித்து நடவடிக்கை எடுப்பது போன்ற தமிழர் வாழ்வு மேம்படுவதற்கான பொருளாதார மற்றும் மறுவாழ்வுத்திட்டங்களை மேற்கொள்வதே மிக முக்கியம். புதிய முதலமைச்சருக்கு அரசியல் மட்டும் போதாது. ராஜதந்திரமும் இருக்க வேண்டும். இலங்கை அரசும் இதற்கு ஒத்துழைக்கும் என்றே நம்பலாம். ■



**எஸ். முராரி**
*மூத்த பத்திரிகையாளர்*

'தனி ஈழம் பற்றிப் பேசப்போவது இல்லை' என்று வடக்கு மாகாண முதல்வராகப் போகும் விக்னேஸ்வரன் கூறியிருப்பதை முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஏனென்றால் 'பிரபாகரன் இல்லை. அதனால் தனித் தமிழ் ஈழமும் இல்லை' என்ற உண்மை நிலையை விக்னேஸ்வரன் புரிந்து கொண்டிருக்கிறார். அதேமாதிரி 'வெளியிலிருந்து எந்தத் தலையீட்டிற்கும் இடம் கொடுக்க மாட்டோம்' என்றும் விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். உடனே அனைவரும் அதை இந்தியா என்று நினைத்துக் கொள்வார்கள். அப்படியில்லை. அவர் சொன்னது புலம்பெயர்ந்த தமிழர்களின் தலையீடு பற்றித்தான். இன்று ஈழத் தமிழர்கள் பிரச்சினை பல்வேறு குழப்பங்களை எட்டியிருக்கிறது என்றால் அதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் தான் முக்கிய காரணம். அவர்களின் தலையீடு கூடாது என்று விக்னேஸ்வரன் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

'தேர்தல் பல நெருக்கடிக்கு இடையில் நடக்கிறது, இராணுவம் முகாமிட்டிருக்கிறது, மக்கள் வாக்களிக்க வர மாட்டார்கள்' என்றெல்லாம் பிரசாரம் செய்தார்கள். ஆனால், தமிழர்கள் வாக்களித்துள்ளார்கள். அவர்கள் சார்ந்த கட்சியை வெற்றிபெற வைத்துள்ளார்கள். இது ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி. அதிகாரப்பரவலே இல்லை என்று சிங்களக் கட்சிகள் எல்லாம் கூறிக்கொண்டிருந்த நேரத்தில் இப்போது வடக்கு மாகாண சபை கிடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கிறது. இது தமிழர்களுக்கு கிடைத்த முன்னேற்றம். மாகாண சபையை எதிர்த்தவர்கள் எல்லாம் இப்போது ஆதரித்துள்ளார்கள் என்பதே சிறப்பான முன்னேற்றம் தானே! அதிகாரம் இல்லை என்கிறார்கள். இன்று இந்தியாவில் தமிழகத்திற்கு அருகில் உள்ள பாண்டிச்சேரியில் என்ன நிலைமை? சில தினங்களுக்கு முன்பு பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி, ‘அதிகாரங்கள் எல்லாம் துணை நிலை ஆளுநரிடம் இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் இல்லை’ என்று கவலை தெரிவித்தார்.

அது போல்தான் வடக்கு மாகாண நிலையும். இப்போது மாகாண சபை உருவாகியிருக்கிறது. விரைவில் அதற்கு உரிய அதிகார மும் படிப்படியாகக் கிடைக்கும். பொலிஸ் மற்றும் நில அதிகாரங்கள் இல்லை என்கிறார்கள். இலங்கை அரசுடன் அது பற்றி பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணலாம். தமிழகத்தில் 1960-களில் தி.மு.க. தனி நாடு கேட்டது. பிறகு ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ என்ற கொள்கையை சமரசம் செய்து கொண்டு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. அதே மாதிரி தமிழர்களுக்கும் வடக்கு மாகாண சபையில் அதிகாரம் கிடைக்கும் என்று நம்பலாம்.

தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளும், அரசியல்வாதிகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசியல்மயமாக்க வேண்டாம் என்று விக்னேஸ்வரன், சம்பந்தன் போன்றோர் கூறியிருக்கிறார்கள். இதை நூறு சதவீதம் வரவேற்கிறேன். இங்குள்ள அரசியல் கட்சிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பேசுவதால் இலங்கையில் உள்ள தமிழர்கள்தான் துயரத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்களை அங்குள்ள சிங்களவர்கள் பிரிவினைவாதிகள் போல் பார்க்கிறார்கள். அது இலங்கைத் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் உதவாது. இப்போது அமைந்திருக்கும் மாகாண சபையும், முதல்வராகும் விக்னேஸ்வரனும் தமிழர்களின் வளர்ச்சிப் பாதைக்கு ஒரு முன்னோட்டம். அங்கு இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வளவோ கெடுதல்கள் நடந்து விட்டன. அதை விட இனிமேல் கெடுதல்கள் நடக்க வாய்ப்பில்லை. என்னைப் பொறுத்தமட்டில் இனி தமிழர்களுக்கு இலங்கையில் நல்லதே நடக்கும்! ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்களுக்கு பின்னரான அரசியல் நிலக்காட்சி



ஹரிம் பீரிஸ்

வடமாகாணசபைத் தேர்தல் ராஜபக்ஷ ஆட்சிகண்ட முதன் முதலான தேர்தல் தோல்வி என்று வரலாற்றில் பதிவு செய்யப்படும். மற்றைய இரு மாகாணங்களிலும் ஆளும் கட்சிக்கு கிடைத்த வெற்றியை அரசாங்கத்திற்கு அங்கீகாரம் என்பதை விட ஐ.தே.க. மீதான குற்றம் சுமத்தலாகவே பார்க்க வேண்டும்



அண்மையில் நடைபெற்ற மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களின் முடிவுகள் பெருமளவுக்கு பல அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியதைப் போன்றே அமைந்தன. வடமேல் மாகாண சபையிலும் மத்திய மாகாண சபையிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்ற அதேவேளை, வடமாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பதிவு செய்ததைக் காணக் கூடியதாக இருந்தது. தேர்தல்களையடுத்து அரசியல் நிலக்காட்சி பெருமளவுக்கு மாற்றமடையாமல் தொடர்ந்து அப்படியே இருக்கிறது. உள்நாட்டுப் போரின் முடிவுக்குப்பிறகு நடைபெற்ற 2010 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றையடுத்து நிலவிய அரசியல் இயக்கவிசையை இத்தேர்தல்கள் மாற்றியமைக்கவில்லை, பதிலாக மீளவலியுறுத்தியிருக்கின்றன.

## ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வி

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடமேல் மாகாணத்தில் 66 சதவீத வாக்குகளையும் மத்திய மாகாணத்தில் 60 சதவீத வாக்குகளையும் பெற்றிருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு இதே மாகாண சபைகளுக்கு நடைபெற்ற தேர்தல்களில் ஆளும் கட்சிமுறையே 69 சதவீத வாக்குகளையும் 59 சதவீத வாக்குகளையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில் இரு மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதன் ஒட்டுமொத்த வாக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்திருக்கிறது. மத்திய மாகாணத்தில் அதன் வாக்குகள் 59 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்ந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதற்கு முற்றிலும் மாறாக இரு மாகாணங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளின் வீதம் அரித்தெடுக்கப்பட்டிருக்கின்றது. மத்திய மாகாணத்தில் 2009 ஆம் ஆண்டு 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான வாக்குகளைப் பெற்ற ஐ.தே.க., இத்தடவை 27 சதவீத வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்திருக்கிறது. அதேவேளை, வடமேல் மாகாணத்தில் அக்கட்சியின் வாக்குகள் 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாக குறைந்திருக்கிறது. வடமேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் இத்தடவை வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஒரு இலட்சத்துக்கும் கூடுதலான அதிகரிப்பு ஏற்பட்டிருந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி 2009ஆம் ஆண்டு பெற்ற வாக்குகளையும் விட குறைவான வாக்குகளையே பெற்றுள்ளது. எனவே, அக்கட்சி ஒப்பீட்டளவில் மாத்திரமல்ல, ஒட்டு மொத்த அளவிலும் வாக்குகளை இழந்திருக்கிறது. 2009ஆம் ஆண்டு பெற்றவாக்குகளையும் விட, கூடுதலான வாக்குகளைத் தங்கள் கட்சி இத்தடவை பெறும் என்று ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தேர்தல்களுக்கு முன்பு பெருமையுடன் கூறிக்கொண்டது தவறு என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தங்களது கட்சியின் பரிதாபகரமான நிலை குறித்து ஐ.தே.க.வின் செயற்குழுவில் இருப்பவர்கள் ஆழமாகச் சிந்திப்பதே விவேகமான காரியமாக இருக்கும். வடமாகாணத்தில் ஐ.தே.க. வெறுமனே 0.6 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறது. இது அசௌகரியமான ஒரு நிலை மாத்திரமல்ல, கேலிக்குரிய நிலையுமாகும்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டு அவர் பதவி நீக்கப்பட்ட போதிலும், வெலிவேரியாவில் தூய நீர் கேட்டுப் போராடிய கிராம மக்களுக்கு எதிராக இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டு தாக்குதல் நடத்தி மூவரைக் கொலை செய்த போதிலும், மின்சாரக் கட்டணத்தை சுமார் 40 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், முஸ்லிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் வணக்கத்தலங்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த உருப்படியான எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் அத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற அனுமதிக்கின்றபோதிலும், ஆட்சியாளர்கள் தாங்கள் நியாயப்படுத்தப்படுவதாக நிச்சயமாக உணர வாய்ப்புண்டு. ஏனென்றால், இருமாகாணங்களையும் சேர்ந்த சுமார் 23 இலட்சம் வாக்காளர் மத்தியில் 60 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் ஆளும் கட்சிக்குக் கிடைத்திருக்கின்றது. இந்த வாக்குகளை அரசாங்கத்துக்கான அங்கீகாரம் என்பதை விட, ஐ.தே.க.வின் மீதான குற்றஞ்சுமத்தலாகவே பார்க்க வேண்டும்.



ஜெனரல் பொன்சேகாவை சிறையிலிருந்து விடுதலை செய்தபோது மெடமுலானயின் சாணக்கியன் போட்ட கணிப்பு மிகவும் சரியானது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பொன்சேகா எதிரணியின் வாக்குகளை பிளவுபடுத்தி ஐ.தே.க.வின் வாக்கு வங்கியை அரித்தெடுத்து ஏற்கனவே திறமையற்றதாக இருக்கும் எதிரணியை மேலும் பலவீனப் படுத்தியிருக்கிறார்

## வடக்கில் கூட்டமைப்பின் மகத்தான வெற்றி

2013 வடமாகாணசபைத் தேர்தல் ராஜபக்ஷ ஆட்சி கண்ட முதன்முதலான தேர்தல் தோல்வி என்று வரலாற்றில் பதிவு செய்யப்படும். தோல்வி பெரிதாகவும் இருக்கிறது. இராஜவரோதயம் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வடக்கில் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. மக்களின் வாக்குகளில் ஐந்தில் நான்கு பங்கை (78.5 சதவீதம்)ப் பெற்றிருக்கும் கூட்டமைப்புக்கு அந்த மாகாணசபையின் மொத்தம் 38 ஆசனங்களில் 30 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. கூட்டமைப்புக்கு எதிராக மன்னரின் (சகல குதிரைகளும்) 'மன்னரின் சகல ஆட்களும்' பயன்படுத்தப்பட்ட போதிலும், பிராந்திய சிறுபான்மையினக்கட்சி என்ற வகையில் (சகல எதிர்பார்ப்புகளையும் விஞ்சி) பிரமிக்கத்தக்க வெற்றி அதற்குக் கிட்டியிருக்கிறது. மக்களின் வாக்குகளில் வெறுமனே 18 சதவீதத்தைப் பெற்றதன் மூலம் (ஒரு அரசாங்கம் என்றவகையில்) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடக்குத் தமிழ் மக்களிடமிருந்து எந்தளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஜனாதிபதி செயலணிக்குழுவாக இருந்தாலென்ன அல்லது ஆளுநராக இருந்தாலென்ன வடக்கில் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெடுத்திருக்கக்கூடிய ஆட்சிமுறை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அலட்சியம் செய்திருக்கிறது என்பது தெளிவானது. கூட்டமைப்பை ஈடு படுத்தத் தவறிய ஆட்சிமுறை உள் ளூர் மக்களையும் சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமை யவில்லை. வடக்கு தமிழ் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய முறையில் மாகாண சபையைச் செயற்படுத்து கின்ற விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் அதன் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களையும் கடுமையான பணிகாத்திருக்கிறது. குறிப்பாக, வடமாகாண முதலமைச்ச ராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக் னேஸ்வரனின் பணிமிகவும் சிக்கலா னதாக இருக்கும். நாட்டின் மிகப் பெரிய மாநகரசபை கொழும்பு மாநக ரசபை. அது பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசியக் கட்சியின் கட் டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. மத்திய அரசாங்கமும் மேல் மாகாண சபையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் சூழ்நிலையில், கொழும்பு மாநகர மேயர் எவ்வாறு தனது பணி களை முன்னெடுக்கின்றாரோ, அதைப்பின்பற்றிச் செயற்படவேண் டியவராக இருக்கிறார் விக்னேஸ்வ ரன்.

### ஜனநாயகக் கட்சியின் வளர்ச்சி

ஜனதாவிமுக்தி பெரமுனை மேலும் மோசமாக பலவீனப்பட்டுக் கொண்டுபோகிறது. இருமாகாண சபைகளிலும் மக்களின் வாக்குகளில் 1.5 சதவீதத்தையே அதனால் பெறக் கூடியதாக இருந்தது. அமர்ந்து கொள் வதற்கு ஜே.வி.பி.யினருக்கு அரசி யல் வெளியொன்று இல்லாமற் போயிருப்பதையே இது வெளிக்காட் டுகிறது. ஜே.வி.பி.யின் 'அரசியல் ஆடைகளை' எடுத்துக்கொண்டு ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி ஓடி விட்டதே இதற்குக் காரணமாகும்.

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஜன நாயகக் கட்சி இந்த மாகாண சபைத் தேர்தல்களில் தனது செல்வாக்கை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. இரு மாகாணங்களிலும் மக்களின் வாக்கு களில் சுமார் 4 சதவீதத்தைப் பெற்று அக்கட்சியினால் 5 ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருந்திருக்கிறது. இதன் மூலமாக இலங்கை அரசிய லில் மூன்றாவது சக்தியாக அது தன்னை நிறுத்த ஆரம்பித்திருக்கிறது. ஜெனரல் பொன்சேகாவை சிறையில் இருந்து விடுதலை செய்தபோது மெடமுலானயின் சாணக்கியன் போட்ட அரசியல் கணிப்பு மிகவும் சரி என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பொன்சேகா எதிரணியின் வாக்குக ளைப் பிளவுபடுத்தி, ஐ.தே.க.வின் வாக்குவங்கியை அரித்தெடுத்து ஏற் கனவே திறமையற்றதாக இருக்கும் எதிரணியை மேலும் பலவீனப்படுத் துவார் என்பதே அந்தக் கணிப் பாகும். ஐ.தே.க.வுக்குப் பாதகமான முறையிலேயே ஜனநாயகக் கட்சி வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்ப தைக் கூறுவதற்கு பெரிய அரசியல் ஆய்வொன்றும் தேவையில்லை. ஜெனரல் பொன்சேகாவும் ஜனநாய கக் கட்சியும் எதிரணியின் ஆதரவுத் தளத்தை அதிகரிக்கவில்லை. அவர் ஐ.தே.க. வின் வாக்குகளையே கொஞ்சம் அரித்தெடுத்திருக்கிறார். இதன் அர்த்தம் அவர் ராஜபக்ஷ ஆட் சியுடன் உருப்படியான முறையில் மோதவில்லை என்பதேயாகும்.

அடிப்படையில் இந்த மாகாண சபைத்தேர்தல்கள் அவற்றுக்கு முன் னர் நிலவிய அரசியல் யதார்த்தங்க ளையே மீளவும் வலியுறுத்தியிருக் கின்றன; வலுப்படுத்தியிருக்கின்றன. சிங்கள வாக்காளர்கள் மத்தியில் தான் பாரிய செல்வாக்கைக் கொண்டி ருப்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிக்காட்டியிருக்கும் அதே வேளை, தமிழர்கள் மத்தியில் தாங்க ளும் அதேபோன்று செல்வாக்கைக் கொண்டிருப்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் நிரூபித்திருக்கி றார்கள். இவ்விரு உண்மைகளையும் தேர்தல்களுக்கு முன்னரேயே நாம் தெரிந்திருந்தோம். தேர்தல்கள் மீள உறுதிப்படுத்தியிருக்கின்றன. அவ்வ ளவுதான். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் பொறுத்தவரை, மேலும் குறிப்பாக, ஜனாதிபதியை யும் சம்பந்தனையும் பொறுத்தவரை, அவர்கள் தங்களுக்கிடையிலான கட் டமைக்கப்பட்ட பேச்சுவார்த்தை களை ஆரம்பிக்கப்போகிறார்களா, இல்லையா என்பதே உண்மையான சவாலாக இருக்கும். இவ்விருதரப் பினரும் தங்களின் வாக்காளர்களுக் காக, ஒட்டுமொத்தத்தில் முழுநாட் டுக்காகவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்கள் என்று நம்புவோ மாக! ■

---

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

கடந்த வருடம் ஜமே கானாவைச் சேர்ந்த 22 வயதான நோறா முனிரட்டு என்ற பெண்ணைத் திருமணம் செய் தார். அவர் மூன்றாவது மனைவியா வார். முதலாவது மனைவி மொரோக் கோவைச் சேர்ந்த செய்னாப் சுமா. இரண்டாவது மனைவியின் பெயர் அலிமா சலா. இவர் சவூதி அரேபியா வுக்கான காம்பியத் தூதுவரின் மகள்.

காம்பியாவின் ஜனத் தொகையில் பெரும்பான்மையானவர்களைப் பொறுத்தவரை வார இறுதிவிடுமுறை மூன்று நாட்களாகும். அது வியாழக்கி ழமைகளில் தொடங்குகிறது. நாட் டின் பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் கூடுதலான நேரம் தொழுகை நடத்துவதற்கும் வயல்களைக் கவனிப் பதற்கும் வசதியாகவே மூன்று நாட் கள் விடுமுறை என்று ஜனாதிபதி காரணம் கூறியிருக்கிறார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசல் பெரேரா



# இலங்கை இரண்டாகவா அல்லது மூன்றாகவா பிளவுபட்டு வாழ்கிறது?

**வடக்கில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு மகத்தான வெற்றியை பெற்றுக்கொடுக்க தமிழ் மக்கள் அலையாகத் திரண்டுவந்து வாக்களித் தமை ராஜபக்ஷ ஆட்சிக்கும் இப்போது கிளர்ந்து வரும் தமிழ் உணர்வுக் கும் இடையேயான பெரிய வெளியை அம்பலப்படுத்தியிருக்கிறது**

கடந்த மாதம் தேர்தல்கள் நடைபெற்ற மூன்று மாகாணங்களும் இலங்கைச் சமுதாயத்தின் இரு மொழி, பல்லின, பலகலாசார குணாம்சத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நல்ல குறுக்குவெட்டு முகமாகும். இந்த மாகாணங்கள் அடிப்படையில் கிராமியத்தொகுதிகளைக் கொண்டவை என்றாலும் நகர மய வாழ்விடங்களையும் கணிசமான அளவுக்கு கொண்டவை.

வடமாகாணம் பிரதானமாக தமிழர்களைக் கொண்டது. இவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் இந்துக்கள். தமிழர் அரசியலின் தலைவாயிலாக விளங்கும் யாழ்ப்பாண மாவட்டம் படித்த நடுத்தரவர்க்கத்தவர்களை ஒப்பீட்டளவில் உயர்ந்த வீதத்தில் கொண்டது. அந்த மாவட்டத்தில் வாழ்பவர்களில் 98 சதவீதமானவர்கள் தமிழர்கள். அவர்களில் 82 சதவீதத்தினர் இந்துக்கள். மன்னார் மாவட்டம் வடமாகாணத்தின் ஏனைய 4 மாவட்டங்களில் இருந்தும் வேறுபட்டது. மன்னாரில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்கள் (சோனக வம்சாவளி) (16சதவீதம்) வாழ்கிறார்கள். 57 சதவீதமானவர்கள் கிறிஸ்தவ- கத்தோலிக்க மதத்தவர்கள்.

வடமேல் மாகாணம் இரு மாவட்டங்களைக் கொண்டது. இதில் குருநாகல் மாவட்டம் அதிகப் பெரும்பான்மையாக சிங்கள பௌத்தர்களையும் கணிசமான எண்ணிக்கையில் நகரப்புறவாசிகளையும் கொண்டது. புத்தளம் மாவட்டம் கணிசமானளவுக்கு முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டது. உடப்பு, முன்னேஸ்வரம் போன்ற பகுதிகளில் தமிழர்கள் சிறியளவில் செறிவாக வாழ்கிறார்கள். அத்துடன் அந்த மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு கரையோரப்பகுதிகளில் கத்தோலிக்கர்களின் பிரசன்னமும் உள்ளது. மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரை, நுவரெலியா மாவட்டம் தனித்துவமானது. அங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமானவர்களாக வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆதிக்கத்திலேயே அரசியல் இருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் நுவரெலியா மாவட்டத்தில் 6 சதவீதமாக இருக்கின்ற அதே வேளை, கிராமப்புறங்களில் வாழும் சிங்கள-பௌத்தர்கள் சுமார் 40சதவீதத்தினராக உள்ளனர். இங்கு நிருவாகமொழியாக சிங்களமே விளங்குகின்ற அதேவேளை, யாழ்ப்பாணத்தவர் பேசுகின்றதைவிட வித்தியாசமான பாணியிலேயே தமிழர்கள் தமிழை உச்சரிக்கிறார்கள்.

கண்டிமாவட்டத்தைப் பொறுத்தவரை, அது பொருளாதார ரீதியில் பலம் பொருந்திய முஸ்லிம் வர்த்தகச் செயற்பாடுகளைக் கொண்டதாக விளங்குகிறது. (1915 முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் தூண்டிவிடப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாயமைந்தது) இந்த மாவட்ட சனத்தொகையில் சுமார் 14சதவீதத்தினர் முஸ்லிம்கள். 8 சதவீதத்தினர் இந்திய வம்சாவளித் தமிழர்கள். 4சதவீதத்தினர் இலங்கைத் தமிழர்கள். மூன்றாவது மாவட்டமான மாத்தளை அதிகப்பெரும்பான்மையாக சிங்களவர்களைக்கொண்டது. சிங்களவர்கள் 80சதவீதத்தினராக இருக்கின்ற அதேவேளை, முஸ்லிம்களும் தமிழர்களும் (இந்தியவம்சாவளித் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும்) ஏறத்தாழ சமமான அளவில் வாழ்கிறார்கள்.

நடந்து முடிந்த தேர்தல்களைப் பலரும் சுதந்திரமானவை என்றும் நீதியானவை என்றும் கூறுகிறார்கள். என்றாலும் தேர்தல்களுக்கு முன்னர் பிரசாரகாலத்தில் துப்பாக்கிப் பிரயோகங்களும் குண்டர் வன்முறைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் சட்ட மீறல்களும் பரவலாக இடம்பெற்றன. இவற்றுக்குப் பெரும் பாலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி அரசியல்வாதிகளும் அவர்களின் கையாட்களுமே காரண மாயிருந்தனர். வடமாகாணத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரமிக் கத்தக்க பெரும்பான்மைப் பலத்து டன் கைப்பற்றிக் கொண்டது. ஏனைய இருமாகாணங்களையும் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வசதியான பெரும்பான்மையுடன் கைப்பற்றியது. பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய தேசியக்கட்சியின் கதி என்னாகப் போகிறது என்பதைப் பற் றியும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மாகாணசபை நிருவாகத்தை எவ் வாறு நடத்தப் போகிறது என்பதைப் பற்றியுமே எல்லோரும் பெரும் பாலும் பேசுவதைக் காணக்கூடிய தாக இருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு கடைப்பிடிக்கக் கூடிய அணுகுமுறை அதிகாரப்பகிர்வு தொடர்பில் விட்டுக் கொடுப்பைச் செய்ய ராஜபக்ஷவை நிர்ப்பந்திக் குமா என்ற கேள்வியும் எழுகிறது. ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யைப் பற்றி பெரிதாக எவரும் பேசுவதைக் காணக்கூடிய தாக இல்லை.

ராஜபக்ஷ ஆட்சி அடிப்படையில் ஒரு சிங்கள-பௌத்த ஆட்சியாகும். சிங்கள இராணுவத்தின் போர் வெற் றியின் பலத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த ஆட்சி கடந்த நான்கு வருடங்களாக சமுதாயத்தை முற்றுமுழுதாக இன-மத அடிப்படை யில் துருவமயப்படுத்திக் கொண்டி ருக்கிறது. இதைத் தேர்தல் முடிவுகள் பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன. வடமாகாணத்தில் முன்னென்றுமில் லாத அளவுக்கு தமிழ் மக்கள் அலை யாகத் திரண்டு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பிரமிக் கத்தக்க வெற்றியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதன் மூல மாக சிங்கள ராஜபக்ஷ ஆட்சிக்கும் இப்போது கிளர்ந்துவருகின்ற தமிழ் உணர்வுக்கும் இடையேயான பெரிய வெளி அம்பலப்படுத்தப்பட்டிருக்கி றது. இத்தமிழ் உணர்வு தனக்கென ஒரு அடையாளத்தை நிறுவுவதில் நாட்டம் கொண்டிருக்கிறது. சுதந்திரத் துக்குப் பின்னரான இலங்கையில் வடபகுதித் தமிழர்கள் ஒருதனித் தேசிய இனமாக சுயாதீனமாக அடை யாளத்துடன் அரசியல் ரீதியில் பிணைந்து தங்களை வெளிக்காட்டி யிருப்பது இது இரண்டாவது தடவை யாகும். முதலாவது தடவை 1977 ஜூலை பொதுத் தேர்தலாகும். அப் போது யாழ்ப்பாணம், வன்னி மாவட் டங்களில் சகல தொகுதிகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி அதிகப் பெரும்பான்மை வாக்குகள் வித்தியா

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்ட போதிலும் ஆனந்த சங்கரி கண்ட தோல்வி ராஜபக்ஷ ஆட்சியுடன் தொடர்பு களைக் கொண்டிருந் தால் எந்த வேட்பாள ருமே நிராகரிக்கப்பட வேண்டியவர் என்ற நிலைப்பாட்டில் வடக்குத் தமிழ் மக்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்திருக்கிறது

சத்தில் கைப்பற்றியது. அப்போதைய வன்னி முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய தொகுதிகளை உள்ளடக்கியதாக விளங்கியது. தற்போதைய வடமா காணம் புவியியல் ரீதியில் யாழ்ப் பாணம், வன்னி என்ற இரு பழைய மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கிறது. மாகாணசபைத் தேர்த லில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 78.4 சதவீதவாக்குகளைப் பெற்று மொத்தமுள்ள 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைக் கைப்பற்றியது. இது



சிங்கள ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிரான மிகவும் உறுதியான 'தமிழ் அடை யாள' முன்னிலைப்படுத்தலாகும்.

வடக்கில் 2011 ஜூலை உள்ளூ ராட்சித் தேர்தல்களுக்குப் பிறகு இன ரீதியான துருவமயமாதல் கடுமை யாக அதிகரித்திருப்பதையே இத்த டவை வாக்குப் பதிவுகள் உணர்த்தி நிற்கின்றன. இரு வருடங்களுக்கு முன்னர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) தலைமையிலான அரசாங்க வேட்பாளர்கள் நெடுந்தீவு (84.3 சதவீதம்), ஊர்காவற்துறை (77.5சதவீதம்) மற்றும் வேலணை (63.7 சதவீதம்)யில் உள்ளூராட்சி சபைகளில் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. காரைநகரில் 38.13 சதவீத வாக்குகளையும் வலிகாமம் பகுதி யில் உள்ள 5 உள்ளூராட்சி சபைக ளில் 19-28சதவீதம் வரையான வாக் குகளையும் அவர்களினால் பெற முடிந்தது.

வெளிநாட்டு உதவியுடனான அபி விருத்திச் செயற்பாடுகள், ராஜபக் ஷாக்கள் பெருமையுடன் உரத்துப் பேசுகிற 'வடக்கு வசந்தம்' போன்ற பிரமாண்டமான செயற்திட்டங்கள் எல்லாவற்றுக்கு மத்தியிலும் இத்த டவை தேர்தலில் ஆளும் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியும் அதன் நேச சக்தியான ஈ.பி.டி.பி.யும் துடைத் தெறியப்பட்டிருக்கின்றன. சீருடை யில்லாத இராணுவமும் என்றும் மக் களை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற துணைப்படைகளும் கூட ஆளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின் சார்பில் செயற்பட்ட போதிலும் எந்தப் பயனும் கிட்டவில்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னணி வேட்பாளர்கள் மீது வெளிப்படையாகவே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் ஈ.பி.டி.பி. க்கும் எதிரான அலையைத் திருப்பிவிட முடியவில்லை. ஈ.பி.டி.பி.யின் அதிகாரத்தளம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நெடுந்தீவு, ஊர்காவற்துறை எல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அலையில் அள்ளுண்டு போனதைக் காணக்கூடியதாக இருந்தது. கொழும்பு அரசாங்கத்துடன் எந்தவகையிலென்றாலும், தொடர்புகளைக் கொண்டிருக்கக்கூடிய சகல தமிழ் அரசியல்வாதிகளையும் வடக்கு தமிழ் வாக்காளர்கள் நிராகரித்துவிட்டார்கள்.

பழம்பெரும் அரசியல்வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தற்போதைய தலைவரான வீரசிங்கம் ஆனந்தசங்கரி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகக் களம் இறங்கிய போதிலும் கூட, கிளிநொச்சி மாவட்டத்திலும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார். உள்நாட்டுப் போர்க்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எடுத்த ஆனந்தசங்கரி தனது சொந்தப் பாதுகாப்புக்காக சிங்கள அரசாங்கத்தின் மீது தங்கியிருக்க வேண்டியிருந்தது. அவரது தோல்வி, ஒரு வேட்பாளர் எத்தகைய வரலாற்றைக் கொண்டிருந்தாலும், அவர் ராஜபக்ஷ ஆட்சியுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தால் நிராகரிக்கப்பட வேண்டியவரே என்ற நிலைப்பாட்டிலேயே வடக்குத் தமிழ் வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்திருக்கிறது.

மன்னாரில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமிருந்து முஸ்லிம்கள் தூரவிலக ஆரம்பித்திருப்பது முக்கியமாகக் கவனிக்கப்படக்கூடிய ஒரு அம்சமாகும். அங்கு சுதந்திர முன்னணியினால் ஒரேயொரு ஆசனத்தை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. அதற்குக் காரணம் முஸ்லிம் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பண பலமும் அடியாட்களின் பலமுமேயாகும். தெரிந்தெடுக்கப்பட்டவர் அமைச்சரின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால், அதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கான முஸ்லிம் வாக்குகள் என்று கருதமுடியாது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் சொந்தத்தில் மன்னாரில் 8.6சதவீத வாக்குகளைப் பெற்றது. இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெளியேயான பெரும் ஒபான்மை முஸ்லிம் வாக்குகளாகும். காங்கிரஸுக்கு அதனால் ஒரு ஆசனமே கிடைக்கக்கூடியதாக இருந்தது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும் கூட முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து தூரவிலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தில் பதவிகளில் இருக்கும் தங்கள் அரசியல்வாதிகளை அவர்கள் சற்று தொலைவிலேயே வைத்திருக்கிறார்கள். இதை வடமேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் காணக்கூடியதாக இருக்கிறது. இருமாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஒரு முஸ்லிம் வேட்பாளரும் வெற்றிபெறவில்லை. கண்டி மாவட்டத்தில் அரசாங்க அணியில் இரு எம்.பி.க்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் பிரதியமைச்சர். அவர் ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் நியமிக்கப்பட்டார். ராஜபக்ஷாக்களுக்கு மிகவும் நெருக்கமானவர். அவர்கள் கடுமையாகப் பாடுபட்டார்கள். அரசாங்கத்தின் மீது முஸ்லிம்களுக்கான நம்பிக்கை இருந்திருந்தால் முஸ்லிம் ஒருவர் எளிதாக மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்க முடியும். இனிமேலும் ராஜபக்ஷ ஆட்சியை நம்புவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராயில்லை என்பதை இது நிரூபித்து நிற்கிறது. மறுபுறத்தில், ஒருவருடத்திற்கு முன்னர் நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் போட்டியிட்ட போது முஸ்லிம் வாக்காளர்களினால் நிராகரிக்கப்பட்ட அசாத்சாலி இத்தடவை கண்டிமாவட்டத்தில் ஐக்கிய தேசியப் பட்டியலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர் கண்டியைச் சேர்ந்தவரும் அல்ல. இன்னொரு முஸ்லிம் வேட்பாளர் கண்டி ஐ.தே.க. பட்டியலில் இரண்டாவது இடத்துக்கு வந்திருக்கிறார். கிழக்கு முஸ்லிம்களால் அசாத்சாலி நிராகரிக்கப்பட்டதற்கும் இப்போது கண்டி மாவட்ட முஸ்லிம்கள் அவரைத் தெரிவு செய்ததற்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் ஹலாலுக்கு எதிரான சிங்கள-பௌத்தர்களின் பிரசாரங்களை ஆட்சேபித்து அவர் குரல்கொடுத்ததையும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. இது அவரின் வெற்றிக்கான காரணங்களை பிரகாசமாக வெளிக்காட்டுகின்றது. சிங்கள-பௌத்த தீவிரவாதத்துக்கு எதிராக முஸ்லிம் சமூகத்தின் சார்பில் துணிச்சலாக குரல்கொடுத்த அரசியல்வாதியாக முஸ்லிம்கள் அசாத்சாலியைப்

> வடமேல் மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட எந்தவொரு முஸ்லிம் வேட்பாளரும் வெற்றி பெறவில்லை. அரசாங்கத்திலிருந்து முஸ்லிம்கள் தூர விலகிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை இது பிரகாசமாக வெளிக்காட்டுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறார்கள்.

சிங்கள பௌத்த தீவிரவாதத்தை ஆதரிக்கும் ராஜபக்ஷ அரசாங்கத்துடன் சேர்ந்து நிற்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் மீதான நம்பிக்கையை முஸ்லிம் மக்கள் இழந்துவிட்டார்கள். பொதுபலசேனாவும் ராவண பலயவும் வீதிகளில் இறங்கி நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்களுக்கு பொலிஸார் உடந்தையாகச் செயற்பட்டுவந்திருக்கிறார்கள். இவ்விரு இயக்கங்களுக்கும் பாதுகாப்புத் துறைக்கும் இடையே நெருக்கமான உறவு இருக்கிறது. இதனால், ஹலாலுக்கு எதிரான பிரசாரங்களிலும் தம்புள்ள, கிராண்ட்பாஸ் உட்பட முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய தாக்குதல் சம்பவங்களிலும் அரசாங்கத்துக்கு பொறுப்பு இருக்கிறது என்ற அர்த்தமே தொனிக்கிறது. இவற்றை அரசியலில் இருந்து விலக்கிப் பார்க்க முடியாது. 'முஸ்லிம் அடையாளத்துக்கு' எதிரான அச்சுறுத்தல்களாகவே முஸ்லிம் சமுதாயம் இவற்றைப் பார்க்கிறது. பிரஜைகள் என்ற வகையில் சமத்துவமானவர்களாக நடத்தப்படுவதற்கு தங்களுக்கு இருக்கின்ற உரிமைக்கு எதிரான அச்சுறுத்தலாக இவற்றை அவர்கள் பார்க்கிறார்கள்.

இதன் விளைவாக முஸ்லிம்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் புதிய போக்கொன்று வளர ஆரம்பித்திருக்கிறது போலத் தெரிகிறது. மாளிகாவத்தை, கொம்பனித் தெரு போன்ற பகுதிகளில் உள்ள இஸ்லாமிய அமைப்புகள் சிங்கள - பௌத்த தீவிரவாதத்தை எதிர்த்து பகிரங்கமாகக் குரல்கொடுப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அரசியல்வாதிகள் உருவகப்படுத்திக் காட்ட விரும்புகின்றதையும் விட கூடுதலான அளவுக்கு வலிமையான முஸ்லிம் அடையாளத்துக்காக இந்த அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் குரல் கொடுக்கிறார்கள். பெரும்பான்மைச் சிங்கள-பௌத்த மேலாதிக்கத்துக்கு அரசாங்கம் வெளிப்படையாக அனுசரணையாகச் செயற்படுகின்ற ஒரு சூழ்நிலையில் முஸ்லிம் மக்கள் மத்தியில் வளர ஆரம்பித்திருக்கின்ற புதிய போக்கை உதிரிச்சம்பவமாகப் பார்க்க முடியாது.

வளர்ந்துவருகின்ற இந்த அடையாளப் பிரச்சினையே ராஜபக்ஷ ஆட்சியிடமிருந்து முஸ்லிம் சமூகத்தை விலகிச் செல்ல வைத்திருக்கிறது. நவம்பரில் நடைபெறவிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் உச்சிமகாநாட்டுக்குப் பிறகு மேல்மாகாணசபையும் ஊவா மற்றும் தென் மாகாணசபைகளும் கலைக்கப்படவிருப்பதாகக்கூறப்படுகிறது. அவ்வாறு கலைக்கப்பட்டு தேர்தல்கள் நடைபெறும் பட்சத்தில் முஸ்லிம்களின் துருவமயமாதல் தீவிரமடையக் கூடிய சாத்தியங்கள் தாராளமாக இருக்கின்றன. வட மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் தமிழர்கள் புவியியல் ரீதியாகப் பிரிந்துநிற்பதை ஏற்கனவே வெளிக்காட்டியிருக்கிறது.

ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுத்தவரை, அது இனவாத, மதவாத அரசியலில் இருந்து விலகப் போவதில்லை. அவர்களால் விலகவும் முடியாது. படுமோசமான ஊழல்தனமான இந்த ஆட்சியை சிங்கள - பௌத்த தொழிலதிபர்களும் வர்த்தகர்களும் உறுதியாக ஆதரிக்கிறார்கள். இவர்கள் அரச அனுசரணையுடன் சேவைகள் தொழிற்துறையில் சந்தைகளைக் கைப்பற்றுவதற்குக் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். குறிப்பாக மேல் மாகாணத்தில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வர்த்தகச் செயற்பாடுகளை முடக்கி சந்தைகளைக் கைப்பற்றுவதற்கு சிங்கள - பௌத்த வர்த்தகர்கள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுபல சேனாவும் ராவண பலயவும் முஸ்லிம் வர்த்தக நிறுவனங்களை இலக்கு வைப் பதை இந்தப் பின்னணியிலேயே நோக்க வேண்டும். சிங்கள - பௌத்த முதலாளி வர்க்கத்தினரின் ஆதரவுடனான இந்த அரசாங்கத்தினால் சிங்கள - பௌத்த தீவிரவாதத்திலிருந்து விலக முடியாது. ராஜபக்ஷ ஆட்சிக்கும் சிங்கள-பௌத்த வர்த்தக சமூகத்துக்கும் இடையே பரஸ்பர நலன்கள் சம்பந்தப்பட்ட ஒரு சகவாழ்வுதான் இது.

> **ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுத்தவரை இனவாத, மதவாத அரசியலில் இருந்து அது விலகப்போவதில்லை. விலகவும் முடியாது. பொது நலவரசு உச்சி மகாநாடு நடந்து முடிந்தபிறகு தோன்றப் போகிற அரசியல் சூழ்நிலையில் இலங்கையை ஆட்சியாளர்கள் எங்கே கொண்டு செல்லப் போகிறார்கள்? அதற்கு சிறுபான்மையினத்தவர்கள் எவ்வாறு தங்கள் பிரதிபலிப்பை வெளிக்காட்டப் போகிறார்கள்?**

பொதுநலவரசு உச்சிமகாநாடு நடந்துமுடிந்த பிறகு தோன்றப் போகிற அரசியல் சூழ்நிலையில் 'மூன்றாகப் பிளவுபட்டிருக்கும்' இலங்கையை ராஜபக்ஷ ஆட்சி எங்கே கொண்டு செல்லப்போகிறது? அதற்கு சிறு பான்மை இனத்தவர்கள் எவ்வாறு தங்கள் பிரதிபலிப்பைக் காட்டப்போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பி.பி.தேவராஜ்

# வடக்கு தேர்தல் முடிவுகள் மீள் எழுச்சிபெற்ற ஒரு சமூகத்தின் பிரகடனம்

அரசியல் களம் மாறிக் கொண்டு வருகிறது. சிங்கள மக்கள் சிங்கள –பௌத்த மேலாதிக் கம் என்ற மாயையில் இருந்தாலும் அதிலி ருந்து படிப்படியாக விடுபடுவது போல் தெரிகிறது. தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் வெற்றியும் இதற்குப் பங்களிக்கும்

தமிழ்த் தேசியத் தலைவர்கள் மிகுந்த நிதானத்துடனும் சாதுரியத்துடனும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை புதியதொரு நிலைக்கு வழிநடத்திச் செல்வார்கள் என்று நம்புவோம். ஒரு வரலாற்றுத் தேவையை பூர்த்தி செய்வதைப் போல் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறார்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம் தான். ஆனால், இந்த அளவு ஒரு பாரிய வெற்றியை அடைந்துள்ளது. அதுவும் இத்தகைய பெரும்பான்மையுடன் சாதனை படைத்திருப்பது, ஒரு வியப்பை ஏற்படுத்தி உள்ளது. இதைச் சாதாரண கணிப்பீட்டின் படி உக்கிரமான போட்டியின் மூலம் இதர அரசியல் கட்சிகளுக்கு எதிராக நடைபெற்ற தேர்தலில் பெறப்பட்ட வெற்றியென்று கருதமுடியாது. எத் தனை கோடி இன்னல்கள் ஏற்பட்டாலும் எங்களை ஒருபோதும் சிதைத்து விட முடியாது என்று மீள் எழுச்சி பெற்றுள்ள ஒரு சமூகத்தின் பிரகடனமாகவே பார்க்கவேண்டும்.

எந்த அளவுகோலை எடுத்துப் பார்த்தாலும் வடக்கு, கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தை நீண்ட பாரம்பரியமுடைய, நிலை கொண்டுள்ள சிறந்த விழுமியங்களை உருவாக்கிய ஒரு சமுதாயமாகவே காண முடியும். கல்வியால் மாண்புற்று தலைசிறந்த அறிஞர்களையும் ஆன்மிகவாதிக ளையும், நிர்வாகத்துறை சார்ந்த விற்பன்னர்களையும் சட்டமேதைகளையும் வைத்திய கலாநிதிகளையும் கல்விமான்களையும் இலங்கைக்கும், உலகிற்கும் தந்து இந்தச் சமூகம் பெருமை பெற்றிருக்கிறது. ஒரு சமூகம் எழுச்சி பெற் றுள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இத்தகைய ஒரு சமூக எழுச்சி யை கட்சிபேதம் பாராது ஒருமித்த ஒற்றுமை உணர்வுடன் நோக்கவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும்.

நீண்ட கால அனுபவங்களால் பண்பட்ட சிறந்த ஒரு தலைமைத்துவத்தை கூட் டமைப்பு பெற்றிருக்கிறது. ஒரு வரலாற்றுத் தேவையைப் பூர்த்திசெய்வது போல் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ளார். அப்பழுக்கற்ற ஒரு மாமனிதர் சகல சமூகத்தினரதும் நன்மதிப்பைப் பெற்றவர். நியாயங்களுக்கு கட்டுப்பட்டு, நியாயங்களை நிலை நிறுத்தும் பண்புமிக்கவர் - ஆற்றல்பெற்றவர். ஆன்மீகவாதச் சிந்தனையாளர், இலக்கியங்களில் ஈடுபாடுடையவர். நீதியரசர் விக்னேஸ்வரனின் வழிகாட்ட லோடு சாதுரியமிக்க தலைவரான சம்பந்தன், மாவைசேனாதிராஜா, சுரேஸ்பிரே மச்சந்திரன் போன்றோரோடு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி முழுச் சமூகத்தையும் ஒன்றிணைப்பார்கள் என்று நம்பலாம். இலங்கையில் அரசியல் சூழல் விரும்பத்தகாத முறையில் திசைமாறிக்கொண்டிருந்தாலும் மிகுந்த நிதா னத்துடனும் சாதுரியத்துடனும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இலங்கைத் தமிழ்ச் சமூகத்தை ஒரு புதிய நிலைக்கு இட்டுச்செல்வார்கள் என்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள- பௌத்த மேலாதிக்க சிந்தனைகள் இலங்கையில் வேரூன்றி அரசியலில் ஊடுருவிவிட்டது அனைவரும் அறிந்தவிடயமாகும். கடந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வாழ்ந்த அனகாரிக தர்மபால இலங்கையில் அந்நிய ஆட்சிக்கு எதிராக எழுந்த தேசியத்தை சிங்கள -பௌத்த மேலாதிக்க தேசியமாக வளர்க்கும் கோட்பாட்டை வடிவமைத்தார். அரசியலில் இரண்டறக் கலந்துவிட்ட இந்த சிங்கள-பௌத்த மேலாதிக்க தேசியம் சிறுபான்மை மக்களுக்கு எதிராக நடைபெறும் பாரபட்சத்திற்கு துணைபோய்க்கொண்டிருக்கிறது. அரசியல் அதிகாரத்திற்கு போட்டிபோட வேண்டும் என்றால் இந்தக்கருத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சிங்கள பெரும்பான்மைக் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இன்றைய அரசு ஒரு கூட்டணி அரசு. ஜனாதிபதியின் தேர்வும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியும் போர்முடிவுக்குப் பின் ஏற்பட்ட சூழ்நிலையும் சிங்கள - பௌத்த மேலாதிக்கச் சிந்தனைகளுக்கு வலுச்சேர்த்திருக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதக் கருத்துகளையுடைய விமல் வீரவன்ச, சம்பிக்கரணவக்க போன்றவர்கள் சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தையே தங்களது பிரதான கொள்கையாகக் கொண்டுள்ளார்கள். அண்மையில் ஒரு சிறுவர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விமல்வீரவன்ச, பௌத்த சிந்தனைகளுக்கும் விழுமியங்களுக்கும் அடிபணிந்து செல்வது தான் இலங்கைத் தேசியம் என்று வரைவிலக்கணம் கூறியுள்ளார். பல புதிய அமைப்புகளும் தோன்றி இதே கருத்தைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இன்றைய கூட்டணி அரசுக்கு இத்தகைய பிரசாரங்கள் தேவையாக உள்ளது. அரச அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு இதுவே சிறந்த உத்தியென்பது அரசின் கொள்கையாகவுள்ளது. மறைமுகமான ஆதரவையும் வழங்கிவருகின்றது.

போரில் வெற்றிவாகை சூடிவிட்டோம். தாங்கள் தான் சிங்கள பௌத்தத்தின் நிரந்தரக் காவலர்கள் என்று சிங்கள மக்கள் மத்தியிலே ஒரு பிரமையை தக்க வைத்துக்கொண்டிருக்க இதுவே தகுந்த வழி என்பது அரசின் போக்காக உள்ளது.

ஆனால், இதேநிலை எப்பொழுதுமே நீடித்துக்கொண்டிருக்கும் என்று எண்ண முடியாது. விமல்வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, குணதாச அமரசேகர போன்ற சிங்களத் தீவிரவாதப் பிரசாரம் செய்பவர்கள் தமிழ்த் தலைவர்கள் மீது இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி அவர்களைக் கோபமுறச் செய்து பதில் கூறும் போது அதையே பயன்படுத்தி மேலும் பிரசாரத்தில் ஈடுபடுவதை ஒரு கைவந்த கலையாகக் கொண்டுள்ளனர். இத்தகைய பிரசாரங்களை மேற்கொள்ளும் போது சிங்கள மக்கள் மத்தியிலேயே ஒரு வெறுப்புணர்ச்சியும், நகைப்புக்குரிய உணர்வும் ஏற்படும் நிலை இப்பொழுது ஏற்பட்டு வருகிறது. இது கவனத்தில் கொள்ளத்தக்கது.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக இருக்கவேண்டும் என்பது அடிக்கடி கூறும் ஒரு கருத்தாகும். கைக்கோடரியை புதைத்துவிடுங்கள். புதிய அத்தியாயத்தை ஆரம்பிப்போம் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். பழைய அநியாயங்களை மறந்துவிட முடியாவிட்டாலும் புது அத்தியாயத்தைத் தொடங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து நிதானமான முறையில் அணுகு முறைகளை வகுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவது அனைவருடைய ஆதரவையும் பெற்றுள்ளது.

அரசியல் களம் தொடர்ந்து மாறிக் கொண்டு வருகின்றது. சிங்கள மக்கள் இன்று சிங்கள - பௌத்த மேலாதிக்கம் என்ற மாயையிலிருந்தாலும் இப்பொழுது அதிலிருந்து படிப்படியாக விடுபட்டு வருவதைப் போன்று தோன்றுகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றியும் இதற்கு பங்களிக்கும்.

### மலையகத் தமிழர்கள்

மலையகத் தமிழ் மக்களின் நிலைமை வேறுபட்டது. சில மாவட்டங்களில் செறிவாகவும் பல மாவட்டங்களில் செறிவுக்குறைவாகவும் வாழுகின்ற மலையகத் தமிழரின் பிரச்சினைகளை வேறுவிதமாகத் தான் அணுக முடியும்.

நடந்து முடிந்த மத்திய மாகாண தேர்தல் நிலைவரங்களை எடுத்துப் பார்த்தால் இது நன்றாக விளங்கும்.

போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இந்த இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளுக்கும் ஈடுகொடுத்துச் செயல்பட வேண்டியுள்ளது. இடதுசாரிக் கட்சிகள் மற்றும் பேரினவாதத்தை அதன் உச்சகட்டத்திற்கு கொண்டு செல்லும் தேசியப் பற்றுள்ள தேசிய இயக்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டத்திற்குள்ளேயே செயல்படுகின்றனர். பழைய இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்கு இழந்த நிலையில் மலையகத் தமிழ் மக்கள் இரண்டு சிங்கள பெரும்பான்மைக்கட்சிகளுக்கிடையே தான் செயல்படவேண்டியுள்ளது. காலத்துக்குக் காலம் வித்தியாசமான உத்திகளைக் கையாளவேண்டியுள்ளது. ஒரு காலத்தில் இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக்கட்சியுடன் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்தது. மலையக இந்திய வம்சாவளியினரை நாடு கடத்தி விடுவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் மகள் சந்திரிக்கா காலத்தில் பல முன்னேற்றங்களைக் காணமுடிந்தது. ஜே. ஆர்.ஜெயவர்தன, பிரேமதாச காலத்தில் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. சந்திரிகா பண்டாரநாயக்கா பதவி வகித்த போது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு உருவாக்கப்பட்டது. இறுதியில் நாடற்றவர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடிந்தது. எந்தப் பெரும்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் கட்சி என்றில்லாமல் அரசியல் களநிலைக்கேற்ப யதார்த்த நிலையை அனுசரித்து மலையக மக்கள் செயல்பட்டதால் தான் இந்த அளவுக்கு முன்னேற்றமடைய முடிந்தது.

தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தொழிலாளர் சங்கம் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளுமே அரசோடு இணைந்துதான் செயல்படுகின்றன. எப்பொழுதும் போல இந்த மூன்று கட்சிகளுக்கிடையே பகைமையை மூட்டிவிட்டு குளிர் காய்வதிலே அரசில் ஆதிக்கம் பெற்றிருப்பவர்கள் குறிவைத்துக் கொண்டேயிருக்கிறார்கள். போதாதற்கு வன்முறைகள், பாரபட்சங்கள் இவை எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்துத்தான் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் இடம்பெறுகிறது.

அரசோடு இணைந்திருப்பதால் ஜனாதிபதியின் வேண்டுகோளின் படி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தேசிய தொழிலாளர் சங்கமும் போட்டியிட்டன. தனது சொந்தச் சின்னத்தில் போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணிக்கு ஆதரவு கிடைத்தது. விருப்பமில்லாவிட்டால் கூட கண்டியிலும் மாத்தளையிலும் இ.தொ.கா. தனது சொந்தச் சின்னத்தில் போட்டியிட அரசு ஏற்றுக்கொண்டது. இன்றுள்ள தேர்தல் முறைக்கேற்ப இவ்வாறு செயல்பட வேண்டியிருந்தது. எப்படியிருந்தாலும் அரசோடு இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற உடன்பாடு இருந்தது.

ஒரு சமயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மூலம் போட்டி போட்டால்தான் மலையகத் தமிழ் வேட்பாளர்கள் வெல்ல முடியும் என்று கூறப்பட்டது. அதாவது மலையகத் தமிழ் வாக்காளர்கள் யானைச் சின்னத்திற்கு பழக்கப்பட்டுவிட்டவர்கள். இதற்கு மாறின கருத்துகளை தலைவர்கள் கூறினால் கூட யானைச் சின்னத்திற்கு தான் வாக்களிப்பார்கள் என்று சொல்லப்பட்டது. யானைச் சின்னத்திலிருந்து மாற மலையக அரசியல் கட்சிகளும் விரும்பவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோட்டப்பகுதிகளிலே இனவாத அடிப்படையில் செயற்படுகின்றது என்பது மக்கள் மனதில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு கருத்தாகும்.

ஆனால், எந்தக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டாலும் தங்கள் சொந்தக் கட்சிக்கு மட்டுமே மக்கள் வாக்களிப்பார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது. சின்னம் முக்கியமல்ல தங்கள் கட்சிகளின் வேட்பாளர்களே முக்கியம் என்பதை மலையகத் தமிழ் மக்கள் மிகவும் தெளிவாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

வட மாகாணத்தில் நடந்தது போல் மலையகத்திலும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு ஆப்பு வைக்கப்பட்டது.

இது சிங்கள - பௌத்த பேரினவாதத்திற்கு தமிழ் மக்கள் காட்டிய ஒரு எதிர்ப்பின் பிரதிபலிப்பு என்று கூட கருதலாம். சிங்கள - பௌத்த மேலாதிக்கப் பேரினவாதத்தைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தால் மட்டுமே ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்ற கருத்து இப்பொழுது ஆட்டம் காணத்தொடங்கியுள்ளது. சிங்கள மக்கள் மத்தியிலேயே இந்த ஜம்பம் பலிக்காது என்ற எண்ணம் வளர்ந்து வருகிறது.

அனைத்து சமூகங்கள் மத்தியிலுள்ள நியாய உணர்வு படைத்த ஜனநாயகச் சக்திகள் வெற்றி பெறுவது நிச்சயம். ■

---

*(09ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

முயற்சிகளை மேற்கொண்டதாகக் கூறப்பட்ட போதிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை. அதேவேளை, வேலையை இழந்துவிடும் சில அரசாங்கத்துறையினருக்கு மாத்திரம் சம்பளம் வழங்க ஜனப்பிரதிநிதிகள் சபையிலும் செனட் சபையிலும் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பில்கிளின்டன் ஜனாதிபதியாக இருந்தபோது 1995ஆம் ஆண்டிலும் 1996 ஆம் ஆண்டிலும் இருதடவைகள் மூண்ட 'அரசியல் சண்டை' காரணமாக அரசாங்க நிறுவனங்கள் மூடப்பட்டன. 26 நாட்கள் நீடித்த அந்த நெருக்கடிகளின் போது அமெரிக்காவுக்கு 140 கோடி டொலர்கள் இழப்பு ஏற்பட்டது. இன்றைய பெறுமதிப்படி அது 210கோடி டொலர்களாகும்.

அன்றைய சூழ்நிலைக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் இடையே நிறைய வேறுபாடு இருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகளும் பொருளாதார நிபுணர்களும் சுட்டிக் காட்டுகிறார்கள். 1990களில் அமெரிக்கப் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி நிலையில் இருந்தது. ஆனால், இன்று அது பெரும் நெருக்கடிகளின் ஊடாகச் சென்றுகொண்டிருக்கிறது. 2000ஆம் ஆண்டுகளின பிற்பகுதியில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையில் (economic Slowdown) இருந்து அமெரிக்கா இன்னமும் மீட்சி பெறவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் அமெரிக்காவில் தோன்றியிருக்கும் நெருக்கடி அமெரிக்கப் பொருளாதாரத்தை மாத்திரமல்ல, உலகநாடுகளின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்யும். எனவே, இந்த நிலையைப் போக்குவதற்கு உடனடி முயற்சிகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஒபாமா இருக்கிறார். தனது ஆசியச்சுற்றுப் பயணத்தையும் அவர் ரத்துச் செய்திருக்கிறார்

பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தொய்வைச் சரிசெய்ய வருங்காலத்தில் நிதிச்சீர்திருத்த நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட வேண்டியிருக்கும். அதேசமயம், வருவாயை அதிகரிக்கச் செய்து கடன் நெருக்கடியைக் குறைக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட வேண்டியிருக்கும்.

இந்நிலையில் அமெரிக்காவில் கடன் உச்ச வரம்பை உயர்த்தாவிட்டால் 2008 ஆம் ஆண்டு ஏற்பட்டதைப் போன்ற அல்லது அதைவிடவும் மோசமான நிதி நெருக்கடி நிலையை அமெரிக்கா சந்திக்க நேரிடும் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, வடமாகாண சபை;

# பரந்த விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய இரு களங்கள்

பரந்த விளைவுகளைக் கொண்டு வரக்கூடிய முக்கியமான நிகழ்வுகள் இவ்வருடம் ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இடம்பெற்றன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை ஆகஸ்ட் இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். (உயர்ஸ்தானிகர் ஒரு நாட்டுக்கு மேற்கொண்டிருக்கக்கூடிய மிகவும் நீண்ட விஜயமாக இது அமைந்தது) செப்டெம்பரில் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மகத்தான வெற்றியைப் பெற்றது. வடமேல் மாகாண சபைக்கும் மத்திய மாகாண சபைக்கும் நடைபெற்ற தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரிய வெற்றியைப் பெற்றுக்கொண்டது. மாகாண சபைத் தேர்தல்களுக்குப் பிறகு ஒரு சில நாட்கள் கழித்து மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் (ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக 2013 மார்ச் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம்) வாய்மூல அறிக்கையொன்றை பேரவையில் வெளியிட்டார்.

நவநீதம்பிள்ளை தொடர்பில் தனிப்பட்ட முறையிலும் அவரது இலங்கை விஜயம் தொடர்பிலும் அரசாங்கம் எடுத்திருக்கும் நிலைப்பாடு எமது வெளியுறவுக் கொள்கை தொழில்சார் நிபுணத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் எந்தளவு தூரத்துக்கு தரம் தாழ்ந்து போயிருக்கிறது என்பதையும் சர்வதேச அரசியலையும் அடிப்படை நயநாகரீகத்தையும் விளங்கிக் கொள்ளாததாக இருக்கிறதென்பதையும் உருவகப்படுத்தி நிற்கிறது. தனிப்பட்ட முறையில் தன்னைப்பற்றி வெளியிடப்பட்ட வெறுப்பூட்டும் வகையிலான குறிப்புகள் பற்றி நாட்டைவிட்டுப் புறப்படு முன்னதாக கொழும்பில் ஐ.நா. அலுவலகத்தில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் விடுத்த அறிக்கையிலும் நவநீதம்பிள்ளை குறிப்பிடத்தவறவில்லை. கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்திருக்கும் டி.எஸ்.சேனநாயக்காவின் சிலையை அங்கிருந்து அகற்றிவிடுமாறு நவநீதம்பிள்ளை கேட்டதாகக் கூட, அபத்தத்தனமான குற்றச்சாட்டொன்றை பாதுகாப்புச் செயலாளர் முன்வைத்ததையும் காணக்கூடியதாக இருந்தது.



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தங்களைப் பாராட்டினால் அது இனிப்பானது, பாராட்டவில்லையென்றால் அது வெறுப்புக்குரியது என்பதே ஆட்சியாளர்கள் எடுத்திருக்கும் நிலைப்பாடு போலத் தெரிகிறது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பில் காணப்பட்டிருக்கும் முன்னேற்றங்களுக்காகவும் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்து பொலிஸ் திணைக்களத்தை எடுத்தமைக்காகவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்

> நவநீதம்பிள்ளை தங்களைப் பாராட்டினால் அது இனிப்பானது, பாராட்டவில்லையென்றால் அது கசப்பானது என்பதே ஆட்சியாளர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. இலங்கை தொடர்பில் 2014 மார்ச்சில் ஜெனீவாவில் கொண்டு வரப்படக்கூடிய தீர்மானம் சர்வதேச விசாரணைக்கான பொறிமுறை ஒன்றை உள்ளடக்கியதாக இருக்கக்கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் அந்த ஆணைக்குழுவின் இன்னொரு 53 விதப்புரைகளைச் சேர்த்துக் கொண்டமைக்காகவும் அரசாங்கத்தை நவநீதம்பிள்ளை கொழும்பில் வெளியிட்ட அறிக்கையிலும் ஜெனீவாவில் வெளியிட்ட வாய்மூல அறிக்கையிலும் பாராட்டியிருந்தார். அத்துடன் கடந்த முப்பது வருடகாலத்தில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய வென ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதையும் அவர் ஜாக்கிரதையாக வரவேற்றதையும் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசின் பொறுப்புடைமை குறித்த விவகாரங்களில் முன்னேற்றம் காணப்படாததையும் உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமையுடையவர்கள் போன்று சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை தொடருவதையும் இராணுவமயமாக்கலையும் மதச்சகிப்புத் தன்மையின்மை அதிகரிப்பதையும் அவர் கண்டனம் செய்தார். தனது விஜயத்தின்போது தன்னுடன் உரையாடிய வர்கள் அச்சுறுத்தப்பட்டதையும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மீது மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட தாக்குதல்களையும் நவநீதம்பிள்ளை கடுமையாகக் கண்டிக்கத் தவறவில்லை. இலங்கை எதேச்சாதிகாரத் திசையில் விரைந்து சென்று கொண்டிருக்கிறது என்ற அவரின் கருத்து குறிப்பாக அரசாங்கத்தை ஆத்திரப்படவைத்திருக்கிறது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் 2014 மார்ச்சில் இலங்கை தொடர்பாக விரிவான விவாதம் ஒன்று நடைபெறும். அத்துடன் எழுத்துமூல அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்படும். இலங்கை தொடர்பில் இன்னொரு தீர்மானம் கொண்டுவரப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அத்தீர்மானம் பொறுப்புடைமை (Accountability issues) விவகாரங்களுடன் கூடுதலான அளவுக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டதாகவும் சர்வதேச விசாரணைக்கான பொறிமுறையொன்றை உள்ளடக்கியதாகவும் கூட இருக்கக்கூடும். உயர்ஸ்தானிகரின் வாய்மூல அறிக்கையும் குறிப்பாக மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்த கருத்துகளும் இத்தகைய நிலை ஏற்படும் என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

(2012 ஆம் ஆண்டும்; 2013 ஆம் ஆண்டும் இலங்கை தொடர்பாக ஜெனீவாவில் தீர்மானங்கள் கொண்டுவரப்படுவதற்கு அமெரிக்காவே முன்னணியில் நின்று செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது). இன்னொரு ஆணைக்குழுவை நியமிப்பதை அல்லது ஒரு இராணுவ விசாரணையை அறிவிப்பதைவிடவும் கூடுதலானதை அரசாங்கம் செய்ய வேண்டியிருக்கும். சர்வதேச சமூகத்தை நம்பவைப்பதற்கு கணிசமானதும் மெய்ப்பிக்கத்தக்கதுமான நடவடிக்கை தேவை. சிங்கள பௌத்த மக்களின் ஆதரவை அடித்தளமாகக் கொண்டு என்னதான் அரசாங்கம் பலம் பொருந்தியதாக இருந்தாலும், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புடைமையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கையாளுவதில் உள்ள விருப்பமின்மை அல்லது இயலாமை தொடர்ச்சியாக சர்வதேச கண்காணிப்புக்கு உள்ளாகும். தலையிடும் தன்மையான விசாரணைப் பொறிமுறைகளும் கூட வரலாம். இத்தகைய பொறிமுறையையே அரசாங்கம் தொடர்ச்சியாக எதிர்த்துக்கொண்டு வருகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக வடமாகாண வாக்காளர்கள் அளித்த பிரமிக்கத்தக்க தீர்ப்பு மக்களிலும் அவர்களின் அக்கறைகளிலும் முதலிடுவதைப்பற்றி உயர்ஸ்தானிகர் தெரிவித்த செய்தியை மீளவலியுறுத்தியிருக்கிறது. உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளில் இருந்து தொடர்பறுந்ததாக இல்லை என்றும் பொருளாதாரம் அரசியலுக்கான மாற்றீடாகவோ அல்லது அரசியல்

> **தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஆதரவாக வடமாகாண வாக்காளர்கள் அளித்த பிரமிக்கத்தக்க தீர்ப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பது குடியியல், அரசியல் உரிமைகளிலிருந்து தொடர்பறுந்ததாக இல்லை. பொருளாதாரம் அரசியலுக்கான மாற்றீடாகவோ அல்லது அரசியல் பொருளாதாரத்திற்கான மாற்றீடாகவோ இருக்க முடியாது என்ற செய்தியை பிரகடனம் செய்திருக்கிறது**

பொருளாதாரத்துக்கான மாற்றீடாகவோ இருக்கமுடியாது. அவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்பவை. உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்ற வன்பொருளுக்கு (Hardware) ஆட்சிமுறை மற்றும் உரிமைகள் பாதுகாப்பு என்ற மென்பொருள் (Software) கீழ்க்கட்டுமான ஆதரவாக அமைய வேண்டியது அவசியமாகும் என்று உயர்ஸ்தானிகர் கூறியிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களுக்கு நடந்தவற்றை, அவர்களுக்குச் செய்யப்பட்டதை அவர்கள் மறக்க வேண்டுமென்று பலவந்தப்படுத்தவோ அல்லது மருட்டி இசைவிக்கவோ முடியாது.

தேர்தல் உண்மையிலேயே, பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு ஒரு பாரிய வெற்றியாகும். அப்பட்டமான அச்சுறுத்தல்கள், இராணுவத்தினர் அரசியலில் ஈடுபட்ட சூழ்நிலை மற்றும் அரச வளங்கள் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு மத்தியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட, வடக்கு மக்கள் முன்னென்றும் இல்லாத அளவுக்கு திரண்டுவந்து தங்கள் வாக்குகளைப் பதிவுசெய்தார்கள். ஜனாதிபதி தனது பிரசாரத்தின் போது அபிவிருத்தியைப் பற்றிய தனது செய்தியையும் பணிகளைச் செய்விக்கக்கூடிய மாகாணசபையொன்றைத் தெரிவு செய்யவேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த மாகாண சபை வராவிட்டால் அபிவிருத்தியென்பது சாத்தியமில்லை என்ற அச்சுறுத்தலே ஜனாதிபதியின் இந்தக் கூற்றில் மறைமுகமாகப் பொதிந்திருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தையும் மாகாணசபைகளையும் இல்லாதொழிக்க வேண்டுமென்று கோரி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட சூழ்நிலை, 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களில் சிலவற்றை குறைக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்குத் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சூழ்நிலை, செப்டெம்பர் 21 ஆம் திகதி வடமாகாண சபைத்தேர்தலை நடத்தக்கூடாது என்று கூட மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்களின் பின்புலத்திலேயே தேர்தல் நடத்தப்பட்டது. வடமாகாண சபையை செயற்படவைப்பது எவ்வாறு என்பதே இப்போதுள்ள சவால். இது மிகவும் சிக்கலானதாகும் என்பதிற் சந்தேகமில்லை.

உண்மையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென்றே அதிகாரப் பரவலாக்கம் கொண்டுவரப்பட்டது. அந்த மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற மனநிலையை கிழக்கில் நடைபெறுகின்றவற்றிலிருந்து தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. அதிகாரப் பரவலாக்கத்தைச் செயற்படுத்துவதற்கும் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஐக்கியத்துக்கான ஒரு கருவியாக அதை மாற்றியமைப்பதற்கும் கிழக்கில் ஒரு அருமையான வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், அங்கு என்னவென்றால், பிள்ளையான் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு, இன்று அவருக்குப் பிறகு புதிய முதலமைச்சர் பதவியில் இருக்கின்ற தருணம் வரை முட்டுக்கட்டை நிலையையும் செயலின்மையையுமே அன்றாடம் காணக்கூடியதாக இருந்துள்ளது. மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அபிவிருத்திப் பணிகளில் பங்கேற்பதற்கு மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியையும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக இருக்கும் ஆளுநர் இடையிட்டுத் தடுத்துக்கொண்டிருக்கிறார்.

வடக்கில் உள்ள ஆளுநர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது என்பது குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மாகாண சபை அதன் பணிகளைச் செய்வதற்கு வசதியாக ஒத்துழைப்பதே அரசாங்கத்தின் கொள்கை என்று தெளிவான அறிவுறுத்தல் ஜனாதிபதியிடமிருந்து வடக்கு ஆளுநருக்கு அனுப்பப்பட வேண்டும். முறையாகச் செயற்படுவதற்காகத்தான் பேராதரவுடன் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்தலில் தெரிவுசெய்திருக்கிறார்கள் என்பது அவருக்குச் சொல்லி வைக்கப்பட வேண்டும். ஆளுநரினால் ஏற்படுத்தப்படக்கூடிய முட்டுக்கட்டைகள் 13 ஆவது திருத்தம் செயற்படுத்தப்பட முடியாதது; எனவே இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் (13+) என்ற யோசனை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டிய அவசியம் என்பதை மாத்திரமே நிரூபிக்கும். அரசியல் இணக்கத் தீர்வுக்காக 13 ஆவது திருத்தத்தின் வரையறைகளுக்கு அப்பால் செல்ல வேண்டியிருக்கும் என்பதை ராஜபக்ஷ ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நிகழ்ந்த வாதப்பிரதிவாதங்களும், அரசியல் தீர்வு பற்றிய அரசாங்கத்தின் முன்னைய அறிவிப்புகளும் சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதித்துவக் குழுவின் அறிக்கையும் உணர்த்தி நிற்கின்றன.


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் பிளவுபடாத ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்களுக்கும் எதிரான பிரசாரங்களில் இருந்து சிங்கள வலதுசாரிச் சக்திகளுக்கு இருக்கின்ற பயத்தை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இந்தப் பயமே இனி வரும் நாட்களில் பாரதூரமான சவாலாக இருக்கப் போகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைமையிலான மாகாண சபை 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கல் நடைமுறையில் செயற்படுத்த முடியாதது என்று காட்டுவதற்காக அத்திருத்தத்தின் வரையறைகளுக்கு உச்சபட்ச நெருக்குதல்களைக் கொடுக்கும் என்பதே சிங்கள வலதுசாரிகளின் வாதமாக இருக்கிறது போலத் தோன்றுகிறது. சமஷ்டி அல்லது சம்மேளனம் அல்லது பிரிவினையே பின்வரவாக இருக்கும் அல்லது அவையே பேச்சாக இருக்கும் என்பதே அவர்களின் மோசமான பீதியாக இருக்கிறது.

இத்தகைய நிலைவரங்கள் எல்லாம் எதை உணர்த்துகின்றன? அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் தனது நல்லெண்ணத்தை நடைமுறையில் வெளிக்காட்ட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமாகும். அதேபோன்றே 13ஆவது திருத்தத்தைச் செயற்படுத்துவதில் அக்கறை காட்டி, பிளவுபடாத - ஐக்கியப்பட்ட இலங்கையொன்றின் மீதான பற்றுறுதியை வெளிக்காட்ட வேண்டியது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பும் கடமையுமாகும்.

இருதரப்பினரும் பரஸ்பரம் இவற்றைச் செய்யத்தவறினால் எதிர்காலம் சிக்கலானதாகவே இருக்கும். அத்தகைய சிக்கலான எதிர்காலத்தை தவிர்த்தேயாகவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ஏன் அரசியல் வாதிகளின் நோக்கங் களுக்கு சார்பாகச் செயற்பட்டு அவற்றில் சிக்கிக்கொள்கிறார்கள் என்பதையும் மதச்சார் பற்ற அரசியல் சமுதா யம் ஒன்றை ஏன் நிறுவ முடியாமல் போனது என்பதையும் குறித்து இந்தியா தன்னைத் தானே உள்நோக்கி சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது



குல்திப் நாயர்

# இடர்பாட்டுக்குள்ளாகியிருக்கும் இந்தியக் கருத்துருவம்

முஸ்லிம் சமுதாயத்தின் நம்பிக் கையை வென்றெடுப்பதற்கு தன்னால் அறிவிக்கப்பட வேண்டிய நான்கு அல்லது ஐந்து நடவடிக்கைக ளைக் கூறுமாறு முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமை ப்பான ஜமாத்-உல்மா ஹிந்திடம் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளரான குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திரமோடி அண் மையில் கேட்டிருந்தார். முஸ்லிம்க ளின் நம்பிக்கையை வென்றெடுப்பது எவ்வாறு என்பதை மோடிதான் சிந் திக்க வேண்டுமென்று ஜாமத் மிகவும் சரியாகவே அவரிடம் கூறியது. குஜ ராத் மாநிலத்தில் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரங்களுக்காக மன்னிப்புக் கேட்பதே மோடி நேரடி யாகச் செய்யக்கூடிய ஒரு காரியம். மாநிலத் தலைநகர் அஹமதாபாத்தி லிருந்து வெகுதொலைவில் இல்லாத கோத்ராவில் இந்துயாத்திரிகர்கள் பயணம் செய்த ரயிலுக்கு தீ வைக்கப் பட்டதையடுத்து மூண்ட அந்தக் கல வரங்கள் அவரின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

முஸ்லிம்களைக் கொலை செய்வ தற்கு திட்டத்தை வகுத்து நடை முறைப்படுத்துவதற்காக உயரதிகாரி களின் கூட்டமொன்றை மோடி கூட்டி யதை உறுதிப்படுத்த போதிய சான்று கள் இருக்கின்றன. கலவரங்கள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை என்றும் தலையீடுசெய்ய வேண்டா மென்று பொலிஸாரிடம் கேட்கப்பட் டிருந்ததாகவும் கலவரங்களில் பங் கேற்ற பிறகு மோடியின் அமைச்ச ரவையில் அமைச்சராக இருந்த ஹிரன் பாண்டே ஒத்துக்கொண்டார். அவர் கொலை செய்யப்பட்டார். இன்றுவரை கொலைகாரர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத் தப்படவில்லை. உயர்பொலிஸ் அதி காரியொருவர் போலி என்கவுண்டர் ஒன்றை அரங்கேற்றுவதற்கு மோடி தன்னைப் பயன்படுத்தினார் என்று உயர் பொலிஸ் அதிகாரியொருவர் மத்திய புலனாய்வுப் பணியகத்துக்கு (சி.பி.ஐ.) எழுதிய கடிதமொன்றில் மிகவும் அண்மையில் தான் ஒப்புக் கொண்டார்.

பிரதமர் வேட்பாளராக நியமிக்கப் பட்ட பிறகு நிகழ்த்திய முதலாவது உரையில் மோடி பல விவகாரங்க ளைப் பற்றிப் பேசியதைக் காணக் கூடியதாக இருந்தது. அயல் நாடுகளு டனான உறவுகள், பயங்கரவாதம் மற்றும் பாதுகாப்புப் பற்றியெல்லாம் அவர் பேசினார். ஆனால், சில வாரங்களுக்கு முன்னர் உத்தரப் பிரதேசத்தின் முசாபர் நகரில் இடம் பெற்ற இனக்கலவரம் குறித்து அவர் ஒரு சொல்லைக்கூட உச்சரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. டில்லியில் இருந்து இரு மணித்தியாலங்களில் சென்றடையக் கூடிய அந்த நகரில் மூண்ட கலவரத்தில் 50 பேர் கொல்லப்பட்டார்கள். சுமார் 40 ஆயிரம் மக்கள் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டது. இவர்களில் பல நூற்றாண்டுகளாக ஒன்றாக வாழ்ந்துவரும் இந்துக்களும் முஸ்லிம்களும் அடங்குவர்.

உண்மையில் இது மக்களிடையே பிளவுகளை உண்டாக்கி சமுதாயத்தை துருவமயமாக்கும் மோடி பாணி அரசியலின் விளைவேயாகும். இந்த அரசியல் இந்தியாவின் மதச்சார்பின்மைக்கான சான்று ஆதாரங்களுக்குச் சவாலாக அமைந்திருக்கிறது. ஊடகங்கள் வர்ணிப்பதைப் போன்று மோடி இந்துத்வாவின் ஒரு சுவரொட்டிப் பையனேயாவார். இந்தியா, பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளிடமிருந்து சுதந்திரம் பெற்று 66 வருடங்கள் கடந்துவிட்ட பிறகு, இரு சமூகங்களும் மதத்தலைவர்கள் அல்லது மதத்தலைவர்களின் போர்வையில் இருக்கின்ற அரசியல்வாதிகளின் அறை கூவலின் பேரில் பாய்ந்தடித்துக்கொண்டு ஒன்று மற்றையதின் கழுத்தைப் பிடிக்கத் தயாராயிருக்கின்றன. மக்கள் ஏன் அரசியல்வாதிகளின் நோக்கங்களுக்குச் சார்பாகச் செயற்பட்டு அவற்றில் சிக்கிக் கொள்கிறார்கள் என்பதையும் மதச்சார்பற்ற அரசியல் சமுதாயமொன்றை ஏன் நிறுவ முடியாமல் போனது என்பதையும் குறித்து நாடு தன்னைத்தானே உள்நோக்கிச் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தியாவின் பன்முகவாத பண்பாண்மை (Ethos of pluralism) குறித்து மோடிக்கு அக்கறையில்லை. இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடொன்றில் மதச்சார்பின்மை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இல்லை என்றுதான் நம்புகின்ற காரணத்தினால் மோடி இந்து மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்துகிறார். குஜராத் கலவரங்களுக்குப் பிறகு படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டதாக அவர் கூறுகிறார். ஆனால், அதற்கான அறிகுறி எதையும் காணக்கூடியதாக இல்லை. குஜராத் கலவரங்களில் பலியானவர்களை விரைவாகச் செல்கின்ற கார் ஒன்றின் கீழ் நெரிபட்ட நாய்க்குட்டிகளுக்கு ஒப்பிட்டவர் இந்த மோடி. அவரை ஊட்டி வளர்த்திருக்கும் ராஷ்டிரிய சுயம் சேவக் (ஆர்.எஸ்.எஸ்.) அடுத்த பொதுத் தேர்தலை 'சிறுபான்மையினரின் தன்முனைப்பு' என்ற விவகாரத்தை மையமாக வைத்து எதிர்நோக்க வேண்டுமென்று விரும்புகிறது. சிறுபான்மையினர் தங்களது தனித்துவ அடையாளத்தை பாதுகாப்பதற்காக வலுவான முறையில் குரல்கொடுப்பதை ஆர்.எஸ்.எஸ். தவறாக அர்த்தப்படுத்துகிறது. சிறுபான்மையினர் மத்தியில் தன்முனைப்பு இருக்கிறதென்றால் கூட, அதைக் கையாள முடியும். ஆனால், பெரும்பான்மையினத்தவரின் தன்முனைப்பு (Majority's aggressiveness) பாசிசமாக மாற முடியும்.

இனவாத நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாகவே 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் 2009 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் தோல்வி காண வேண்டிவந்தது என்பதை நன்கு தெரிந்துகொண்டும் கூட, பாரதீய ஜனதா இத்தடவை மோடியை பிரதமர் வேட்பாளராக தெரிவு செய்திருப்பது துரதிர்ஷ்டவசமானது. தாராள மனப்பான்மை கொண்டவர் என்று அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு இருக்கக்கூடிய பிரதிமையினால் கூட, குறுகிய மனப்பான்மை கொண்டது என்று கட்சிக்கு இருக்கின்ற வடுவைப் போக்க முடியவில்லை. பொதுவில் இந்தியா சகிப்புத்தன்மை கொண்ட ஒரு சமுதாயமாகும். அரசியலுடன் மக்கள் மதத்தைக் கலப்பதில்லை. அவர்களையோ அல்லது அவர்களது அபிலாசைகளையோ பாரதீய ஜனதா விளங்கிக் கொள்ளவில்லை. இந்தியாவின் கருத்துருவம் நாட்டின் பல்வகைமையை (Diversity) அடிப்படையாகக் கொண்டதேயாகும். முசாபர் நகரில் நடைபெற்றது இந்த கருத்துருவத்துக்கே ஒரு சவாலாகும். போலி வீடியோ ஒன்றின் ஊடாக மீண்டும் ஒரு தடவை பாரதீய ஜனதா எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றியிருக்கிறது.

கொடுமைகளை அயலவர்கள் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனரே தவிர, கொலைகளையும் அழிவுகளையும் தடுத்துநிறுத்த அவர்கள் முன்வரவில்லை என்று முசாபர் நகரில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் வேதனையுடன் முறையிடுகிறார்கள். கலவரங்கள் இடம்பெறுகின்றபோது பண்புத்தொடர்புகள் வரண்டு போகின்றன. முசாபர் நகரில் இடம் பெற்றவை மனக்கலக்கத்தைத் தருகின்றன. ஏனென்றால், இனவாத வைரஸ் கிராமப் புறங்களுக்குப் பரவிவிட்டது. நிருவாகம் எப்போதுமே அதன் கடமையில் தவறுகி

> இந்தியாவின் பன்முகவாதப் பண்பாண்மை குறித்து மோடிக்கு அக்கறையில்லை. இந்துக்களை பெரும்பான்மையாகக்கொண்ட நாடொன்றில் மதச்சார்பின்மை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இல்லை என்று நம்புகிற காரணத்தினால் மோடி இந்து மதத்தை அரசியலுக்கு பயன் படுத்துகிறார். குஜராத் கலவரங்களுக்குப் பின்னர் படிப்பினைகளைப் பெற்றதாக அவர் கூறுகிற போதிலும் அதற்கான அறிகுறி எதையும் காணக்கூடியதாக இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. ஏனென்றால், அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியிடமிருந்து அறிவுறுத்தல்கள் வரும் வரை நிருவாகம் காத்துக்கொண்டிருக்கிறது. விளைவுகளுக்குப் பயந்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸார் மாசுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்துக்களுக்குச் சார்பாகச் செயற்படுகிறார்கள். இந்திய சனத்தொகையின் 15 சத வீதத்தினரான முஸ்லிம்கள் நாடுபூராகவும் பரந்து வாழ்கிறார்கள்.

ஊடகங்களில் வெளிவந்திருக்கக் கூடிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது முசாபர் நகர் கலவரம் தூண்டிவிடப்பட்ட ஒன்று என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. பாரதீய ஜனதாவின் சதி பின்னணியில் இருக்கிறது. பாலியல் தொந்தரவு செய்தமைக்காக ஒரு முஸ்லிம் இளைஞன் கொல்லப்பட்டான். பதிலடியாகவே இந்து ஜத் இனத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். இதையடுத்து கலவரம் மூண்டது. இந்து சமூகத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் சேர்ந்த தலைவர்கள் ஆத்திரமூட்டும் உரைகளை நிகழ்த்தினர்.

வேறு எங்கோ இடம்பெற்ற வன்முறைகளைக் காண்பிக்கும் வீடியோ ஒன்றை வெளியிட்டு பாரதிய ஜனதா எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது. இந்துக்களுக்கு எதிரான அட்டூழியங்களைப் பாருங்கள் என்று இந்துக்களை மேலும் ஆத்திரமூட்டுவதற்காகவே அந்த வீடியோவை அவர்கள் வெளியிட்டார்கள். வெள்ளிக்கிழமைத் தொழுகையில் முஸ்லிம் மதத் தலைவர் ஒருவர் குண்டர் கும்பலுக்குத் தலைமைதாங்கிச் சென்று தாக்குதல்களை நடத்தினார். உத்தரப்பிரதேச மாநில ஆளுநர் மத்திய அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததைப் போன்று நிருவாகம் கூடுதலான அளவுக்கு வலுவிழந்திருந்தது. சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஆளும் சமாஜ்வாதிக் கட்சி விரும்பியது. ஆனால், அது குழம்பிப் போயிருந்தது.

நிர்மூலஞ்செய்யப்படுவதற்கு முன்னதாக பாபர் மசூதி அமைந்திருந்த இடத்தில் ராமர் கோவிலைக் கட்டுவதற்கான யாத்திரைகளை ஏற்பாடு செய்ததன் மூலமாக நிலைவரங்களை மேலும் மோசமாக்குவதில் பாரதிய ஜனதா பெரிய பங்கையாற்றியது. அடுத்த தேர்தலில் தனது வாய்ப்புகளைப் பற்றி ஆர்.எஸ்.எஸ். யோசிக்கிறது. ஜனநாயக ரீதியானதும் மதச்சார்பற்றதுமான அரசொன்றை நிறுவுவதற்கான தேசிய போராட்டத்தின் பண்பாண்மையை நிர்மூலஞ்செய்வதற்கு ஆர்.எஸ்.எஸ். தன்னாலான சகலதையும் செய்து கொண்டிருக்கிறது. முன்பு ஆர்.எஸ். எஸ்.ஸின் பிரசாரப் பணியாளராக இருந்தவரும் சுபாவத்தில் எதேச்சாதிகாரியுமான மோடியை முன்னிலைப்படுத்துவது இந்து இராச்சியம் ஒன்றுக்கான நிகழ்ச்சித்திட்டத்துக்கு பொருத்தமானதாக இருக்கிறது.

எல்.கே.அத்வானி மீது நான் அனுதாபப்படுகின்றேன். ஆர்.எஸ்.எஸ் ஸுடனான தொடர்புகளைத் துண்டிக்க மறுத்தமைக்காக ஜனதாக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டபோது (1979 முடிவடையும் தறுவாயில்) எந்தளவு தோல்விகண்டவராக அவர் இருந்தார் என்பதைக் கண்டவன் நான். அடல் பிஹாரி வாஜ்பாயைத் தலைவராகக் கொண்டு பாரதிய ஜனதாக் கட்சியை 1980 இல் அத்வானி ஸ்தாபித்தார். இன்று மீண்டும் அத்வானி தனிமைப்படுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவரின் தனிமைக்கு மீண்டும் ஆர்.எஸ்.எஸ்.இயக்கமே பொறுப்பாக இருக்கிறது. பிரதமர் பதவிக்கான வேட்பாளராக மோடியை அந்த இயக்கம் களமிறக்கியிருக்கிறது. பாரதிய ஜனதா மீது மோடியை ஆர்.எஸ்.எஸ்.திணிக்கின்ற விதத்தை அத்வானி விரும்பவில்லை. இந்து இராச்சியத்துக்கான கோட்பாட்டு ரீதியான நிலைப்பாட்டுக்குப் பொருந்துகின்றவர் என்றால் அது (பல வருடங்களுக்கு முன்னதாகவே மதவெறியைக் கைவிட்டவரும் பாகிஸ்தான் ஸ்தாபகரான முஹம்மது அலி ஜின்னாவை மதச்சார்பற்றவர் என்று கருதுகின்றவருமான) அத்வானி அல்ல, மோடியே என்று ஆர்.எஸ்.எஸ்.உணருகிறது. ■

**டெக்கான் ஹெரால்ட்**

---

*(55ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

பிரிக்க வீட்டில் ஒரு தலித் கிறிஸ்தவ ஊழியரின் அறையிலிருந்த கழிவு நீர்ப் பானையை கஸ்தூரிபாய் ஏணி வழியாகச் சுமந்து வந்து சுத்தம் செய்யத்தானும் தயங்கி, காந்தியையும் செய்யக்கூடாதென எதிர்த்தபோது அவர் மனைவியை எவ்வளவு மூர்க்கமாக எதிர்த்தார் என்பதைச் 'சத்திய சோதனை'யில் காணலாம். அவரது சமபந்தி போஜன வெறுப்பு சாதி அடிப்படையில் உருவானது அல்ல.

இந்து மதம் பிறவி அடிப்படையிலானது, ஒருவர் இந்துவாகப் பிறக்க மட்டுமே முடியும் என்பதை அதன் குறைபாடுகளில் ஒன்றாக முற்போக்காளர்கள் விமர்சிப்பது வழக்கம். ஆனால் காந்தியோ அதுவே இந்து மதத்தின் சகிப்புத் தன்மைக்கு எடுத்துக்காட்டு என்றார். அதாவது, மதம் மாற்றுவது என்பது பிற மதங்களின் இருப்பைச் சகிக்காததன் விளைவு என்பது அவர் கருத்து. கடைசிவரை மதமாற்றம் என்பதை அவர் ஏற்கவேயில்லை. ஆனால் சட்டம் இயற்றி மதமாற்றத்தைத் தடுப்பது என்கிற நிலை வந்தபோது அம்முயற்சியைக் கடுமையாக எதிர்த்தார். அதென்ன?

அதுதான் காந்தி. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியின் இந்து மதம்



அ.மார்க்ஸ்

'காந்தியும் தமிழ்ச் சனாதனிகளும்' என்கிற எனது நூல் வெளிவந்தபோது எங்கு சென்றாலும் என்னை நோக்கி வீசப்பட்ட கேள்வி ஒன்றுதான். கருத்து மாறுபடுவர்கள் மட்டுமன்றி, பொதுவில் என்னுடன் உடன்படுபவர்களும் கூட, அதெப்படிங்க, காந்தி வருணாசிரமத்தையும் சாதிமுறை யையும் ஏற்றுக்கொண்டவர்தானே. அவரைச் சனாதன எதிர்ப்பாளர் என்பதுபோல நீங்கள் முன்வைப்பதை எப்படி ஏற்க முடியும்? என்று குடைந்தெடுத்தனர்.

இதற்குப் பதில் சொல்லி தமிழ்ச் சமூகத்தைத் திருப்திப்படுத்துவது அத்தனை எளிதன்று. எதார்த்தங்களை அவற்றின் சிக்கலோடு புரிந்துகொள்ள முயலாமல் எதையும் மிகை எளிமைப்படுத்தி, இப்படி அல்லது அப்படி எனத் தட்டையாகப் புரிந்துகொள்ளும் பண்பு வலுப்பெற்றுள்ள இன்றைய சூழலில் காந்தியைப் பற்றி அப்படித்தான் ஒரு எதிர்மறையான பிம்பம் கட்டமைக்கப்பட்டுள்ளது. புத்த பகவான் சொன்ன 'யானையைப் பார்த்த குருடர்களின் கதை' அன்றைக்கு மட்டுமன்றி இன்றைக்கும் பொருத்தமானதுதான்.

அவர்களுக்கு நான் பதில் சொல்வதற்குப் பதிலாக வேறு சில கேள்விகளை எழுப்புவது வழக்கம். அப்படியானால் ஏன் கோட்சே குழுவினர், சாவர்க்கர் உட்பட காந்தியைக் கொல்வதில் முனைப்புக்காட்டிக் கடைசியில் தம் முயற்சியில் வெல்லவும் செய்தனர்? வாக்களித்தபடி பாகிஸ்தானுக்கு 50 கோடிகளைக் கொடுப்பதற்கு காந்தி அழுத்தம் கொடுத்ததற்காகத்தான் தான் அவரைக் கொன்றதாக கோட்சே நீதிமன்றத்தில் சொன்னது உண்மையானால், நாட்டுப் பிரிவினை என்கிற பேச்சு எழும்பும் முன்னரே இதே குழுவினரும் இவர்களை ஒத்தவர்களும் அவரைக் குறைந்தபட்சம் ஐந்து முறை கொல்ல முயற்சித்தது ஏன்? காந்திக்கு எதிராக அவரை வர்ண சம்ஹாரம் செய்ய வந்தவர் என வரையறுத்து சென்னையிலிருந்து ஆர்ய தர்மம் என்றொரு இதழ் மறைந்த மூத்த சங்கராச்சாரியார் சந்திரசேகரேந்திர சுவாமிகளின் நிதி உதவியுடன் வெளியிடப்பட்டதன் பொருள் என்ன?

காந்தியைப் புரிந்துகொள்ள இந்தக் கேள்விகள் முக்கியமானவை. எப்படிப் பார்த்தாலும் இந்தக் கேள்விகளுக்கு நாம் இரு பதில்களைத்தான் சொல்ல முடியும். ஒன்று சுதந்திர இந்தியா இந்து ராஷ்டிரமாக உருப்பெறுவதற்கு ஒரு வலுவான தடையாக அவர் இருந்தார் என்பது. காந்தி பல்வேறு சாதி, மதம், மொழி பேசும் மக்களின் தேசமாக இந்தியாவைக் கற்பிதம் செய்தார், சாவர்க்கரும் மற்றவர்களும் இந்தியாவை இந்துக்களின் தேசமாகக் கற்பிதம் செய்ய முயன்று காந்தியின் மக்கள் செல்வாக்கின் முன் படுதோல்வி அடைந்தனர், காந்தியின் தேசியம் பன்மைத்துவம் சார்ந்தது. அது ஒரு உள்ளடக்கும் தேசியம் (inclusive nationalism). அவரை எதிர்த்தவர்களின் தேசியம் இந்துக்கள் தவிர மற்றவர்களை விலக்கும் தேசியம் (exclusive nationalism).

மற்றது அவர் இந்து மதம் குறித்து முன்வைத்த வாசிப்புகள் முற்றிலும் சனாதனத்திற்கு எதிராக இருந்தன. குறிப்பாக இந்து மதத்தில் தீண்டாமை கிடையாது என அவர் முன்வைத்த வலுவான கருத்துகளைச் சனாதனிகளால் ஏற்கவே இயலவில்லை. காந்தி ஆலயப்பிரவேச இயக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்தபோது, அவரது தமிழக வருகையை எதிர்த்து காந்தீ, திரும்பிப் போ எனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டறிக்கைகள் வெளியிடப்பட்டன. சிதம்பரம் உள்ளிட்ட கோவில்கள் மூடப்பட்டன. காந்தியை இழிவுபடுத்தி, தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம் என்றொரு நூல் தமிழகத்தில் வெளியிடப்பட்டது. என்னுடைய முன்னுரையுடன் அந்நூல் மறு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

காந்தி தீண்டத்தகாதவர்கள் பிரச்சினையில் கொண்டிருந்த கருத்துகளில் நமக்கும் சில மாறுபாடுகள் உண்டு. ஆனாலும், பெரியார் உள்ளிட்ட சாதி ஒழிப்புப் போராளிகள் இந்தத் திசையில் பேசியவற்றையும், செய்தவற்றையும்கூடச் சகித்துக்கொண்டவர்கள் காந்தி அதைச் செய்தபோது கொதித்தெழுந்தனர். ஏன்? சாதி ஒழிப்புப் போராளிகள் பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று அவர்களை எழுச்சி கொள்ளச் செய்தனர். காந்தியோ பாதிக்கப்பட்டவர்களோடு நில்லாமல் யார் பாதிப்பிற்குக் காரணமாக இருந்தார்களோ அவர்களிடமும் பேசினார். அவர்களையும் களத்தில் இறக்கினார். சென்ற நூற்றாண்டில் ஆசியாவில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய மக்கள் இயக்கங்களிலொன்றாக காந்தியின் தலைமையிலான ஆலயப் பிரவேச இயக்கம் அமைந்தது என இன்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

காந்தி தீண்டாமைக்குக் காரணமானவர்களை நோக்கிப் பேசியதாலேயே அவரின் மொழி இதர சாதி ஒழிப்புப் போராளிகளின் மொழியிலிருந்து வேறுபட்டிருந்தது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவரது மொழித் தோற்றத்தில் மென்மையாக இருந்த போதிலும் இந்து மதத்தின் அடிப்படைகளை அசைப்பதாகவும் இருந்ததைப் புரிந்து கொண்டதால்தான் அவரைச் சனாதனிகள் 'வர்ண சம்ஹாரம்' செய்ய வந்தவராகப் பகைத்தனர்.

காந்தியின் இந்து மத வாசிப்பு மரபு வழி வாசிப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. இந்து மதத்தில் தீண்டாமை இல்லை என்று மட்டும் அவர் சொல்லவில்லை, ஆலய வழிபாடுகள், மதச் சடங்குகள், நேர்த்திக் கடன்கள் ஆகியவற்றையும் விலக்கி வாழ்ந்தவர் அவர். ஆலயங்களை விபசார விடுதிகள் என்கிற அளவிற்கு அவர் ஒப்பிட்டுப் பேசிய போதும் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படும் இயற்கைச் சீரழிவுகள் தீண்டாமையை இந்துச் சமூகம் கடைப்பிடிப்பதன் விளைவுதான் என்று சொன்னபோதும் இங்கு ஏற்பட்ட சர்ச்சைகளும் கண்டனங்களும் நினைவுகூரத் தக்கன. வருணாசிரமம் குறித்த அவரது தொடக்க காலக் கருத்துகளும் கூட இறுதியில் பெரிய அளவில் மாறின.

இராமனை அவர் ஒரு இலட்சிய மானுடனாகவும், இராம ராஜ்யம் என்பதை ஒரு இலட்சிய அரசாகவும் மட்டுமே அவர் முன்வைத்தார். இராமாயணத்தை ஒரு வரலாற்றுக் காவியமாகவோ, இராமனை ஒரு வரலாற்று நாயகனாகவோ முன்வைப்பதை அவர் மறுத்தார். வேறு சொற்களில் சொல்வதானால் காந்தியின் தர்க்கத்தில் இராமன் அயோத்தியில் பிறந்தான் என்பதற்கும் சேதுப் பாலத்தை அவன் அமைத்தான் என்பதற்கும் இடமில்லை.

காந்தி தன் அரசியலுக்கு வரலாற்றை என்றும் துணை கொண்டதில்லை. அதேபோல டால்ஸ்டாய், தோரோ ஆகியவர்களின் சிந்தனை வழி வந்த அவரிடம் தேசபக்தி என்கிற சொல்லாடலும் இருந்ததில்லை. காந்தி உயிருடன் இருந்த காலத்தில் அவருக்கு எதிராக சர் சங்கரன் நாயர் எழுதிய நூலின் தலைப்பு காந்தியும் அராஜகமும் (Gandhi and Anarchy).

திலகர், அரவிந்தர் முதலான காந்திக்கு முந்திய தேசியப் போராட்ட வீரர்கள் எல்லோரும் பகவத் கீதையை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிரான தனிநபர்க் கொலை உள்ளிட்ட போர்த் தொழிலை முன்வைக்கும் புனித நூலாக வாசித்துக் கொண்டிருந்த நேரத்தில் காந்தி அதை ஒரு சமாதானத்தின் சாத்தியங்களையும், அஹிம்சைப் பாதையையும் வற்புறுத்தும் நூலாக வாசித்து உரை எழுதினார். இது குறித்து ஒரு நவீன காந்தியியல் ஆய்வாளர், வாசிப்புச் சுதந்திரம் என்கிற நவீன கோட்பாட்டை அதன் உச்சபட்ச வடிவத்தில் கையாண்டவர் காந்திதான் எனக் கூறுகிறார்.

காந்தியின் இந்து மதம் குறித்த வாசிப்பில் நாம் காணும் சிக்கல்கள் கூட அவை எந்தப் புனித நம்பிக்கைகளின் (believes) அடிப்படையிலிருந்தும் உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக அவை உடல் மற்றும் உளத் தூய்மை குறித்த அவரது கட்டுப்பெட்டித் தனமான கருத்துகளிலிருந்தே முகிழ்ந்துள்ளன. எடுத்துக்காட்டாக சேரன்மாதேவிக் குருகுலப் பிரச்சினையில் கூட பார்ப்பனர்களையும் பார்ப்பனர் அல்லாதவர்களையும் தனித்தனியே அமர வைத்துப் பந்தி பரிமாறியதைத் தவறு எனக் கூறியவராயினும் காந்தி 'சமபந்தி போஜனம்' என்பதை ஒரு உயரிய கொள்கையாக ஏற்கவில்லை. தீண்டாமை ஒழிக்கப்பட்டு எல்லாவற்றிலும் சமத்துவம் கடைப்பிடிக்கப்பட்ட அவரது தென் ஆபிரிக்க டால்ஸ்டாய் மற்றும் போனிக்ஸ் பண்ணைகளின் விதிமுறைகளில் சமபந்தி போஜனம் ஒரு உயரிய கொள்கையாக ஏற்கப்படவில்லை.

ஆனால், இந்த அணுகல்முறை சாதி, வருண அல்லது தீண்டாமை அடிப்படையில் முன்வைக்கப்படவில்லை. ஒன்றாக அமர்ந்து உண்ணுவது என்பதே அசிங்கம் என அவர் கருதினார். தனது மனைவி, பிள்ளைகளுடன் கூட ஒன்றாக உண்ணுவதை அவர் வெறுத்தார். சாப்பிடுவது என்பது கழிப்பதைப் போலவே ஒரு மோசமான விடயம். கழிப்பதிலாவது ஒரு வெளியேற்றும் சுகம் நமக்கு உள்ளது என்பது அவரது கூற்று. அதே நேரத்தில் அவரது தென்

***(53ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடிக்கு வக்காலத்து வாங்கிய கருணாநிதி

## அமையுமா தி.மு.க.-பாரதீய ஜனதா கூட்டணி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் 1ஆம் திகதி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக்கூட்டம் நடைபெற இருக்கிறது. பரபரப்பான சூழ்நிலையில் கூடும் இக்குழுவில் தமிழகத்தின் அரசியல் காற்றைத் திசை திருப்பி வீச வைக்கும் முடிவுகள் எடுக்கப்படலாம் என்று தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் மட்டத்திலேயே சூடான விவாதங்கள் அனல் பறக்கிறது. தமிழக அரசியலை ஆட்டிப் படைக்கும் 'மோடி ஜுரம்' (குஜராத் முதல்வர் நரேந்திர மோடி) தி.மு.க.வையும் விட்டு வைக்கவில்லை என்பதே இந்த அவசரப் பொதுக்குழுவின் பின்னணிகளில் ஒன்றாக இருக்கலாம். 'வருகின்ற பாராளுமன்றத்தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது பற்றி நாங்கள் எந்த நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. அப்படி எடுத்தாலும் அதை இப்போது வெளியிட விரும்பவில்லை' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்திருப்பதில் இருந்தே 'பூடகமாக' ஏதோ பேசுகிறார் என்பதை அனைவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏறக்குறைய மூன்று - நான்கு மாதங்களாகவே 'மத வாதம்' என்பது பற்றியெல்லாம் பேசுவதை நிறுத்திக் கொண்டுவிட்டார் கலைஞர் கருணாநிதி. அதேபோல் மோடி பற்றி எந்தக் கருத்தையும் சொல்லாமல் அமைதி காக்கிறார். அதேநேரத்தில் நரேந்திர மோடியின் திருச்சி வருகைக்குப் பிறகு அவர் சொன்ன கருத்துகள் சில அரசியல் வட்டாரத்தில் பலரையும் ஆச்சர்யப்பட வைத்திருக்கிறது. நிருபர்கள், 'பெரியார் பிறந்த மண்ணில் மதவாதி நரேந்திர மோடி வந்து பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டுப் போகிறார். அது பற்றி தி.மு.க. எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருக்கிறதே' என்று கேள்வி கேட்டதற்கு, 'இந்தியாவிலே சுதந்திரத்திற்குப் பிறகு கூட்டம் போடுகின்ற உரிமை, பேசுகின்ற உரிமை- இவைகள் எல்லாம் தடுக்கப்படவில்லை. எனவே அவர்களுடைய கருத்துகளைத் தெரிவிப்பதில் எந்தத் தடையும் இல்லை' என்று கூறி 'விலகி நில்லும் பிள்ளாய்'என்று நந்தனார் நாடகத்தில் நந்தியைப் பார்த்து நந்தனார் சொன்னது போல் அமைதி காத்தார் கலைஞர் கருணாநிதி. இது மட்டுமல்ல, இன்னொரு கேள்வியில், 'காங்கிரஸ் அரசு மொழி ரீதியாக நடப்பதாக நரேந்திர மோடி குற்றம் சாட்டியிருக்கிறாரே' என்று கேட்ட கேள்விக்கு, 'மாநிலங்கள் மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக அவர் அவ்வாறு சொல்லியிருக்கலாம்' என்று மோடிக்கு வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறார் தி.மு.க. தலைவர். மோடி பற்றிய விமர்சனத்தை தி.மு.க.விடமிருந்து பெற்று விடலாம் என்று முயன்ற பத்திரிகை நிருபர்கள் தோற்றுப் போனார்கள் என்றே சொல்ல வேண்டும்!

இந்த இரு கருத்துகளும் அரசியல் வட்டாரத்தில் கிலியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அ.தி.மு.க. தரப்பிற்கு 'தி.மு.க. ஒரு வேளை பாரதீய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி வைத்து மோடியைப் பிரதமராக முன்னிறுத்தி விடுமோ' என்ற அச்ச உணர்வே ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே ம.தி.மு.க. பா.ஜ.க.வின் கூட்டணியை நோக்கிப்போக எத்தனிக்கிறது. அதற்கான முஸ்தீபுகளில் இறங்கி விட்டது. இந்த நிலையில் தி.மு.க.வும் மோடிக்காக வக்காலத்து வாங்குகிறதே என்று அ.தி.மு.க. மிரண்டு போயிருக்கிறது. இப்படியொரு உஷ்ணமான சூழ்நிலையில்தான் தி.மு.க. வின் பொதுக்குழு கூடுகிறது. இந்தப் பொதுக்குழுவிற்கு பல விடயங்கள் முன்னிறுத்தப்படுகிறது. ஆனால், முக்கியமாக மூன்று விடயங்கள் அங்கே விவாதிக்கப்படும் என்றே தெரிகிறது.

முதல் விடயம் தி.மு.க.வின் உட்கட்சி தேர்தல். அக்கட்சியின் உட்கட்சித் தேர்தல் கடந்த 2008இல் நடைபெற்றது. அதன்படி கட்சி நிர்வாகிகள் அனைவரும் ஐந்து வருடம் பதவிக்காலத்தில் நீடிப்பார்கள். தி.மு.க. தலைவருக்கும் கூட அதே ரூல்ஸ்தான். இந்நிலையில் இந்த வருடம் டிசம்பர் மாதம் 28ஆம் திகதிக்குள் உட்கட்சித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும். ஆனால், இப்போது நிலவுகின்ற 'உள்மட்ட அடி தடி' அரசியலை எண்ணிப் பார்க்கும் போது வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் கட்சித் தேர்தலை நடத்தி முடிப்பது எளிதான காரியம் அல்ல.

ஏனென்றால் தி.மு.க. பொருளாளராக இருக்கும் ஸ்டாலின் வசம் கட்சி வருவதற்கு முன் நடைபெறும் முக்கிய தேர்தல் இது என்பதால், அவ்வளவு எளிதாக இந்தத் தேர்தல் முடியாது. பல புகார்கள், பஞ்சாயத்துகள்- இவற்றையெல்லாம் மீறி தேர்தல் முடிய இன்னும் பல மாதங்கள் தேவை. ஆனால், கட்சி நிர்வாகிகளின் பதவிக்காலம் டிசம்பர் 28ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த பதவிக்காலத்தை நீட்டித்து அனுமதி பெறுவதற்கு தி.மு.க. பொதுக்குழு முக்கியமாகக் கூடுகிறது.






முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக பாராளுமன்றத் தேர்தலுக்குத் தயாராகும் தி.மு.க. மாநில மாநாடு ஒன்றை நடத்தப் போகிறது. எப்போது தேர்தல் வந்தாலும், 'மாநாடு நடத்தி மக்களைக் கூட்டுவது' இங்குள்ள திராவிடக் கட்சிகளின் ஸ்டைல். அதுவும் குறிப்பாக எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் போது பிரமாண்டமான மாநாடுகளை நடத்தி, 'இந்தக் கட்சிதான் ஜெயிக்கப் போகிறது' என்று இமேஜை ப்ரொஜெக்ட் பண்ணவே இந்த மாநாடுகள் உதவும். ஆகவே விரைவில் நடைபெறவிருக்கும் தி.மு.க.வின் மாநில மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ய அனைத்து மாவட்டச் செயலாளர்களையும் முடுக்கி விட வேண்டும். அது இரண்டாவது நோக்கம்.

மூன்றாவதுதான் நரேந்திர மோடி விவகாரம். தி.மு.க. ஒரு முக்கிய கட்டத்தில் இன்று நிற்கிறது. இன்றைய திகதியில் அகில இந்தியக் கட்சிகளாக இருக்கும் காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய இரண்டில் தி.மு.க.விற்கு ஏற்ற கட்சி பா.ஜ.க. என்றே பல ஸ்டாலின் ஆதரவாளர்கள் நினைக்கிறார்கள். ஏனென்றால் காங்கிரஸ் மாநிலத்தில் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் இருக்கிறது. அதற்காகவே விஜயகாந்தை தனியாக அக்கட்சி கொம்பு சீவி விட்டுக் கொண்டு இருக்கிறது என்று ஸ்டாலின் ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். அதே நேரத்தில் பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் இப்போதைக்கு மாநில அரசியல் அக்கட்சிக்குத் தேவையில்லை. தமிழகத்தில் முதலமைச்சராக அக்கட்சியின் சார்பில் 2016 சட்டமன்றத் தேர்தலில் முன்னேற்பாடுகள் செய்யப் போவதில்லை. அது தங்களுக்குச் சாதகமான அம்சம் என்று தி.மு.க. கருதுகிறது. இது தவிர அகில இந்திய அளவில் மோடிக்கு ஆதரவாக உருவாகியிருக்கும் அலையில் தி.மு.க. எதிர் நீச்சல் போட வேண்டியதில்லை என்ற எண்ணமும் அக்கட்சிக்கு இருக்கிறது. அதற்குக் காரணம் மைனாரிட்டி சமுதாய வாக்குகள் ஒட்டுமொத்தமாக தி.மு.க.விற்கு விழாமல் போவதுதான்.

ஆகவே 'பிரதமர் வேட்பாளராக மோடியை' தி.மு.க. ஆதரித்தால், தமிழகத்தில் 'பிரதமர் வேட்பாளராக ஜெயலலிதாவை' முன்னிறுத்தும் அ.தி.மு.க.வை எதிர்கொள்ள முடியும் என்று அக்கட்சித் தலைமை கருதுகிறது. 'அந்த இரு பிரதமர் வேட்பாளர்களுக்குள் எதிரும் புதிருமான போட்டியை உருவாக்குவதே இந்தமுறை தி.மு.க.வின் வெற்றி வியூகம்' என்று ஒரு முன்னாள் அமைச்சரே சற்று வித்தியாசமாகக் கூறியது வியப்பாக இருந்தது. முன்பு மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை தி.மு.க. கூட்டியது. அதில் கூட்டணி பற்றி பல்வேறு கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. குறிப்பாக தே.மு.தி.க., காங்கிரஸ் போன்ற கட்சிகளுடன் சேருவது, சேரக்கூடாது என்று இரு பிரிவாக நின்று கருத்துச் சொன்னார்கள் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள். அப்போது நரேந்திர மோடி தமிழகத்திற்குள் நுழையாத நேரம். இப்போது திருச்சிக்கு வந்து ஒரு 'எலெக்ட்ரிக் பிரசாரத்தை' செய்து விட்டுப் போயிருக்கிறார் நரேந்திர மோடி. இந்தப் பின்னணியில்தான் தி.மு.க. தனது பொதுக்குழுவைக் கூட்டியிருக்கிறது. இது அக்கட்சியின் 'முடிவு எடுக்கும்' அதிகார மையம் என்றே சொல்ல வேண்டும். அதேசமயத்தில் இக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் வருவார்கள். எனவே மோடியின் தாக்கம் எப்படி கிராமங்களில், குக்கிராமங்களில் இருக்கிறது? நகர்ப்புறங்களில் எப்படியிருக்கிறது என்று நாடியைப் பிடித்துப் பார்ப்பதற்காகவே இந்த பொதுக்குழுக்கூட்டம். அது மட்டுமன்றி டிசம்பர் மாதத்தில் ஏறக்குறைய அடுத்த அரசியல் கூட்டணிக்கான அஸ்திவாரங்கள் போடப்பட்டிருக்கும். அந்த நேரத்தில் பொதுக்குழுவைக் கூட்டி அதில் கூட்டணி பற்றியும், நரேந்திரமோடியுடன் கூட்டணி வைப்பது பற்றியும் தி.மு.க. யோசிக்கும் என்றே தெரிகிறது.

'மோடி' என்ற தனி மனிதரை தி.மு.க. எதிர்க்கவில்லை என்று கூறும் தி.மு.க. முன்னணிப் பிரமுகர் ஒருவர், 'நரேந்திர மோடியை யாரும் 'இந்துத்துவா' லீடராகப் பார்க்கவில்லை. அவரை ஒரு நல்ல நிர்வாகி என்றே பார்க்கிறார்கள். அதற்கு வெற்றிகரமாக மூன்று முறை குஜராத்தில் அவர் முதலமைச்சரானதே காரணம். வாஜ்பாய்க்கு கூட இந்தப் பெயர் கிடைத்ததில்லை. ஆகவே அவரை ஏற்றுக் கொள்வதில் தி.மு.க.விற்கு பிரச்சினையில்லை. ஆனால், எங்களுக்குப் பிரச்சினை தேர்தலுக்குப் பிறகுதான். பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு மோடி தலைமையில் ஆட்சி வந்து, இதே மாதிரி 'டெவலப்மென்ட்' மற்றும் 'அட்மினிஸ்டிரேட்டர்' என்ற இமேஜை அவர் தக்க வைத்துக் கொண்டால் எங்களுக்குத் தொல்லையில்லை. ஒருவேளை அவர் இந்துத்துவா பக்கம் திரும்பி விட்டாலோ, அல்லது அந்தப் பக்கம் போக அவரது தாய்க்கழகமான ஆர்.எஸ்.எஸ். வற்புறுத்தி விட்டாலோ, பிறகு தி.மு.க. வின் பாடு பெரும் திண்டாட்டம் ஆகிவிடும். ஏனென்றால் அடுத்து நாங்கள் தமிழகத்தில் சந்திக்க வேண்டியது சட்டமன்றத் தேர்தல். அப்போது மைனாரிட்டி மக்களிடம் நாங்கள் எந்த விதமான சமாதானமும் சொல்ல முடியாது. ஆகவே தேர்தலுக்குப் பிறகும் மோடி இந்துத்துவா லீடராக மாற மாட்டார் என்பதற்கு உத்தரவாதம் என்ன என்பதுதான் இப்போதைக்கு தி.மு.க.வின் கவலை' என்றார் அர்த்த புஷ்டியுடன். ஆகவே, பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க தி.மு.க. தயங்கவில்லை. அதேசமயத்தில் அக்கட்சி தேர்தலுக்குப் பிறகும் 'இந்துத்துவா' பக்கம் திரும்பிவிடக்கூடாது என்ற அச்சம் மட்டுமே அக்கட்சியை மிரட்டிக் கொண்டிருக்கிறது. இது போன்ற இக்கட்டான சூழ்நிலையில்தான் தி.மு.க. பொதுக்குழு கூடுகிறது. அரசியல் பார்வையாளர்களுக்கு மெல்லுவதற்கு நிச்சயம் அவல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகல்யா பிரான்சிஸ் கிளைம்



அகிலன் கதிர்காமர்

## வட மாகாண சபையின் கவனத்திற்கு



# சீவல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிகளும் சவால்களும்

பரம்பரையாக சீவல் தொழில் செய்து வரும் ஒரு சமூகம் வரலாற்றில் சாதிரீதியான ஒடுக்கு முறைகளுக்கும் போர்க்காலத்தின் அழிவுகளுக்கும் முகம் கொடுத்தது. அதற்கு கடந்த காலப் போராட்டங்கள் மற்றும் சமூக முயற்சிகளுடன் அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பு முக்கியமானது. ஆனால், அந்த சமூகம் இன்று சிக்கலான பொருளாதார நிலைமைக்குள் தள்ளப்படுகின்றது.

1972ஆம் ஆண்டு தொடக்கம் 40 வருடங்களுக்கு மேலாக இயங்கிக் கொண்டிருந்த பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் போர் முடிந்த 4 வருடத்திற்குப் பின்னர் திறந்த பொருளாதாரத்தாலும் சந்தையின் தாக்கத்தாலும் உடைந்து




போகுமா? யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏ-9 பாதை திறந்ததைத் தொடர்ந்து தெற்கிலிருந்து வருகின்ற சாராயம், பியர் என்பவற்றின் சந்தைப்படுத்தல் மற்றும் மதுபான விடுதிகளின் அதிகரிப்பு போன்றவற்றினால் கள், சாராயம் போன்ற உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. மற்றும் அண்மைக் காலங்களில் விவசாய அழிவுகளினால் வருமானங்கள் வீழ்ச்சியடைந்திருப்பதால் கள்ளுக்கான கேள்விகள் குறைந்துள்ளன. அத்துடன், இளம் தொழிலாளர்கள் சிலர் இத்தொழிலைச் செய்த போதிலும் அவர்களும் குறிப்பிட்ட சில நாட்களுக்குப் பின் கலாசாரம், சுய கௌரவம், சாதிரீதியிலான பார்வை போன்றவற்றினால் இன்று சீவல் தொழிலைக் கைவிடுகிறார்கள்.

இலங்கை வரலாற்றில் கல்வி, சுகாதாரம், வறுமை ஒழித்தல் போன்ற சமூக முன்னேற்றங்களுக்கு தொழிற் சங்கங்களினதும் கூட்டுறவுச் சங்கங்களினதும் தாக்கம் முக்கியமானது. இன்று வடமாகாண விவசாயிகள் உட்பட பொதுமக்கள் கடன்களில் மூழ்கியிருந்த போதிலும் பனை, தென்னை கூட்டுறவின் செயற்பாடுகளினால் சீவல் தொழில் சமூகம் இந்த கடன் கலாசாரத்தில் அகப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சீவல் தொழிலாளியின் அனுபவங்கள்

நான் 18வயதில் எனது மச்சானிடமிருந்து சீவல் தொழிலைப் பழகினேன். 1991ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னியில் சிராஞ்குளத்தில் வசித்தேன். அங்கும் சீவல் தொழிலைச் செய்தேன். பின்னர் 2002ஆம் ஆண்டு அச்சுவேலிக்கு திரும்ப வந்து சீவல் தொழிலைச் செய்தேன். நான் 60ஆவது வயதில் ஓய்வூதியத்தினைப் பெற்றேன். ஓய்வூதியம் எடுத்துக் கொண்டும் சீவுகின்றேன். தற்போது நான் பொச்சுக்கட்டி மரம் ஏறுகிறேன். 10 தென்னை மரம் சீவுகின்றேன்.

காலை 4 மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளை முடித்து சீவலுக்குச் சென்று 9.30க்குள் கள்ளு இறக்கிக் கொண்டந்திடுவேன். பாளை தட்டுற முறை என்றால் கொஞ்சம் நேரமாகும். ஒன்றுவிட்ட ஒரு நாள் பாளை தட்ட வேண்டும். பின் 11.30க்கு முன்னர் தவறணைக்குள் கள்ளு கொண்டுபோய் கொடுக்க வேண்டும். பின்னர் தோட்டத்தில் போய் வேலை செய்வேன். மாடு கொண்டு போய் கட்டுவேன். பின்னர் மாலை 4.30க்கு திரும்பவும் சென்று 10 தென்னையும் ஏறி சீவி 6.30க்கு முன்னர் தவறணைக்கு கள்ளு கொண்டு செல்வேன். ஒரு நாளைக்கு 15 போத்தல் கள்ளு கொண்டு போய்க் கொடுப்பேன். எனக்கு கால்களில் அதிக காயங்கள் மற்றும் நெஞ்சு வருத்தங்கள் வரும்.



தர்மபாலசிங்கம்
*(67 வயது)*

கத்தி ஆரம்பத்தில் நல்ல கூராகவும் பெரிதாகவும் இருந்தது. இப்போது எப்படி தேய்ந்து இருக்குது என்று பாருங்கோ. இதனைப் போலத்தான் நாங்களும் தேய்ந்து போகிறோம். மரத்தில் ஏறும் போது சீவிலி கூடு, கத்தி, பாளைதட்டும் பொல்லு, கள்ளு ஊத்த போத்தல் என்பன கொண்டு செல்வேன். முந்தி நான் பொச்சு மட்டை கட்டாமல் சீவும் போது கால் சரியாக காச்சுப் போய் இருக்கும். தற்போது பொச்சு கட்டி சீவுவதால் பறவாயில்லை. தோட்டமும் செய்வதால் ஆரம்பத்தில் வருமானம் பறவாயில்லாமலிருந்தது. தற்போது வெங்காயம் எல்லாம் அழிவடைந்ததால் பெரிதாக வருமானம் இல்லை.

நான் 18 வயதில் கள்ளு சீவேக்க மரவரி முறை இருந்தது. நாங்கள் 5 பேர் இணைந்து மரம் சீவுவதற்காக 100 ரூபா செலுத்தி அனுமதி எடுப்போம். நான் ஆரம்பத்தில 90 போத்தல் கள்ளு ஒரு நாளைக்கு சீவிக் கொடுப்பேன். அப்போது கள்ளு 10சதம். பின்னர் 1972ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது நான் 552ஆவது உறுப்பினராக வேலை செய்தேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் வந்ததால் எங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. தொழில் விடுற காலத்தில் சமாசத்திலிருந்த எங்களுக்கு ஊதியத் தொகை வழங்கப்படும். மரவரி இருந்த காலத்தில் கள்ளு எல்லாம் சீவி முதலாளிக்கே கொடுக்கனும். ஆனால், கூட்டுறவு வந்தபின் எங்களுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன.

விபத்து நிதி கட்டாய சேமம் என்று சொல்லி எங்கட கள்ளிலிருந்து 1ரூபா கழிப்பார்கள். சேமப் பணம் மூன்று மாதத்திற்கு ஒருக்கா தருவார்கள். தொழில் இல்லாதபோது கட்டாய சேமப்பணம் தருவார்கள். விபத்து நிதி தந்தபோது ஓய்வூதியத்திட்டமாக மாற்றப்பட்டு 60 வயதிற்கு பிற்பாடு தருவார்கள். நான் ஓய்வூதியப் பணமும் எடுத்துக் கொண்டு சீவி வருகின்றேன். சீவல் தொழிலை எனது அப்பு மாமா மற்றது நான் செய்கிறேன். இனி எனக்குப் பிறகு ஒருவரும் செய்ய மாட்டார்கள். இளம் தலை முறையினர் படிக்கிறார்கள். படிக்காதவர்கள் கூலி வேலைக்குப் போகிறார்கள்.

1960ஆம் ஆண்டு இடம்பெற்ற சாதி எதிர்ப்புப் போராட்டங்களுடன் நானும் இணைந்து செயற்பட்டேன். தேநீர் கடை எதிர்ப்புப் போராட்டங்களுடன் எல்லாம் இணைந்து செயற்பட்டேன். எங்கட வாசகசாலையில் ரஷ்யா கொமினிஸ்ட், சீனா கொமினிஸ்ட் என்று இரண்டு கொமினிஸ்ட்கள் இருந்தன. இதில் சீனா கொமினிஸ்டில் நானும் ஒரு உறுப்பினராக அங்கம் வகித்தேன். ■

வில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் சவால்களுக்கு ஓர் தீர்வு காண்பதென்பது நெருக்கடியின் மத்தியில் இயங்கும் தற்கால இலங்கைப் பொருளாதாரத்திற்கும் சில முக்கியமான கருத்துகள் மற்றும் தீர்வுகளாக அமையலாம்.

### சீவல் தொழில்

சீவல் தொழில் என்றால் பனை, தென்னை மரங்களில் ஏறி கள்ளினை இறக்குகின்ற தொழிலாகும். இத்தொழில் ஆண்களினால் மட்டும் செய்யப்படுகின்றது. இவர்கள் காலை 6 மணியிலிருந்து பின்னர் 10.30க்குள் கள்ளினை தவறணைக்குள் ஒப்படைக்க வேண்டும். இது போலவே மாலை 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு மீண்டும் சீவச்சென்று 6.30க்குள் தவறணைக்கு கள்ளினை ஒப்படைக்கிறார்கள். இடைப்பட்ட நேரங்களில் சிலர் தோட்ட வேலை செய்கின்றார்கள். ஒருவர் ஒரு நாளைக்கு 5-15க்கிடைப்பட்ட மரங்கள் காலையும் மாலையும் சீவுகிறார்.

இவ்வாறு மரத்தில் ஏறி இறங்குவதால் தொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். மழை காலங்களில் மரங்களில் ஏறுவதென்பது இவர்களுக்கு பெரிய சவாலாகவுள்ளது. மற்றும் இத்தொழிலானது உடலை வருத்தி செய்கின்ற ஒரு கடினமான தொழிலாகவுள்ளதனால் பாரிய பல நோய்களுக்குள்ளாகிறார்கள். அத்துடன், இவர்கள் மரம் ஏறும் போது விழுந்தால் உயிருக்கும் ஆபத்துண்டு. மேலும், இத்தொழிலானது குறிப்பிட்ட சாதி சமூகத்தினர் மட்டும் செய்யும் தொழிலாக இன்று வரையுள்ளது.

சீவல் தொழிலாளர்கள் ஆரம்ப காலங்களில் முதலாளிக்கு நன்மை பயக்கும் மரவரி முறையின் கீழ் சுரண்டப்பட்டு மிகவும் வறிய நிலையில் வாழ்ந்து வந்தார்கள். 1972ஆம் ஆண்டு பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் தோற்றங்களின் பின்னர் இவர்களுடைய பொருளாதார நிலை வளர்ச்சியடைந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 7230க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டுறவுச் சங்கம் இன்று 3924 உறுப்பினர்களாக குறைவடைந்துள்ளது. இளம் தொழிலாளர்கள் மும்முரமான வேலையினூடாக அதிக மாதாந்த வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தபோதும் சீவல் தொழிலின் கடுமையான சூழ்நிலை காரணமாக நீண்ட காலம் தொழில் செய்ய முடியாதுள்ளது. மேலும் ஒரு தனிநபர் தன் வருமானத்தை முதலீட்டுவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதனாலும் சமூக அணிதிரட்டலுக்கான சந்தர்ப்பங்கள் இல்லாத காரணங்களாலும் தொடர்ந்து பொருளாதார சமூக சவால்களை எதிர்கொள்கிறார்கள்.





கூட்டுறவுச் சங்கங்களின் வரலாறு

யாழ்ப்பாணத்தில் சாதியத்துக்கெதிராக 1960ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தின் பின் ஆரம்பிக்கப்பட்ட பனை,தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு பரந்துபட்டதாக விளங்குகின்றது. மூடிய பொருளாதார காலத்தில் 1972ஆம் ஆண்டில் நிதியமைச்சராக விருந்த என். எம். பெரேராவினால் இலங்கை கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இவை கூட்டுறவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் கீழ் இயங்குகின்றன.

இச்சங்கங்கள் கிராமப்புற மக்களின் பல அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்றன. ஒவ்வொரு தவறணையின் கிளை முகாமையாளருக்கு கீழ் காலை 11-2 மணிவரை மாலை 5-8 மணிவரை திறந்து நடத்தப்படுகிறது. சீவல் தொழிலாளர்கள் கொண்டுவரும் கள்ளின் அளவு, பெறுமதி, தரம் மற்றும் கணக்குகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பாக இவரே இருக்கின்றார். மேலும், சீவல் தொழிலாளர்களை ஓர் ஒழுங்கு முறையின் கீழ் கூட்டிணைந்து செயற்பட இச்சங்கங்கள் உதவுகின்றன. யாழ். மாவட்டத்தில் 19 சங்கங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 சங்கங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 சங்கங்களும் வவுனியாவில் 3 சங்கங்களும் மன்னாரில் 5 சங்கங்களும் திருகோணமலையில் 2 சங்கங்களும் மட்டக்களப்பில் 8 சங்கங்களும் உருவாக்கப்பட்டு வடக்கு, கிழக்கில் இயங்கி வருகின்றன. இவற்றில் யாழ் மாவட்டத்தில் வலிகாமம் 13, வடமராட்சி 3, தென்மராட்சி 3 ஆகும்.

### கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான தொடர்பு

ஜனநாயகத்திற்கான ஓர் உதாரணமாக விளங்கும் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் முழு அதிகாரமும் தொழிலாளர்களால் நியமிக்கப்படும் தலைவர்களிடமே காணப்படுகின்றது. இங்கு நிர்வாகத்திலுள்ள கூட்டுறவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பணியாளர்கள் அனைவரும் இவர்களின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே இயங்க முடிகிறது. அத்துடன், சீவல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மட்டுமே இங்கு அங்கத்தவர்களாக இயங்கலாம். இவர்கள் இச்சங்கங்களின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கிளை அங்கத்தவர், கிளைக்குழு, கிளைத்தலைவர், கிளைச் செயலாளர் என தெரிவு செய்யப்பட்டு பின்னர் பொதுச்சபை நெறியாளர், குழுத் தலைவர், உபதலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர், பணியாளர் குழு என்னும் கட்டமைப்பின் ஒழுங்கு முறையின் கீழ் செயற்படுகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் தொழிலாளர்கள் வீட்டில் வைத்து இத்தொழிலைச் செய்ததால் பல சமூக கலாசார பிரச்சினைகளை எதிர்கொண்டார்கள். ஆனால், கூட்டுறவு அமைப்பின் மூலம் தங்களுக்கென நிரந்தரமான பாதுகாப்பான தொழிலினை ஏற்படுத்திக் கொண்டார்கள். இத்தொழிலைச் செய்கின்ற தொழிலாளர்கள் ஒரு மாதத்தில் 30000 - 80000 ரூபா அளவு ஊதியத்தினைப் பெறுகின்றனர். அதிகளவு ஊதியத்தினைப் பெறும் தொழிலாகக் காணப்பட்ட போதிலும் பெரும்பாலும் இளம் வயதினர் இத்தொழிலைச் செய்வதில்லை. 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் தான் செய்கிறார்கள்.

தொழிலாளர்கள் தவறணையில் கள்ளினைக் கொடுத்த பின்னர் தவறணையில் ஒரு போத்தல் தென்னங்கள்ளு 75ரூபாவிற்கும் பனங்கள்ளு 50ரூபாவிற்கும் விற்கப்படுகின்றது. விற்பனை செய்யப்படாது மீதியுள்ள கள்ளினை வடிசாலைகளுக்கு அனுப்புகின்றார்கள். வடிசாலைகள் 10ரூபாவிற்கு கள்ளினை வாங்குகின்றது. இதனால் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவிற்கும் நஷ்டம் ஏற்படுகின்றது. ஒரு போத்தல் சாராய உற்பத்திக்கு ஏறத்தாழ 10-14 போத்தல் கள்ளு தேவைப்படுகின்றது. வடிசாலையிலிருந்து 660 ரூபாவை கடைகளுக்கு விற்கப்படும் ஒரு போத்தல் சாராயத்திற்கு 445ரூபாவை அரசாங்கத்திற்கு வரி செலுத்துகிறார்கள். மீதி 215 ரூபாவிலும் தான் தொழிலாளர் ஊதியம் மற்றும் கள் வாங்குதல், வடிசாலைகளை இயக்கும் செலவுகள் என பயன்படுத்துவதால் இலாபம் கிடைப்பது குறைவாகவுள்ளது. மேலும், சாராயத்தின் உற்பத்தியில் வரும் இலாபங்கள் மிகவும் குறைவாக இருப்பதனால் கள்ளுக்கான கேள்வி குறைந்துள்ளது.

| யாழ்.மாவட்டத்திலுள்ள வடிசாலைகள் சாராயத்தை கடைகளுக்கு விற்கும் விலை, கடைகள் விற்கின்ற விலைகளின் அட்டவணை | | |
|---|---|---|
| வடிசாலைகள் | வடிசாலைகள் விற்கும் விலை | கடைகள் விற்கும் விலை |
| வலிகாம வடிசாலை | 650ரூபா | 700ரூபா |
| திக்கம் வடிசாலை | 660ரூபா | 710ரூபா |
| வரணிவடிசாலை | 610ரூபா | 670ரூபா |

தற்காலத்தில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் பல நெருக்கடியின் மத்தியில் சில முயற்சிகளை முன்னெடுக்கின்றன. அவற்றுள் முக்கியமாக, குடிசைகளாக இருந்த தவறணைகளை புதிய கட்டிடங்களாக மின்சார விசிறி வசதியுடன் கதிரையில் அமர்ந்து குடிக்கக் கூடிய வசதிகளுடன் நவீனப் படுத்தப்பட்டுள்ளன.

போர்க்காலச்சூழலில் பல பனைகள் அழிக்கப்பட்ட போதிலும் மீதியுள்ள பனைகளிலிருந்து விழுந்த பனம் விதைகள் மூலம் பனைமரங்கள் மீண்டும் முளைத்துள்ளன. மற்றும் 1996 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது பணக் கொடுப்பனவுகளை கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாளருக்கு வழங்கியுள்ளது. பல்வேறுபட்ட இடங்களில் தொழிலாளர்கள் வசித்தபோதும் இத்தொழிலைச் செய்யக் கூடிய வசதி வாய்ப்புகளை சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சீவல் தொழிலினை பெண்கள் செய்வதில்லை. ஆனால், சங்கங்களில் பனங்கட்டி உற்பத்தி, பனாட்டு உற்பத்தி மற்றும் போத்தலில் கள் அடைத்தல், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிதல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். இருந்தும் பெண்களின் பங்களிப்பு மற்றும் தலைமைத்துவம் கூட்டுறவுகளில் போதாது. சீவல் தொழிலாளர்களின் பெண்கள் கூறுவது, ஆரம்ப காலங்களில் அதிக வருவாயைப் பெறக் கூடியதாக இருந்த போதிலும் தற்போது ஓரளவு வருமானம்தான் பெறக்கூடியதாக வுள்ளது. மற்றும் மரத்தில் ஏறும் போது உடல் ஆபத்துகள் ஏற்படுவதால் தொழிலுக்கு கணவர்கள் செல்வது பயமாகவுள்ளது. மேலும் சில காலங்களில் கள்ளு குறைவடைவதனால் வருமானம் போதுமானதாக இருப்பதில்லை. இதனால் பெண்களும் ஆண்களும் கூலி வேலைகளுக்கும் செல்கிறார்கள்.


இத்தொழில் புரிபவர்களின் பிள்ளைகள் படித்து நல்லநிலைக்கு வந்த பின் பிள்ளைகளோ இவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள்

- 183 ஆசிரியர்களுடன் 120 பாலர் பாடசாலைளை நடத்துதல்
- பாலர் பாடசாலைக்கு சீருடை, சத்துணவு
- சிறந்த அங்கத்தவர்களினை கௌரவித்தல்
- பிள்ளைகள் புலமைப்பரீட்சை சித்தி எனின் 5000ரூபா
- பல்கலைக்கழகம் சித்தி 10000ரூபா
- வருடாந்தம் பிள்ளைகளுக்கு கொப்பிகள் வழங்கல்
- வேலை வாய்ப்புகள் வழங்கல்
- இழப்பீட்டுத் தொகை வழங்கல்
- சித்த மருத்துவ கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தல்
- கிராமிய வங்கிகள் மூலம் சேமிப்புக் கடன் வழங்கல்
- ஒய்வூதியம் மகளிர் சுயதொழில் முயற்சித் திட்டங்கள்
- பெண்களின் பங்களிப்பு

மனைவிகளோ சீவல் தொழிலை கணவர்கள் மற்றும் தந்தைகள் செய்வதை விரும்பவில்லை. மேலும்,கிராமப் புறப் பாடசாலைகளின் சில ஆசிரியர்கள் சீவல் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி மீது அக்கறை கொள்வதில்லை. மற்றும் இவர்கள் உயர் சாதி மாணவர்களினாலும் புறந்தள்ளப்படுகிறார்கள். இத்தொழில் பற்றி மற்றும் பாடசாலைகளில் தொடரும் பாகுபாடு தமிழ்ச் சமூகத்தை நெருக்கும் சாதியத்தின் ஒரு அம்சமாகும்.



### சவால்கள்

சாதியடிப்படையில் தவறணைகளின் பதிவுகளுக்கு அயலவர்களின் எதிர்ப்புகளும் முறைப்பாடுகளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிரமத்தைக் கொடுக்கின்றது. கள்ளினால் உடலிற்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறைந்ததாக இருந்தபோதிலும் கூடிய அற்ககோல் வீதத்தைக் கொண்ட சாராயத்தை விநியோகிக்கும் மதுபான விடுதிகளிலும் பார்க்க தவறணைகளுக்கே இவ்வாறான எதிர்ப்பு நிலவுகின்றது.

இன்று திறந்த பொருளாதார சந்தையில் போட்டி போடுவதற்கு தமது பொருட்களினை நவீனப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். உதாரணமாக, வெல்லத்தின் உற்பத்தியின் பின் பொதிகளில் அடைத்து விற்கக் கூடிய வசதி வாய்ப்புகள் இல்லை. மற்றும் தெற்கிலிருந்து வரும் சாராயத்துடன் போட்டி போடக்கூடிய வடிசாலைகளின் தொழில்நுட்ப முன்னேற்றம் அவசியம். அத்துடன் கள்ளை போத்தல்களில் அடைக்கும் நவீனத்துவம் தேவைப்படுகின்றது. மேலும், வெளிநாடுகளுக்கு சாராயம் மற்றும் கள்ளினை ஏற்றுமதி செய்து கூடிய வருமானத்தைப் பெறக்கூடிய வாய்ப்புகள் தேவை. இவை சீவல் தொழிலாளர்களதும் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களதும் வேண்டுகோளாக வுள்ளது.

ஆரம்பகாலத்தில் உயர்சாதி முதலாளிகளின் நிலமானிய ஆதிக்கத்தின் கீழ் சீவல் தொழிலாளிகள் சுரண்டப்பட்டார்கள். சங்கங்களின் தோற்றத்தின் பின் கூட்டுறவின் ஒழுங்கின் அடிப்படையில் தொழிலாளர்கள் சுயாதீனமாக செயற்பட்டார்கள். தற்கால முதலாளித்துவ பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக திறந்த சந்தையின் தாக்கம் மற்றும் போரின் பின் காணப்படும் சாதியத்தினால் இவர்கள் ஒரு சமூக பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள்.

### தொழிலாளர்களின் எதிர்காலத்தை நோக்கி

சீவல் தொழிலாளர்கள் சிலருடன் உரையாடிய போது, தம்முடன் இத் தொழில் முடிவடைந்து விடும் என்றும் தம்பிள்ளைகள் இத்தொழில் செய்வதை தாம் விரும்பவில்லை எனவும் கூறினார்கள். மேலும், அவர்கள் அனைவரும் கல்வி ரீதியில் முன்னேற்றம் அடையலாம் என்று நம்புகிறார்கள். ஆனால், ஒரு சில தொழிலாளர்களின் பிள்ளைகளினைத் தவிர ஏனைய பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்தி விட்டு கூலி வேலை செய்கிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இவர்களின் எதிர்காலம் பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

தற்கால வடமாகாண சபைத் தேர்தலில் சீவல் தொழில் சமூகத்தினைச் சேர்ந்த ஓர் கூட்டுறவுத் தலைவர் வேட்பாளராக இருந்தார். ஆனால், அவரால் கூட சீவல் தொழிலாளிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்கொள்ளும் சவால்களை பிரசாரப் படுத்த முடியவில்லை. இது தமிழ் அரசியல் மற்றும் தமிழ் ஊடகங்கள் அத்துடன் இன்று வரையுள்ள சாதிய நிலைப்பு என்பவற்றின் குறைபாடுகளைக் காட்டுகிறது. வரலாற்றைப் பார்க்கும் போது யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய உயர்சாதி ஆதிக்கத்துடன் வந்த அரசியல் இந்த சமூகத்தின் சுரண்டலுக்கே கை கொடுத்தன. ஆனால், பல தசாப்தங்களுக்கு முன் இச்சமூகமும் இடதுசாரிகளும் முன்னெடுத்த போராட்டங்களால் பல சமூக முன்னேற்றங்கள் மற்றும்

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெ.மதுசூதனன்

# பனுவல் பார்வை



தமிழில் கல்வியியல் சார்ந்த நூல்களை அதிகம் வெளியிட்டு, தமிழ்நூல் வெளியீட்டுத் துறையில் "சேமமடு பதிப்பகம்" தனித்துவமாக விளங்குகின்றது. இந்த வெளியீட்டு வரிசையில் தற்போது பேராசிரியர் மா.கருணாநிதி எழுதிய "கற்றல் கற்பித்தல்: மேம்பாட்டுக்கான வழிமுறைகள்" எனும் நூலை வெளியிட்டுள்ளனர்.

இன்று நாளாந்தம் சமூக அறிவியல், இயற்கை அறிவியல் மற்றும் மனிதப் பண்பியல் துறைகளில் ஆரா




ய்ச்சிகளினூடாக அறிவுப் பெருக்கம் ஏற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பாடசாலைகளில் பெறப்படும் அறிவும் திறன்களும் சிறிது காலத்தின் பின் காலாவதியாகிப் போகின்றன. அவை பயனற்றும் பொருத்தமற்றும் போகின்றன. ஆகவே, பாடசாலைக் காலத்தின் பின்னரும் தமக்கான அறிவையும் திறன்களையும் மாணவர்கள் சுயமாகக் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனால் வாழ்நாள் முழுவதும் அறிவையும் திறன்களையும் புதுப்பித்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் புதிய அறிவியல் தொழில்நுட்ப சமுதாயத்தில் நாம் இணங்கி வாழ்வது சாத்தியமாகும்.

எனவே பாடசாலைக் கல்வியானது, மாணவர் விலகிய பின்னரும் புதிய அறிவையும் திறன்களையும் கற்றுக்கொள்வதை இலகுபடுத்தும் முறையில் சுயமாகக் கற்கும் வழிமுறையில் கற்றுக்கொடுப்பதாக இருத்தல் வேண்டும். சுயஅறிவு, சுயதேடல், சுயகற்றல் போன்ற அம்சங்களை வலியுறுத்தும் கல்விச் செயற்பாடுகள் எம்மிடையே விரிவாக்கம் பெற வேண்டும். மாணவர்களது சுய கற்றல், சுயஅறிவு, சுயதேடல் போன்ற பண்புசார் விருத்திக்கமைய கற்றல் - கற்பித்தல் செயன்முறை அமைய வேண்டும். இதற்கான புதிய வழிமுறைகள் பற்றிய கற்றலும் தேடலும் சமகாலத்தில் ஆசிரியர்களுக்கு முனைப்பாக இருக்க வேண்டும். இந்த அம்சங்களை வலியுறுத்தும் வகையில் பேராசிரியரின் இந்நூல் அமைந்துள்ளது.

இன்று கல்வித்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை ஆசிரியர்களது கல்விச் செயற்பாட்டிலும் உடனடியாக மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. கடந்தகாலம் பற்றிய நோக்கினைக் கைவிட்டு எதிர்காலம் பற்றிய புதிய நோக்கினைக் கைக்கொள்ள வேண்டும். துரிதகதியில் மாற்றங்கள் ஏற்படும் போது கடந்தகால எடுகோள்கள், நோக்கங்கள் பெறுமதியற்றதாகி விடுகின்றன. ஆகவே பழைய அனுபவங்கள் பயனற்றுப் போகின்றன. இங்கு கற்றல் - கற்பித்தல் செயன்முறையும் உயிர்ப்பற்றனவாகி விடுகின்றன. தற்போது விருத்தியுறும் புதிய அறிவுத் தொகுதியைக் கையளிக்கும் "கல்வி உளவியல்" புதிய சிந்தனையையும், நோக்கு முறையையும் கொண்டிருக்க வேண்டும். இவை ஆசிரியர்களுக்கு திடமாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் கட்டாயக் கல்வி பெறும் காலத்திலேயே அவர்கள் "கற்பதற்குக் கற்றுக் கொள்ள" வேண்டும். இதற்குரிய அறிவும் திறன்களையும் புதுப்பித்துக்கொள்வதற்கான கற்றல் கற்பித்தல் செயன்முறை விரிவுபடுத்தப்பட வேண்டும். இவற்றை மேம்படுத்தக்கூடிய சிந்தனைகள், வழிமுறைகள் பற்றி புதிய நோக்குமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இவற்றையே இந்நூல் வலியுறுத்துகின்றது.

சலிப்பூட்டும் கற்றல் செயன்முறையில் இருந்தும் அதற்குத் துணையாக உள்ள பழைய சிந்தனை முறையில் இருந்தும் முதலில் ஆசிரியர்கள் விடுபட வேண்டும். எப்போதும் சுயதேடல், சுயகல்வி என்ற பண்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் விருத்தி ஆசிரியத்துவத்தின் உயிர்ப்பு மையமாக அமைய வேண்டும். கற்றல் கற்பித்தல் செயன்முறை சார்ந்த புதிய விளக்கங்களுக்கும் புதிய தேவைகளுக்கும் ஏற்ப தம்மைத் தயார்ப்படுத்தக் கூடிய சுயவிளக்கம், சுய தேடல் இல்லாமல் ஆசிரியர் தமது பொறுப்பை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியாது. 'மாறிவரும் உலகில் ஆசிரியர் வகிபாகம்' என்ன என்பது வெறும் கேள்வியாக மட்டு மல்ல, அவை சிந்தனையும் செயல்வாதமும் புதிய நடத்தைக் கோலங்களுக்குமான பண்புசார் விருத்திக் கோலங்களையும் கொண்டுள்ளன. இந்நூல் இத்தகைய அம்சங்களை உணர்ந்துகொள்ளவும் நாம் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் ஆழ்ந்து சிந்திக்கவும் செயற்படுவதற்குமான உந்துதல்களையும் தரும் நோக்கிலேயே ஆக்கம் பெற்றுள்ளது.

உலகளாவிய செல்நெறியும் கற்றலும்/ ஆசிரியர்களை தொழிற்றகைமைப்படுத்தல் /விளைதிறனுள்ள கற்பித்தலின் கூறுகள்/ ஆசிரியர்களை மதிப்பிடுதல்/ ஆசிரியர் கல்வியும் பயிற்சியும்- பாடசாலைகளில் அவற்றின் பயன்பாடுகளும்/ கற்றலுக்கான தலைமைத்துவம்/ மாணவ கற்றல்- ஆசிரியர்களுக்கான வினைத்திறன்கள் /கல்விச் செயற்பாடுகளும் பெற்றோரும்/பிள்ளையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள்/நடத்தைப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கான சில வழிமுறைகள்/வகுப்பறை முகாமைத்துவமும் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளும்/ பாடசாலைகளில் மாணவர் பற்றிய மதிப்பீடுகள்/பாடசாலை மட்டக் கணிப்பீடு- நடைமுறைகளும் பிரச்சினைகளும்/இலங்கையின் ஆரம்பக் கல்வியில் நியாயத் தன்மையும் சமவாய்ப்பும்/இலங்கைப் பாடசாலைகளில் கல்விபயிலும் எட்டாம், பத்தாம் வகுப்பு மாணவரின் கல்வி அடைவுகள்/கற்றல் -கற்பித்தல் மேம்பாட்டுக்கான போதனா தலைமைத்துவம்/ பாடசாலையில் மாற்றங்களுக்கான தலைமைத்துவம் முதலான 17 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

இன்றைய தமிழ் பேசும் சூழலில் கற்றல்- கற்பித்தல் செயன்முறைகள் சார்ந்து புதிய தேடல்களுக்கும் புதிய சிந்தனைக்கும் தேவைகள் மிகுந்துள்ளன. இதற்கு இந்நூல் புதிய வாயில்களைத் திறக்க வேண்டும் அல்லது இந்நூல் தரும் வெளிச்சத்தில் இருந்து நாம் மீறல்வகைப்பட்ட தெரிவுகளுக்கும் தேடல்களுக்கும் செல்வதற்கும் துணை செய்ய வேண்டும். இந்நூல் ஆசிரியர்களின் தொழில்சார் விருத்திக்கும் ஒரு கைநூலாக அமைந்துள்ளது.இந்த ஆக்கம் மூலம் யாவரும் பயன்பெற்றுச் சிறக்கவும் தமிழ்க் கல்விச் சூழலில் தரமான கற்றல் - கற்பித்தல் சூழல் மேம்பாடடையவும் வழி கிடைக்கட்டும். ■

---

*(63ஆம் பக்கத் தொடர்ச்சி...)*
கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின.

இந்தக் கண்ணோட்டத்தில் தற்கால புத்திஜீவிகள் தமிழ் மக்களுடன் வெளிப்படையாக கலந்துரையாடி இச்சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பார்களா? மற்றும் வட மாகாணசபை இந்த சமூக முன்னேற்றத்திற்கும் அவர்கள் முகம் கொடுக்கும் சவால்களுக்கும் தீர்வினைக் கொண்டு வருமா?

1972ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கத்துடன் சீவல் தொழில் சமூகம் பல முன்னேற்றங்களை கண்டுவந்தது. ஆனால், இந்தத் தொழிலைத் தொடர முடியாமல் கூலி வேலைக்குள் தள்ளப்பட்டு முதலாளிகளினால் மேலும் சுரண்டப்படலாம். இது உடைமை இழப்பிற்கும் சாதிரீதியான சமூக புறந்தள்ளலுக்கும் வழிவகுக்கும் அபாயமுண்டு. இந்தச் சவால்களுக்கு சீவல் தொழிலாளர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் அவர்களின் வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் சமூகத்தை மாற்றும் ஒரு இயக்கத்திற்கு தலைமை தாங்க வேண்டியுள்ளது.

***இக்கட்டுரை எழுதவதற்கு தகவல்களை தந்துதவிய அச்சுவேலி பிரதேசத்தைச் சேர்ந்த சீவல் தொழிலாளர்களுக்கும் மற்றும் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கும் அத்துடன் யாழ்ப்பாண பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாச பணியாளர்களுக்கும் மனமார் ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*** ■


---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*
சிந்தனைகளை வளம்படுத்தி கலை இலக்கியப் பரப்பில் முற்போக்குவாதத்தை தூக்கி நிறுத்தும் படைப்பாளிகள் வறட்சிபெறும் காலம் உருவாவதையும் நாம் மறுக்கமுடியாது. இன்றைய நுகர்வுப் பண்பாடும் மேற்கத்தைய நாகரிகங்களும் மனிதனை திரிபுவாத வலைகளில் சிக்க வைக்கின்றன. முற்போக்கு இடதுசாரிச் சிந்தனை மற்றும் வாழ்வியல் கூறுகளுக்கான புதிய விழுமியங்களை வாழ்வியல் கோட்பாடுகளை உருவாக்குவதில் நாம் பின்தங்கி வருகின்றோம். இதனால் இளந்தலைமுறையினர் மத்தியில் நம்பிக்கையீனமும் வறட்சியும் மிகுந்த செல்வாக்குப் பெற்று வருகின்றது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று முற்போக்குவாதச் சிந்தனைகளுக்கு மாறாக தொழிற்படக்கூடிய பண்பாடு அனைத்தையும் மேவி வருகின்றது. ஆகவே, நாம் புதிதாகச் சிந்திப்பதும் கால மாற்றங்களை அனுசரித்து நமக்கான கோட்பாடுகளை உருவாக்குவதும் முக்கியம். முற்போக்கு இடதுசாரிச் சிந்தனைப் பாரம்பரியம் மாறிவரும் நிலைமைகளை விளங்கி மாற்றங்களை உருவாக்குவதற்கான புதிய கருத்தாக்கங்களை உருவாக்க வேண்டும். நம்மைப் போன்ற எழுத்தாளர்கள் இனிவரும் தலைமுறையினருக்கு விட்டுச் செல்லவேண்டிய தடம் ஆழமானது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# வாழ்வியல் கோட்பாடுகள் ஒரு மாயவலை



தேவி பரமலிங்கம்

நமது நாட்டில் மட்டும் என்றில்லாமல் உலகின் எல்லாப் பாகங்களிலும் நாகரிக பரிமாற்றங்கள் முன்னேறிய நாடுகளில் இருந்தே பரவிவந்துள்ளன. அவ்வாறே கல்வி, மருத்துவம், ஆய்வுகள் மற்றும் கலை, இலக்கியம், திரைப்படம், இசை மட்டும் அல்லாமல் ஆபரணம், உடல், உடை சார்ந்த அழகியல் கலைகள் முதலானவை சர்வதேச நாடுகளின் ஊடாக காலக்கிரமங்களில் எமது நாட்டிற்குள்ளும் உள் நுழைந்துள்ளன. அவை தலைநகர் கொழும்பில் இருந்து கிராமங்களுக்கு எடுத்து வரப்படுகின்றன.

இதேவேளை, பெண்களுக்கான கல்வி பாரம்பரியம் யாழ்ப்பாணத்தில் இருந்தே இலங்கைத்தீவின் ஏனைய பிரதேசங்களுக்கு விஸ்தரிப்புக்குள்ளானதென அறியப்படும்போது நமக்கெல்லாம் பெருமையாகத் தான் இருக்கிறது. கந்தபுராணக் கலாசாரக் குழுவிற்குள் மூழ்கிக் கிடந்த நமது பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்காக எம்மைக் கட்டி ஆண்ட வெள்ளையர்களால் உடுவிலில் ஆரம்பிக்கப்பட்ட மகளிர் கல்லூரியே இலங்கையில் முதன்முதலில் தொடங்கப்பட்ட பெண் கல்விக்கூடமாகத் திகழ்கிறது.

இதுபோலவே அரசியல் சிந்தனை சார்ந்த பார்வைகளும் எங்கள் மத்தியில் தோன்றலாயின. 1960களுக்கும் சற்று முன்பின்னாக வடபகுதிக்கு கார்த்திகேசன் மாஸ்டர் போன்றவர்களால் மார்க்சிய சிந்தனைகளின் முற்போக்கு பரிமாணம் சிறுகச்சிறுக வரத்தொடங்கின. அதற்கு முன்பாக பிற்போக்கு சிந்தனைகளைக் கொண்ட சமயங்கள் சார்ந்த சிந்தனைகளே எம்மவர் மத்தியில் மிக நீண்டகாலமாக வாழையடி வாழையாக வேரூன்றி இருந்ததாக ஊகிக்கவும் முடிந்துள்ளது. இதன்பின்பாக, தமிழகத்தில் திராவிடக் கழகம் பெரியாரால் தோன்றிய சீர்திருத்தச் சிந்தனைகள் பரவலாக வளரத் தொடங்கின. பிற்காலத்தில் முற்போக்குவாதிகள் என்று இனங்காணப்பட்ட பலர் திராவிடக் கழகம் மற்றும் அறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்ந்த தீவிர சீர்திருத்தக் கருத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

1960ஆம் ஆண்டில் தினகரன் இதழின் ஆசிரியராகப் பணியேற்ற க.கைலாசபதி முற்போக்கு இடதுசாரிச் சிந்தனையாளர்களின் படைப்புகளை ஏற்று தினகரன் வார இதழில் வெளியிடத் தொடங்கினார். இதனால், 60 களில் முற்போக்குவாதம் கலை இலக்கியப் பண்பாட்டுத் துறைகளில் கோலோச்சும் விடயமாக இருந்தது. இதனிடையே பண்டிதர்களுக்கும் பாமர எழுத்தாளர்களுக்குமான இழிசனர் வழக்கு இலக்கியம் சம்பந்தமான காரசாரமான பிரதிவாதங்கள் நடந்தேறியதும் வரலாற்றுப் பதிவுகளாகின. கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த தென்பகுதி அரசியல்வாதிகள் இலக்கியக்காரர்களின் பாதிப்பும் இங்கே பரவலாகத் தோன்றியிருந்தன.

வரலாற்று ரீதியில் ரஷ்ய, சீனக் கம்யூனிஸ்ட் கட்சிகள் என பிளவுபட்டதால் ஒரே பாசறையில் இருந்த அரசியல் கட்சி உறுப்பினர் என்றில்லாமல் மார்க்சிய சிந்தனை வழியில் முற்போக்கு இலக்கியம் படைத்தவர்கள் மத்தியிலும் பிளவுகளைத் தோற்றுவித்தன. இந்த உடைவும் வெடிப்புகளுமே காலப்போக்கில் முற்போக்குவாதிகளின் போக்குகளில் விரிசல்களை ஏற்படுத்தின. தொடர்ந்து தமிழ்த்தேசிய சிந்தனைகளின் எழுச்சி முற்போக்கு அணியில் இருந்த கலை இலக்கியவாதிகளையும் பாதித்தது. தென்பகுதியில் வெளிப்பட்ட இனவாத அரசியல் இடதுசாரி அரசியலையும் பாதித்தது. இந்த நிலைமைகள் முற்போக்கு இடதுசாரிப் பண்பாட்டு செயற்பாட்டாளர்கள் மத்தியில் பல்வேறு புதிய அனுபவங்களை கற்றுக்கொடுத்தது. பல்வேறு கேள்விகளை உருவாக்கியது.

இளந்தலைமுறையினர் பொதுவாக பல்கலைக் கழகங்களில் படிக்கின்ற போது முற்போக்கு இடதுசாரிச் சிந்தனைகளால் ஆகர்ஷிக்கப்படுவது இயல்பு. கால ரீதியில் ஏற்படும் நெருக்கடிகளையும் அனுபவங்களையும் முகம் கொடுத்து தமது

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி

இ-பேப்பர்

இப்பொழுது


புதுப்பொலிவுடன்..!




VIRAKESARI
வீரகேசரி

epaper.virakesari.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Cey) (Pvt) Ltd, at No 185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org